திருவரங்கநாதர் திருக்கோயில்



ஆராத அருளமுதம் பொதிந்தகோயில்
அம்புயத்தோன் அயோத்தி மன்னற்கு அளித்தகோயில்
தோலாத தனிவீரன் தொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாங்கோயில்
சேராத பயனெல்லாம் சேர்க்கும் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினையனைத்தும் தீர்க்கும் கோயில்
திருவரங்கமெனத் திகழும் கோயில் தானே — ஸ்ரீ தேசிகப் பிரபந்தம்

திருவரங்கநாதர் திருக்கோயில்

அன்பளிப்பு

வித்துவான்

கோ. மு. முத்துசாமி ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

அருள்மிகு திருவரங்கநாதர் திருக்கோயில்

திருவரங்கம்

முதற்பதிப்பு — 1987
விலை ரூ. 12/-

பொருளடக்கம் பக்கம்

1. அமைவு இடம் 1
2. பெயர் விளக்கம் 1
3. தனிச் சிறப்பு 2
4. வரலாறு 2
5. தலவிருட்சம் 4
6. மூர்த்தங்களும் தெய்வத் திருவுருவங்களும் 5
(1) எல்லைக் காவல் தெய்வங்கள்
(2) கோயில் வெளிப்பகுதி மூர்த்தங்கள் 5
(3) கோயில் மூர்த்தங்கள் 7
அரங்கநாதர் 34
7. தீர்த்தங்கள் 36
8. கோபுரங்கள் 39
9. பிராகாரங்கள் 48
10. மண்டபங்கள் 51
11. சிற்பங்கள் 61
ஓவியங்கள் 67
12. கல்வெட்டுகள் 68
13. பூசைகளும், திருவிழாக்களும் 79
14. கோயிலினால் சமயம், சமுதாயம், கலை பண்பாடு முதலிய துறைகளில் ஏற்பட்டநன்மைகள்
சமயம் 94
சமுதாயம் 99
கலைகள் 101
பண்பாடு 102
15. நிர்வாகம் 103
16. திருவரங்கம் அரங்கநாதர் கோயிலைப் பற்றிக் கூறும் நூல்கள் 109
ஆழ்வார் பாடல்களில் ஓதுவதற்காகத் தெரிந்தெடுக்கப் பெற்றவை 112
இணைப்பு - இராயகோபுரம் பற்றிய குறிப்பு

வி. வி. சுவாமிநாதன்
அமைச்சர்
சுற்றுலா, மதுவிலக்கு மற்றும்
மின் துறை

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

நாள் : 17-3-1987

அணிந்துரை

திருவரங்கநாதர் திருக்கோயில் என்ற இந்த நூல் ஆசிரியர் திரு. கோ. மு. முத்துசாமி அவர்கள் மிகச் சிறந்த முறையில் சுவையுள்ள நாவலைப் படிப்பது போல் வாசகர்கள் படிக்கும்படி வசீகரமாக எழுதியிருக்கிறார். ஆன்மீகத்தில் ஆர்வமுள்ளவர்கள் மாத்திரம் தெரிந்து கொள்ள வேண்டியதோடு வரலாறு, சிற்பம், ஓவியம், கட்டிடக்கலை பற்றி புரிந்துகொள்ளவும் அவைகளின் தனிச் சிறப்புகள் விளக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயம் கோயிலை ஏற்கனவே பார்த்தவர்களாயிருந்தாலும் மீண்டும் பார்க்க இந்நூல் தூண்டுகிறது.

இராயகோபுரம் அல்லது இராசகோபுரம் என்று எப்படி அழைக்கப்பட்டாலும் இது ஆசியாவிலேயே மிகப்பெரிய கோபுரமாக கட்டப்படுவதும் அது தமிழ் நாட்டை 3ஆவது முறையாக முதலமைச்சராக மாண்புமிகு **எம். ஜி. ஆர்.** ஆண்டு கொண்டிருக்கும் போது குடமுழக்கு செய்யப்படு வதும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும்.

இத்தருணத்தில் பலகோணங்களில் திருவரங்கம் அரங்கநாதர் கோயிலைப் பற்றி ஒரு ஆராய்ச்சி நூலை எழுதிய ஆசிரியர் இந்து சமய அறநிலையத்துறையினால் பாராட்டுக்குரியவர்.

அன்புள்ள,

வி. வி. சுவாமிநாதன்

அணிந்துரை

சுகவனேஸ்வர் ஐ. ஏ. எஸ்.
ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
வணிகவரி மற்றும் அறநிலையத்துறை தலைமைச் செயலகம்
சென்னை-600 001.

108 வைணவத் திருத்தலங்களில் முதன்மையாகக் கருதப் படுவதும், பூலோக வைகுண்டம் மற்றும் பெரிய கோயில் எனப் பெருமை வாய்ந்ததும் ஆழ்வார்களாலும், ஆசார்யர்களாலும் மங்களா சாசனம் செய்யப் பெற்றதுமான ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலின்கண் சுமார் 300 ஆண்டுகளுக்கும் மேலாக அச்சுத தேவராயரால் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 'மொட்டைக் கோபுரமாக' நின்று போயிருந்த ராயகோபுரத்தின் மகா சம்புரோக்ஷணத்தை முன்னிட்டு அத்திருந்தலத்தின் சகல விவரங்களையும் தனிச்சிறப்புகளையும் கூறும் அருமையான இந் நூல் பாராட்டுக்கு உரியதாகும்.

இந்த அரிய நூலினை நல்ல முறையில் எழுதித் தமிழ் உலகுக்கு வழங்கியவர் ஓய்வுபெற்ற ஐ. ஏ எஸ். அதிகாரியான உயர்திரு கோ. மு. முத்துசாமிபிள்ளை அவர்கள். இவர் தமிழ் இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு உடையவர். தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்கித் தற்போது தமிழகத்திலுள்ள ஆலயங்களைப் பற்றிய ஆராய்வில் ஈடுபட்டு இருப்பவர். இவர் இந்த ஆண்டு பிப்ரவரித் திங்களில் தில்லை நடராஜர் கோயில் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இது போன்று 'தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில்' என்ற நூலை எழுதினார். தற்போது திருவரங்கத்தில் நடைபெறப் போகும் மகாசம்புரோக்ஷணத்தை முன்னிட்டு இந்நூலை எழுதி யுள்ளார். தமிழுக்கும் சமயத்துக்கும் உயர்திரு முத்துசாமிபிள்ளை ஆற்றும் தொண்டு போற்றத்தக்கதாகும்.

இந்நூலில் ஆசிரியர் தல வரலாறிலிருந்து ஆரம்பித்து ஒவ் வொரு சந்நிதியைப் பற்றி விளக்கமாக விவரித்துக் கொண்டு போகும் போது நாமே ஒவ்வொரு சந்நிதியாகத் தரிசித்துக்கொண் டே போவது போல் தோன்றுகிறது. அதுபோன்றே ஆசிரியர் தீர்த்தங்கள், மண்டபங்கள், சிற்பங்கள, ஓவியங்கள் ஆகியவற் றைப் பற்றியும் நன்றாக விவரித்துள்ளார். மேலும் இக்கோயிலில் காணப்படும் சோழ, பாண்டிய ஹோஸ்சால மன்னர்களின் கல் வெட்டுக்களில் காணப்படுகின்ற விவரங்களையும் தொகுத்து அளித்துள்ளார். கடைசியாக இக்கோயிலில் நடைபெறும் பூசை கள் மற்றும் திருவிழாக்களைப் பற்றியும் கூறியுள்ளார்.

எல்லாவகையிலும் சிறப்பாக அமைந்துள்ள இந்நூல் இத் தலத்தைப் பற்றி அதிகமாக தெரியாதவர்களுக்கு ஒரு சிறந்த வழி காட்டி நூலாகப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

அணிந்துரை

சுந்தரமூர்த்தி ஐ. ஏ. எஸ்.
இந்துசமய அறநிலைய ஆணையாளர் ஆட்சித்துறை,
சென்னை–600 034.

திருவரங்கநாதர் கும்பாபிடேக விழாவின் போது பொதுவாக இக்கோயிலைப் பற்றியும். சிறப்பாகத் தற்போது கட்டி முடிக்கப் பெற்றுள்ள கோபுரத்தைப் பற்றியும் ஒரு நூல் வெளியிடப்படுவது மிகப் பொருத்தமாகும்.

இந்நூலாசிரியர் முன்னாள் மாவட்ட ஆட்சியர், இந்நாள் தஞ்சைத் பல்கலைக்கழகக் கோயில்களஞ்சிய சிறப்பாசிரியர் கோ. மு. முத்துசாமிபிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு) இக்கோயிலின் அமைவு இடம், பெயர் விளக்கம், தலபுராணம், தலவிருட்சம், இக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஏறத்தாழ 45 மூர்த்தங்கள், தீர்த்தங்கள், கோபுரங்கள், பிராகாரங்கள், மண்டபங்கள் ஆகியவற்றைப் பற்றியுப் தெளிவுற எடுத்துக் காட்டியுள்ளார். மற்றும் கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் மதிப்பிடத்தக்க பல விவரங்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கோயில்களஞ்யத்தின் அடிப்படையில் எழுதியுள்ளார். இறுதியில் இக்கோயிலினால் கிடைக்கப்பெற்ற கலைச் செல்வங்களும், வரலாற்று உண்மைகளும், சாதி வேற்றுமையற்ற உணர்வும் பற்றி நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்நூலைத் தம் கையில் வைத்துக்கொண்டு இக்கோயிலுக்கு வருவோர்கள் பல சந்நிதிகளைக் கண்டறிந்து அவற்றின் பெருமைகளை அறியமுடியும்.

இத்தகைய நூலை இயற்றி தந்த ஆசிரியருக்கு நனறி.

இந்நூலை வெளியிடுவதற்கு முன்வந்த நிர்வாக அலுவலரையும், தக்கார் அவர்களையும் பாராட்டுகிறேன்.

திருவரங்கம் திருக்கோயில்

சிறப்புரை

டாக்டர் தி. முத்துகண்ணப்பர், எம்.ஏ., பி.எச்.டி.,

பாரதப் பெருநாட்டுப் புண்ணிய நகர்களுள் முக்கியமான தொன்று திருவரங்கம். தென்னாட்டுக் கோயில்களுள் அரங்கநாதர் பள்ளி கொண்டுள்ள இத்திருக்கோயில் மிகச் சிறந்த பெயரும் புகழும் பெற்றுள்ளது. இது திருவரங்கம், அரங்கம், கோயில், போக மண்டபம், பூலோக வைகுண்டம் என்று பலபெயர்களில் விளங்கி வருகிறது.

மதிப்புரையைப் பெறும் இந்நூல், திருவரங்கத் திருக்கோயி லின் உண்மைச் செய்திகள் பலவற்றை விளங்கக்கூறும் வரலாற்று நூலாகும்.

இந்நூலாசிரியர் திரு. கோ முத்துசாமிபிள்ளை அவர்கள் மாவட்ட அதிகாரியாகப் பல ஆண்டுகள் அரும்பணி புரிந்தவர். மாவட்ட அலுவலர் பலருக்குக் இல்லாத தனித்தகுதியும், சிறப்புத் தகுதியும் படைத்தவர். தமிழில் பெரும் புலமை பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் பட்டம் பெற்றவர். பல்வேறு சமயங்களை நன்கு அறிந்தவராய். சிறப்பாகச் சைவ சித்தாந்தத்தையும் ஆகம விதிமுறைகளையும் கற்றுத் துறை போயவர். சைவ சமயம், வழிபாட்டு முறைகள், திருத்தலங்கள் ஆகியவை பற்றி சைவப் புண்ணியக் கண்கள் திருமயிலையும் பூம் பாவையும்' திருவான்மியூர் தலபுராணம் (நாடகம்) ஆகியவை போன்ற கோயில் நூல்களையும் திரு முருக வழிபாடு, சிவராத்திரி வழிபாடு ஆகியவை போன்ற வழிபாட்டு நூல்களையும் இயற்றி யுள்ளார்.

இரு ஆண்டுகளாக தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினர் வேண்டுகோளுக்கிணங்கப் தென்னாட்டுத் திருத்தலங்களின் வரலாற்றினை எழுதும் திருப்பணியில்—பெரும்பணியில் ஈடுபட் டிருக்கிறார். இப்பெரியார், மிகுந்த ஆர்வத்துடனும், இளைஞர் களிடமும் காணப்பெறாத சுறுசுறுப்புடனும் அடுத்தடுத்துத் தென்னாட்டுத் திருத்தலங்கள் பலவற்றிற்கும் நேரிலே சென்று, கண்டு, உரிய செய்திகளையெல்லாம் நன்கு எழுதி வருகிறார். எனவே அனைத்து தகுதிகளும் ஒருங்கே பெற்றுள்ள திரு பிள்ளை யவர்களால் தென்னாட்டின் — ஏன் நம் இந்தியப் பெருநாட்டின் தலைசிறந்த திருக்கோயில்களில் ஒன்றான திருவரங்கத்தின் வர லாறு படைக்கப்படுகிறதென்றால், அது உண்மையிலேயே பெரு மைக்குரியது. தென்னாட்டு மக்களின் குறிப்பாகச் சைவசமய மெய்யன்பர்களின் புண்ணியப்பயன் என்றுகூறின் மிகையாகாது.

இந்நூல் திருவரங்கம், திருவரங்கத் திருக்கோயில் இவை பற்றிய தெளிவான ஆராய்ச்சி நூலாகத் திகழ்கிறது. அனைத் துச் செய்திகளையும் நுணுகி ஆராய்ந்து கண்டு தக்க ஆதாரங் களுடன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கோயில் வழிபட்டால் விளையும் நலன்கள், சமயம், சமுதாயம், கலை, பண்பாடு முதலிய துறைகளில் ஏற்பட்டுள்ள நன்மைகள் நிர்வாகம், சொத்து விவரம், அணிகலன்கள், வருமானம், கோயில் பற்றி குறிப்பிடும் நூல்கள், கோயில் அமைப்பு, வரைபடம் பிராகாரங்கள், மூர்த்தங்கள், தீர்த்தங்கள், கோபுரங்கள், மண்டபங்கள் இவை பற்றி விரிவான தெளிவான விளக்கங்கள் மிகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

திருவரங்கக் கோயில் பற்றிய வரலாற்றுச் செய்திகளை உரிய இடங்களில், ஆங்காங்கே முறையாக ஆசிரியர் குறிப்பிட்டுச் செல்கிறார். இராமாநுஜரின் சமயத்தொண்டினை நன்கு விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சமயம் என்றும் தலைப்பில் வைணசமயத்தைப்பற்றிய விளக்கமும் இராமநுஜர் நிலை நாட்டிய விசிஷ்டாத் வைதம் இன்னதென இந்நூலாசிரியர் எடுத்துக் கூறியதும் போற்றத் தக்கன. (பக்கங்கள் 94—96)

முன்னர்க் குறிப்பிட்டுள்ளபடி, இந்நூல் திருவரங்க வரலாறு திருவரங்கக் கோயில் களஞ்சியம் என்று கூறின் மிகையாகாது.

இது, திருவரங்கம் திருக்கோயில் உள்ளளவும் பொன்றாது நின்று நிலைத்து விளங்கக் கூடிய அரிய பெரிய நூல்; திருநூல் உழைப்பையே உயிராய் எண்ணி உவப்புடன் திருப்பணி செய்து வாழும் நூலாசிரியர், பெரியார் வித்துவான் கோ. மு. முத்துசாமி பிள்ளையவர்கள் திருவரங்கம் திருக்கோயில் கோபுரம் போல் புகழ் ஓங்கி வாழ்வாராக !

இந்த நூலினைக் கற்போர் திருவரங்கநாதரைத் தரிசித்த பலனை எய்தி இன்புற்று வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

பதிப்புரை

தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகக் கோயிற்களஞ்சியத்திற்காக விவரங்களைத் திரட்டக் கோயிற்களஞ்சியச் சிறப்பாசிரியர் என்ற முறையில் திருவரங்கம் கோயிலுக்கு யான் சென்றிருந்த போது யான் திரட்டும் விவரங்களின் அடிப்படையில் இக்கோயில் பற்றி ஒரு சிறு நூல் எழுதித்தருமாறு திருவரங்கம் கோயிலின் அந்நாள் நிர்வாக அலுவலர் / துணை ஆணையாளர் திருவாளர் முனுசாமி அவர்கள் என்னிடம் கூறினர். பின்னர் இக்கோயில் விவரங்களைத் திரட்டி இத்தகைய நூலை எழுதுமாறு தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் வி. எம். சுப்பிரமணியம் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

அதன் பின்னரே இதற்காக இக்கோயிலுக்கு தொடர்ந்து யான் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நூல் எழுதுவதற்காகத் தேவைப்பட்ட விவரங்களை எனக்கு அளிக்க இக்கோயில் நிருவாக அலுவலர் தம் பணியாளர் திரு. இலட்சுமி நாராயணனை நியமித்தார். இவரும் இவ்வகையில் எனக்குத் தொடர்ந்து உதவி புரிந்தனர். திருவரங்கம் கோயில் பட்டர் பெருமக்கள் தங்கள் தங்கள் கோயில்களைப்பற்றி தங்களுக்குத் தெரிந்தவற்றை எடுத்துரைத்தார்கள்.

புத்தூர் அட்வகேட் திருவாளர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் திருவரங்கம் திரு. கண்ணன் சுவாமிகளும் சில விவரங்கள் தந்துதவினார்கள். இவர்கள் எல்லாருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியில்யான் எழுதித்தொகுத்த விவரங்களைத் திருவரங்கம் ஸ்ரீமகாபிரபு ஸதன ஆன்மிக சபை ஸ்தாபகர் அண்ணா ஸ்ரீ என். ரங்கராஜபட்டர் அவர்கள் இரண்டு நாள்கள் ஆய்ந்து பார்த்து ஆங்காங்குச் சில திருத்தங்களும் விவரங்களும் தெரிவித்தார்கள். இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவமையக் கோயிற் களஞ்சியத்திற்குரிய குறிப்புரைகளைக் கொண்டு. இந்நூல்எழுதப் பெற்றுள்ளது. என்னும், குறிப்புடன் இந்நூலை வெளியிட தஞ்சாவூர்ப் பல்கலைத் துணைவேந்தர் டாக்டர். ச. அகஸ்திய லிங்கம் அவர்கள் அன்பு கூர்ந்து, அனுமதி அளித்துள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், இவ்வகை

யில் இந்நூல் கும்பாபிடேகத்தின் போது வெளியிடுவதற்கென முதல் பதிப்பாக இதனை எழுதித் தந்துள்ளேன்.

இதனைத்திருவரங்கநாதர் கோயில்நூலாக வெளியிடுவதுபற்றி இந்துசமய அறநிலையத்துறை ஆணையாளர் சுந்தரமூர்த்தி, ஐ.ஏ.எஸ். அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் இக்கருத்தை ஆதரித்தார்கள்.

இந்நூல் திருவரங்கநாதர் கும்பாபிடேகத்தின்போது வெளியிடப் படுதல் பொருத்தம் என இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரசுச் செயலாளர் திரு. சுகவனேசுவரர் தமது கருத்தை உதவினார்கள். திருவரங்கநாதர் கோயில் நிருவாக அலுவலர் இந்நூலை இக்கோயிலின் சார்பில் வெளியிட ஒப்புக்கொண்டதுமன்றி இதனை ஆராய்ந்து பார்த்து இதற்குச் சில திருத்தங்கள் தேவை எனக் கண்டறிந்து அவற்றை வைணவ அறிஞர் திரு. திருமலை சுவாமி அய்யங்கார் அவர்களைக் கொண்டு தெரிவித்தார். இத்தகைய முயற்சிகள் மேற்கொண்டு இந்நூல் வெளிவருவதற்கு இக்கோயில் நிருவாக அலுவலர் திரு. சீனிவாசன் அவர்கள் ஏற்றுக் கொண்டார். இவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்து.

இந்நூல் சிறந்த முறையில் வெளிவரவேண்டும் என்றும் நோக்கில் என்னை 26-2-87-ஆம்நாளில் பாராட்டிய இக்கோயில் தக்கார் டாக்டர் கோபிநாதன் அவர்களுக்கும் யான் கடமைப் பட்டுள்ளேன்.

இந்நூலில் குறிப்பிடப்பட்ட அளவுகள் ஏறத்தாழக் கணக்கிடப்பட்டவை. இதில் குறிக்கப்பட்டவற்றிற்குத் திருத்தம் தேவைப்படின் அன்பு கூர்ந்து தெரிவிக்கக் கோருகிறேன்.

திருவான்மியூர்
15-3-87

கோ. மு. முத்துசாமி

ஏற்புரை

திருவரங்கநாதர் திருக்கோயில் செயல் பணி ஏற்கு முன்னர் சென்ற சனவரி மாதம் தலைமைச் செயலகம் சென்றிருந்தபோது இந்நூலாசிரியரும், முன்னாள் மாவட்ட ஆட்சியருமான கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்கள் இந்நூல் இக்கோயில்கும்பாபிடேகத் தின்போது வெளியிடப்படுவதற்காக எழுதப்பெற்றது எனத் தெரிவித்து என்னிடம் தந்தார்.

இந்நூல் இக்கோயில் கும்பாபிடேகத்தின்போது வெளியிட லாமா என்பதை ஆய்ந்து பார்த்து இக்கோயில் தக்கார் அவர் களிடம் தெரிவித்தேன். இதை அச்சிடுமுன் இது கூர்ந்து ஆய்ந்து பார்க்கத்தக்கது எனக் கருதி வைணவ அறிஞர் திருவாளர் திருமலை சுவாமி அய்யங்கார் அவர்களிடம் கருத்துக்கோரினேன். சில திருத்தங்களும், கூடுதல் விவரங்களும் தேவை என அவர்கள் தெரிவித்ததால், கடிதமும், தந்திச்செய்தியும் அனுப்பி திரு கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்களை வரவழைத்தேன். அவர்களும் காலந்தாழ்த்தாது இங்கு வந்து திருவாளர் திருமலை சுவாமி அய்யங்கார் அவர்களுடன் கலந்து பேசி இந்நூலை உடனடியாக அச்சிடுவதற்கு உருவாக்கிக் கொண்டார்.

இந்நூல் சென்னையிலே அச்சிடும்போது பார்வைப் படிகளை உடனுக்குடன் திருத்தி உரிய நாளுக்கு முன்னதாக இந்நூலின் படிகள் இங்குவந்து சேருமாறு கவனிக்கக் கோரினேன். அவரும் ஒப்புக் கொண்டனர். இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் சிறந்த முறையில் வெளிவரும் என்னும் நம்பிக்கையில் இவ்வேற்புரைகளை எழுதுகிறேன்.

தற்போது எழுதப்பெற்று வெளிவரும் நூல் அளவில்சிறிதெனி னும் ஆனால் பல பொருள்கள் பல இது கூறுவதாய் இது பொரு ளில் பெரிது. இந்நூலைஒருவர் ஒருமுறை படிப்பார்எனில் அடுத்து அவர் இக்கோயில் கோபுரங்கள், தீர்த்தங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை ஓரளவாயினும் கூர்ந்து கவனிப் பார் என்பது திண்ணம். இக்கோயில் பூசைகளையும், வழிபாடு களையும் பற்றி இந்நூலிலிருந்து தெரிந்து கொள்ளும் அன்பர்கள் இக்கோயிலின் திருவிழாக்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள விரும்புவார்கள் என்பதை நம்பலாம். இந்நூலை நன்கு படித்துப் பார்த்து இங்கு நடைபெறும் பூசைகளிலும், திருவிழாக்களிலும் தொடர்ந்து பங்கேற்குமாறு அன்பர்களை உளமார வேண்டுகிறேன்.

பேரன்பு கூர்ந்து இந்நூலுக்கு அணிந்துரை அளித்துள்ள சுற்றுலா, மதுவிலக்கு மின்துறை பற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு **வி. வி. சுவாமிநாதன்** அவர்களுக்கு மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் ஸ்வாமிகளுக்கு பணிவான வணக்கங்கள் செலுத்துகிறேன்.

இந்நூலை வெளியிடுவதற்காக எனக்கு ஊக்கம் அளித்த அறநிலைய ஆட்சித்துறை அரசுச் செயலாளர் திரு சுகவனேசுவர் ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும் எனக்கு இதில் ஏற்பளித்த அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு சுந்தரமூர்த்தி ஐ. ஏ. எஸ் அவர்களுக்கும் எனக்கு ஆதரவளித்த தக்கார் டாக்டர் திரு **கே. எஸ். கோபிநாதன்** எம்.பி.பி.எஸ்.அவர்களுக்கும், தலத்தார் அறங்காவலர் **ஸ்ரீ வேத வியாச ரெங்கராஜ பட்டர் ஸ்வாமிகள்** அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நா. சீனிவாசன் பி.ஏ பி.எல்.
துணை ஆணையர் /
செயல் அலுவலர்

திருவரங்கம்
9-3-1987

திருவரங்கநாதர் திருக்கோயில் குறிப்புரை

அருள்மிகு திருவரங்கநாதர் திருக்கோயிலின் இராயகோபுரம் என விளங்கிவரும் இராஜகோபுர மகாசம்ப்ரோட்சணத்தின் நினைவாக இந்நூலை இத்திருக்கோயிலார் வெளியிடுகின்றனர்.

விசயநகரப் பேரரசின் மாமன்னராகத் திகழ்ந்த கிருஷ்ண தேவராயருக்குப் பின் அரசேற்ற அச்சுததேவராயர் (கி.பி. 1530 –1543) தெய்வ வழிபாட்டில் திளைத்தவர். அவர் தம் ஆட்சி முறையில் காஞ்சி, திருப்பதி, காளத்தி, திருவண்ணாமலை ஆகிய தலங்களுக்குச் சென்று ஆங்காங்கு எழுந்தருளிய மூர்த்திகளை வழிபட்டுப் பின்னர் திருவரங்கம் வந்தெய்தினர். திருவரங்கநாதர் திருக்கோயிலுக்கு ஏற்றவாறு பெருங்கோபுரம் அமைக்கக் கருதி இதனைக் கட்டத் தொடங்கினார். அவர் கட்டியது மேல்தளத் தோடு, சிகர அமைப்பின்றி ஒரு மொட்டைக் கோபுரமாக இருந்தது. இவருக்குப் பின்னர் அரசேற்ற சதாசிவ மன்னரால் இக் கோபுரம் கட்டி முடிக்கப்படவில்லை

சில ஆண்டுகளுக்குப் பின்னர் இக்கோயிலுக்கு எழுந்தருளிய **காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர சங்கராச்சாரியார் சுவாமிகள்** இக்கோபுரம் எவ்வாறாயினும் கட்டி முடிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

மேலும் சில ஆண்டுகளுக்குப் பின்னர், தென்னிந்தியாவிலே பழம்பெருமை மிக்க வைணவமடங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ அஹோபில மடத்தின் 44ஆவது பீடாதிபதியாக விளங்கிவரும் **ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகள் ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வேதாந்த தேசிக யதீந்திரர் மகா தேசிகர்** களவில் திருவரங்கநாதரே அருள்பாலித்தற்கேற்ப, இக்கோபுரத்தைத் தாமே கட்டி முடித்துக்கொடுப்பதாகச் சுவாமிகள் அவர்கள் உறுதிகொண்டார். இவ்வாறு அவர்கள் கட்டி முடித்துத் தந்துள்ள கோபுரம் ஓங்கி வளர்ந்து தென்கிழக்கு ஆசியாவிலேயே மிக உயர்ந்த கோபுரமாகத் திகழ்கிறது.

இக்கோபுரத்தின் அளவு விவரங்களும், இதன் திருப்பணிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் இந்நூலின் இணைப்பில் கொடுக்கப்படுகின்றன.

தற்போது டாக்டர் கே. எஸ். கோபிநாதன் பி. எஸ். சி., எம். பி. பி. எஸ். இக்கோயில் தக்காராகவும், திரு வேத வியாச ரெங்கராஜ பட்டர் ஸ்வாமிகள் தலத்தார் அறங்காவலராகவும் உள்ளார்கள்.

இக்கோயில் அலுவலக 9-3-1987 ஆம் நாளிட்ட 557/95டி3 எண் கடிதம்

அணியார் பொழில் சூழ் அரங்க நகரப்பா !
துணையேன் இனி நின் அருளல்ல தெனக்கு
மணியே ! மணி மாணிக்கமே ! மது சூதா !
பணியாய் எனக்குய்யும் வகை பரஞ்சோதி

பெரிய திருமொழி 11—8—8

— திருமங்கையாழ்வார்

திருவரங்கநாதர் திருக்கோயில்

1. அமைவு இடம்

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கில், 5 கிலோமீட்டர் தொலைவில், தெற்கு வடக்காக 865 மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக 743 மீட்டர் அகலமும் கொண்ட 6,62,695 சதுர மீட்டர்ப் பரப்பில் (167 ஏக்கர் நிலத்தில்) திருவரங்கநாதர் கோயில் அமைந்துள்ளது.

2. பெயர் விளக்கம்

மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றிய நீர்ப்பெருக்குத் தனது நீர் வளத்தால் காவை (சோலைகளை) விரித்தமையால் (பெருக்கியதால்), இது காவிரி என்னும் பெயர் பெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளிக்கு வடதிசையில் இந்தக் காவிரியின் ஒரு பகுதி பிரிந்துசென்றுஓரிடத்தைக்கொள்கிறது. இந்தஇடமே கொள்ளிடம் இந்த இடத்தில் பாய்ந்து செல்லும் கிளைநதி 'கொள்ளிடம்' என்னும் பெயர் பெற்றுள்ளது. காவிரி, கொள்ளிடம் ஆகிய இவ்விரண்டிடையே உள்ள அரங்கம் எனப்படும் 'ஆற்றிடைக்குறை' யில், வைகுந்தப் பெருமாள் அரங்க விமானத்தில் சயனித்திருந்த கோலத்தில் வைகுந்தத்திலிருந்து இங்கு எழுந்தருளியதால் இந் நிலப்பரப்பு 'அரங்கம்' என்னும் பெயரில் விளங்கி வருகிறது.[1] ஆழ்வார்களுடைய பாடல்கள் பல இந்தத் தலத்தை அரங்கம் எனவும், திருவரங்கம் எனவும் குறிக்கின்றன.[2] ஆழ்வார்கள்பாடல்கள் சில இதனைச் 'சீரரங்கம்' எனக்குறிப்பிடுகின்றன.[3] 'திரு' என்னும் அடைமொழி மேன்மையையும், 'சீர்' என்னும் அடைமொழி நன்மையையும் குறிக்கின்றன. இவ்வகையில் இத்தலம் ஆழ்வார்களுடைய வாக்குகளுக்கேற்பச் 'சீரங்கம்' (சீர் அரங்கம்) என்னும் பெயரிலும், திருவரங்கம் (திரு அரங்கம்) என்னும் பெயரிலும் விளங்கி வருகிறது.

---

1) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் – மயிலை மாதவதாசன் பதிப்பு(1943), பக்கம் - 665.

2) பெரியாழ்வார் திருமொழி - 2-7-2, 4-8-2, 8-4, 9-2, 9-6, 9-7, 9-10, 4-9.
நாச்சியார் திருமொழி – 11-3, 11-6, 11-8, 10.

3) பெரியாழ்வார் திருமொழி – 4-9-7
திருமழிசை ஆழ்வார் – திருச்சந்த விருத்தம் - 50

3. தனிச்சிறப்பு

பொதுவாக நோக்குமிடத்து, வைகுந்தப் பெருமாளே திருவரங்கத்துக் கோயிலில் பள்ளி கொண்டிருப்பதாலும், அப்பெருமாள் மீதும், பல உருவங்களில் பல பெயர்களில் பிற வைணவத் தலங்களில் காட்சியருளும் அப்பெருமாள் மீதும் ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் அனைத்துமே திருவரங்கப் பெருமாள் மீது பாடப்பெற்றவை என்னும் கருத்து நிலவி வருகிறது. சிறப்பாக நோக்குமிடத்து, ஆழ்வார்களால் திருவரங்கப் பெருமாள் மீது குறிப்பாகப் பாடப்பெற்ற பாசுரங்கள் 247 [4] இவ்வகையில் இத்தலம் பெரிய கோயில், பூலோக வைகுண்டம், போக மண்டபம் எனப் போற்றப்பெறுகிறது.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையில், நாதமுனிவர், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, இராமாநுஜர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்கு வீதிப்பிள்ளை, பிள்ளை லோக்காச்சாரியர், திருவாய் மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர் ஆகிய வைணவசமய ஆசிரியர்கள் திருவரங்கத்துத் திருக்கோயிலிலே தங்கி ஆழ்வார்கள் ஏற்றிய ஞானச் சுடர்ப் பேரொளி பலதிசைகளிலும் பரவுமாறு பணியாற்றினர். இவ்வாறு திருவரங்கம் உலகிற்கே வைணவ நடு நிலைவிளக்காக அமைந்துள்ளது.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களுக்கு அப்பால் சகஸ்ராரம் ஆதாரத்தில் இறைவர் வீற்றிருக்கிறார். இம்முறையில் திருவரங்கம் பெரிய கோயிலுள், ஆறு ஆதாரங்களையும் கடந்த நிலையில் உள்ள இராச மகேந்திரன் திருச்சுற்றில் அரங்கநாதர் பள்ளி கொண்டுள்ளார்.

4. வரலாறு

அரிய ஆற்றலைத் தாம் பெறவேண்டுமென்பதற்காகப் பிரம தேவர் அருந்தவம் ஆற்றினார். இத்தவத்திற்கு உகந்த திருமால் அரங்க விமானத்தில் பிரமதேவர் முன் தோன்றினார். அந்நிலையில் பிரமதேவர் அவ்விமானத்தை வலம்வந்து, அதில் எழுந்தருளியிருந்த திருமாலைப் பேரார்வத்தோடு வழிபட்டு, அப்பெருமா

4) 17 ஆவது தலைப்பில் காண்க.

மானார்க்கு எப்போதுமே தாம் வழிபாடாற்றவிரும்பினார். அதற்கு அரங்கநாதரும்இசையவே, அரங்கநாதர் சயனித்திருந்த திருவரங்க விமானத்தைப் பிரமதேவர் தமது சத்திய உலகத்திற்கு எடுத்துச் சென்று முறையாக அதற்கு வழிபாடு ஆற்றி வருவாராயினர். இந்தச் செய்தியைச் சூரியன் புதல்வராகிய மனு அறிந்து அதனைத் தாம்வழிபடச் சத்தியஉலகம் செல்வதற்காகத் தவம் இயற்றினார். இத்தவத்தின் பயனாக, இவர் ஆங்குச் சென்று அங்கு அதனை வழிபட்டுப் பின்னர் நிலவுலகம் திரும்பினார். இதன் பின்னர், உலகமக்களின் நன்மைக்காக அவ்விமானத்தை இந்நிலவுலகிற்குக் கொண்டுவர, மனுவின் புதல்வராகிய இட்சுவாகு விரும்பி அதற்காகத் திருமாலை நோக்கித் தவம் இயற்றினார். இத்தவத்தை ஏற்றுக்கொண்ட திருமாலின் ஆணைக்கேற்பப் பிரமதேவரிடமிருந்து இவ்விமானத்தை இட்சுவாகு மன்னர் பெற்று அதனை அயோத்திக்குக் கொண்டுவந்து சேர்ப்பித்தார். அவருக்குப் பின்னர், அவர் வழிவந்த தசரதர் அதனை வழிபட்டு வந்தார். அவருக்குப் பின்னர், அவர் புதல்வராகிய இராமர், இராவணனை வென்றபின் அயோத்தியில் தமது முடிசூட்டு விழா நடத்தினார். அவ்விழாவிற்கு வந்திருந்த விபீடணர்க்கு இராமர் அரங்க விமானத்தை அளித்தார். விபீடணர் இலங்கையை அறமுறையில் ஆட்சிபுரிய வேண்டும் என அப்போது இராமர் விபீடணருக்கு அறிவுரை வழங்கினார். இவ்வறிவுரையை ஏற்றுக் கொண்ட விபீடணர் அவ்விமானத்தைத் தம் தலைமீது தாங்கித் தெற்கு நோக்கி இலங்கைக்குச் சென்றார். வழியில் காவிரியாற்றில் நீராடுவதற்காக ஆங்கு அவ்விமானத்தைச் சந்திரபுஷ்கரணித் தீர்த்தக்கரையின் மீது வைத்துச் சென்றார். இச்செய்தியை அறிந்த அந்நாட்டுத் தருமவர்ம சோழ மன்னரும் ஆங்கிருந்த முனிவர்களும் சூழ்ந்து வந்தனர். அவர்கள் விருப்பத்திற்கேற்ப விபீடணர் அந்நாள் பூசையையும், அடுத்த நாளில் பிரம்மோற்சவ விழாவையும் நடத்தினார். இதன்பின்னர், அவ்விமானத்தை விபீடணர் இலங்கைக்கு எடுத்துச் செல்ல முயற்சி செய்த போது, அவ்விமானம் சிறிதும் இடம் பெயரவில்லை. அவ்விமானத்தில் சயனித்திருந்த அரங்கநாதரும் தாம் அவ்விடத்திலே இருக்க விரும்புவதாகவும், விபீடணருக்கு நலம் புரியும் வகையில் தாம் இலங்கையை நோக்கியவண்ணமே பள்ளி கொள்வதாகவும் அறிவித்தார். அரங்கநாதரின் இவ்வருளுரைக்கேற்ப, விபீடணர் தாம் மட்டும் இலங்கை நோக்கிச் சென்றார்.[5]

---

5) வால்மீகி இராமாயணம், யுத்த காண்டம், சருக்கம் 128; உத்திரகாண்டம். சருக்கம் 39; சுலோகம் 14 மற்றும் அத்தியாயம் 1 8, சுலோகங்கள் 27 – 30

இவ்வாறு இங்கு எய்திய திருவரங்க விமானத்தை மையமாகக் கொண்டு, தருமவர்ம சோழமன்னர் ஒரு கட்டடத்தை அமைத்தார். இது சிறந்த கோயிலாக அமைந்தது. இக்கோயிலைப் பற்றி நெடுங்காலமாக மக்கள் யாதும் அறிந்துகொள்ள இயலவில்லை. ஏனெனில், பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக, இக்கோயில் மணலில் புதையுண்டு மறைந்தது.

பின்பு, தருமவர்ம சோழமன்னர் மரபில் தோன்றிய மன்னர் ஒருவர் இந்நாட்டில் ஆட்சிபுரிந்து வந்தார். முன்பு புதையுண்டிருந்த இக்கோயிலின் அருகில் ஒரு மரநிழலில் அவர் ஒரு நாள் சிறிதுநேரம் அமர நேர்ந்தபோது, அம்மரத்திலிருந்த கிளி ஒன்று ''வைகுந்தப் பெருமாள் திருவரங்கக் கோயில் இங்குள்ளது, என்னும் கருத்தடங்கிய ஒரு பாடலை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால், இக்கிளி குறிப்பிட்ட கோயிலின் இடத்தைக் கண்டறிய முடியவில்லையே என அம்மன்னர் பெரிதும் வருத்தமுற்றார். அவரது வருத்தத்தைப்போக்கும்வகையில், அரங்க நாதர் அம்மன்னர் கனவில் தோன்றி, அக்கோயில் அமைந்திருந்த இடத்தின் அடையாளத்தைத் தெரிவித்தார். இவ்வடையாளத்தைக் கொண்டு அம்மன்னர் அக்கோயில் அமைந்திருந்த இடத்தை கண்டுபிடித்து, அதன் கருவறையைச் சுற்றிலும் ஒருகோட்டையை அழகுற அமைத்தார்.

இம்மன்னருக்குப் பின்னர், இந்நாட்டில் புகழோடு ஆட்சி புரிந்தவர் நந்தசோழ மன்னர் ஆவார். இவருக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை. ஆயினும், ஒருநாள் ஓர் அல்லிக் குளத்தில் ஒரு தாமரை மலரில் பெண் மகவொன்றைக் கண்டார். அக்குழந்தையை அவர் தமது அரண்மனைக்கு எடுத்துச் சென்று அதற்குக் 'கமலவல்லி, என்னும் பெயரிட்டு, அதனை அருமையாக வளர்த்து வருவாராயினர். அப்புதல்வி தக்க பருவம் எய்திய காலத்தில், ஒருநாள் அரங்கநாதர் கோயிலுக்குச் சென்று அவர் திருஉலாவின் அரிய காட்சியைக் கண்டு அதில் திளைத்து அதன் ஒளிமயத்தில் கலந்துவிட்டார். இப்பெருநிகழ்ச்சி காரணமாக, அம்மன்னர், தாம் வாழ்ந்து வந்த உறையூரில் கமலவல்லியுடனுறை திருவரங்கத்து அழகிய மணவாளருக்காக ஒருகோயில் அமைத்தார். இக்கோயில் இன்றும் உறையூரில் உள்ளது.

5. தலவிருட்சம்

இக்கோயிலின் தலவிருட்சம் புன்னை மரமாகும். இது நான்காம் வடக்குப்பிராகாரத்தில் சந்திரபுஷ்கரணிக்கு வடமேற்கே

அதன் கரையில் ஆறு மீட்டர் சுற்றளவுடன் வளர்ந்த நிலையில் உள்ளது. இதன் அருகில் மற்றொரு புன்னை மரமும் உள்ளது. ஆடி மாத வெள்ளிக் கிழமைகளில், மகளிர் இம்மரத்தை வலம் வந்து வழிபாடு ஆற்றுகிறார்கள்.

அரங்கநாச்சியாரின் சந்நிதிக்கருவறைக்கு வடகிழக்கில் ஒரு மேடையின்மீது வில்வமரம் ஒன்று உள்ளது.

6. மூர்த்தங்களும், தெய்வத் திருவுருவங்களும்

6. 1) எல்லைக் காவல் தெய்வங்கள்

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலுக்குக் கிழக்கு எல்லையில் இருப்புப்பாதை அருகில் செல்லாயி அம்மனும், தெற்கில் காமாட்சியும், மேற்கில் காஞ்சியாயியும், வடக்கில் காளியும் காவல் தெய்வங்களாக இருந்து வருகின்றனர்.

6. 2) கோயில் வெளிப்பகுதி மூர்த்தங்கள்

1) முனியப்பன்

அரங்கநாதர் தெற்கு நோக்கி பள்ளி கொண்டுள்ளார். ஆதலால், இக்கோயிலுக்குப் பெரும்பான்மையினர் தெற்கிலிருந்து வடக்குநோக்கி வருகிறார்கள். இவ்வாறு வரும்போது அவர்கள் முதலில் தெற்கிலுள்ள இராய கோபுரத்தை அடைகிறார்கள். இராய கோபுரத்தின் கிழக்கு உட்புறப் பகுதியில், கூடுதல் காவல் தெய்வமாக முனியப்பர் 3 மீட்டர் சதுரப் பரப்பில் மேற்கு நோக்கியவாறு உள்ளார்.

2) சீனிவாசப் பெருமாள்

முனியப்பன் சந்நிதிக்கு சற்று வடக்கில் 3 மீட்டர்ச் சதுரப்பரப்பில் சீனிவாசப் பெருமாள்சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. இங்குச் சீனிவாசப்பெருமாள் திருவுருவத்திற்கு வலப்புறத்தில் ஆஞ்சநேயர் திருவுருவமும், இடப்புறத்தில் கருடாழ்வார் திருவுருவமும் இருக்கின்றன.

3) திருக்குறளப்பர் : (வாமனர்)

சீனிவாசப் பெருமாள் சந்நிதியை அடுத்து வடக்கில் இராய கோபுரத்தை நேராகக் கடந்து 10 மீட்டர் தூரம் செல்வோமெனில், அந்த இடத்திற்கு நேரெதிரில் மேற்புறத்தில் குறளப்பர் சந்நிதியைக்காணலாம்.இக்கோயில்இங்குள்ள சுற்றுப்புறக் கோயில்களுள் மிகப் பழமையானது. இது ஒரு காலத்தில் 'சந்தியாமடம்' என்னும் பெயரில் விளங்கி வந்ததாகவும், பெருமாளின் ஆணையின்

பேரில், ஆழ்வார்திருநகரியிலிருந்து நம்மாழ்வாரை மதுரகவி ஆழ்வார் அழைத்து வந்ததாகவும், அப்போது நம்மாழ்வார் இம் மடத்தில் தங்கினார் என்பதாகவும் மரபுவழிச் செய்தி கூறுகிறது. நம்மாழ்வார் திருவுருவமும் மதுரகவிகள் திருவுருவமும் இங்கு நன்னிலையில் இருக்கின்றன.

இக்கோயிலில் பெருமாள் வாமன உருவத்தில் காட்சி அளிக்கிறார். இக்கோயிலின் கருவறையுடன் உள் மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகியவை இணைந்துள்ளன. முக மண்டபத்தில் நான்கு வட்ட வடிவத் தூண்களும் மற்றவை ஒவ்வொன்றிலும் ஆறு தூண்களைக் கொண்ட ஆறு வரிசைத் தூண்களும் உள்ளன.

இக்கோயிலின் வெளித் திண்ணையில் வைணவ ஆசிரியராகிய தாத தேசிகர், அவர் துணைவி ஆகியோர் திருவுருவங்கள் 1/2 மீட்டர் உயரத்தில் நிலைபடுத்தப்பட்டுள்ளன.

4) வெளி ஆண்டாள்

திருவில்லிபுத்தூரில், ஓர் ஆண்டு ஆடிப்பூர நட்சத்திரத்தில் பெரியாழ்வார் தமது நந்தவனத்தில் திருத்துழாய்க்கர்க நிலத்தைக் கொத்த, அம்மண்ணின் கீழ்ப் பெண்மகவு ஒன்றினைக் கண்டனர். அம்மகவைத் திருமகள் போல வளர்த்துக் 'கோதை' என்னும் பெயரை அவர் சூட்டினார். அவ்வூர்ப் பெருமாளுக்குச் சாத்தத் தாம் கட்டி வைத்திருந்த மாலையை, ஆண்டாள் நாள்தோறும் தாம் சூட்டிக்கொண்டு அந்நிலையில் தமது அழகைக் கண்ணாடி யில் பார்த்து மகிழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இத்த கைய செயலை ஒருநாள் கண்ணுற்ற பெரியாழ்வார் தம் புதல்வி யின் செயலைக்கண்டித்து,அவர் அந்நாளில் பெருமாளுக்கு மாலை சாத்தவில்லை.

அன்றிரவு பெரியாழ்வார் கனவில் பெருமாள் தோன்றி அந் நாளில் தமக்கு மாலை சாத்தாதற்காகக் காரணம் வினவ, ஆழ்வா ரும் அதற்குக் காரணம் கூறினார். ஆனால், பெருமாளோ ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே தமக்குகந்தது எனத் தெரி வித்தார். அதுமுதல்,'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்னும் பெய ரும், 'ஆண்டாள்' என்னும்பெயரும் அவருக்குவழங்குவன ஆயின. ஆண்டாள் மார்கழித் திங்களில் நாள்தோறும் நீராடி, நோன்பு நோற்று இனிய தமிழ் மாலையாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய திவ்வியப் பிரபந்தங்களைப் பாடியருளினார்.

நாச்சியார் திருமொழியில் 'தாமுகக்கும்' என்னும் தலைப்பில் பத்துப்பாடல்களில் திருவரங்கப் பெருமானை இவர் போற்றி யுள்ளார். திருவரங்கச் செல்வனார் தமது கனவில் தோன்றித் தமக்கு அளித்த அருளுரைக்கேற்பப் பெரியாழ்வார் ஆண்டாளை மணிப்பல்லக்கில் எழுந்தருளச் செய்வித்துப் பிறர் கண்படாதவாறு அதற்குத் தட்டுப் பாயிட்டு மூடித் திருவரங்கத்துக்கு அழைத்துச் சென்றார். அப்போது ஆண்டாள் முதலில் தங்கியது தற்போது வெளியாண்டாள் கோயில் எனப்படும் இடமாகும். இதன் பின்னரே பெரியாழ்வார் அவரை அரங்கநாதர் கோயிலினுள் அழைத்துச் சென்றார்.

இக்கோயிலின் முன்புறத்தில் பதினான்கு கால்களைக் கொண்டுள்ள மண்டபம் இருக்கின்றது, இதற்கு மேற்கில் இரண்டு தளங்களையும் ஐந்து கலசங்களையும் கொண்டகோபுரம் உள்ளது. இதனைக் கடந்து உள் செல்வோமெனில், இக்கோயிலில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளதைக் காணலாம். ஆண்டாளுக்கு ஆடிப்பூரத்தில் விழா இங்குக் கொண்டாடப்பெறு கிறது. ஆடிப்பதினெட்டுப் பெருக்கின்போதும் பங்குனி மாதம் ஆதிபிரம்மோற்சவத்தின் ஆறாம் நாளிலும் அரங்கநாதர் இங்கு வந்து ஆண்டாளிடம் மாலை மாற்றிக்கொண்டு, பின் மூலத்தானம் செல்கிறார்.

கோயில் மூர்த்தங்கள் - ஏழாம் பிராகாரம்

6. 3. 1) தாமோதரக் கிருஷ்ணன்

ஏழாம் பிராகாரத்தின் கிழக்கு நடுப்பகுதியில் மேற்கு நோக்கிச் செல்வோமெனில், ஆறாம் பிராகாரத்தின் நுழைவாயிலினுள் தாமோதரக் கிருஷ்ணன் கோயிலைக் காணலாம். இச்சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இங்குத் தாமோதரன் நின்ற நிலையில் புல்லாங்குழலை இயக்கியவண்ணம் காட்சியளிக்கிறார். கிருட்டிணனைக் கட்டுப்படுத்த யசோதை ஒரு தாமத்தால் (கயிற்றி னால்)உதரத்தில் கட்டினார். இதுகாரணமாகக்கிருட்டிணனுக்குத் (தாம–உதரன்) தாமோதரன் என்னும் பெயர் அமைவதாயிற்று.

ஆறாம் பிராகாரம்

2) மணவாள மாமுனிகள்

ஆறாம் பிராகாரமாகிய தெற்கு உத்தர வீதியின் தென்கிழக் கில் மணவாள மாமுனிகள் (கி. பி. 1370-1443) கோயில் வடக்குநோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் அரங்கநாதர்

உற்சவத் திருவுருவம் உபய நாச்சியார்களுடன் இருக்கின்றது' இக்கருவறையில் மணவாள மாமுனிகள் சாய்ந்திருந்த தூணில் இவரது திருவுருவம் சித்திரவடிவில் தீட்டப்பட்டுள்ளது. மணவாள மாமுனிவர்உற்சவந்திருவுருவம் உபதேசமுத்திரையோடுஉள்ளது.

இவர் பாண்டிய நாட்டில் ஆழ்வார் திருநகரியில் தோன்றினார். இவர் அறநெறிகள் யாவும் தெரிந்தவராய்த் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டராய் இல்லறத்தில் வாழ்ந்து, பின்பு துறவறம் மேற்கொண்டார். இவர் இராமானுசர் மீது 'யதிராஜ விம்சதி' என்னும் நூலை இயற்றினார். இவர் தத்வத்திரயம், இரஹசியத்திரயம், ஸ்ரீவசன பூஷணம், ஆசார்ய ஹ்ருதயம், ஞானசாரம், பரமேயஸாரம், பெரியாழ்வார் திருமொழி, இராமானுசர் நூற்றந்தாதி ஆகிய எட்டு நூல்களுக்கு விளக்கவுரைகள் இயற்றியுள்ளார்; திருவரங்கத்தில் தாம் அமைத்த மடத்தில் 22 ஆண்டுகள் வாழ்ந்துவந்தார். ஆழ்வார் களுடைய திவ்வியப் பிரபந்தங்களையும் அவற்றின் விளக்கவுரை களையும் பரப்புவதில் இவர் பெரும் பங்கேற்றார்.

இவர் ஆற்றிய உபதேசங்களுக்கு அரங்கநாதரே செவி சாய்த் தார் எனவும். அரங்கநாதரே சிறுபிள்ளையாக வந்து மணவாள மாமுனிகளைப் பாராட்டியதாகவும் ஒரு தனியன் (பாடல்)உள்ளது.

இக் கோயிலில் கருவறையோடு முகமண்டபம், முன்மண்டபம் ஆகியவை உள்ளன. கருவறைக்குப் பின்புறம் சொற்பொழிவு மண்டபம் ஒன்றுள்ளது. இக்கோயிலின் கருவறையைச் சுற்றிலும் இவருடைய உபதேசங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவர் பயன் படுத்திய பொற்பாதுகை தற்போதும் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

ஐந்தாம் பிராகாரம்

3) இலட்சுமி நரசிம்மர் கூரத்தாழ்வார்

திருவரங்கத்தில் குடியிருப்பு வீடுகளை ஒழுங்காக வரிசை வரிசையாகக் கொண்டுள்ள வீதிகள் ஆறாம்பிராகாரமாகிய உத்தர வீதியோடு இறுதி அடைகின்றன. இவ்வீதிக்கு அப்பால் இக்கோயிலின் முதன்மைப் பகுதிகள் தொடங்குகின்றன. ஐந்தாம் பிராகாரத்தினுள் மேற்குநோக்கியவாறு கூரத்தாழ்வார் சந்நிதி இருக்கின்றது. இக்கோயிலில் இவரது திருவுருவக் கை அபயம் அளிக்கும் நிலையிலும், இவரது உற்சவத் திருமேனிக் கைகள் இறைவனை வழிபடும் முறையிலும் கூப்பிய வண்ணம் உள்ளன.

கூரத்தாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள கூரம் என்னும் ஊரில் தோன்றினார். ஆனால், இவர் திருவரங்கத்தையே தமது வாழ்விடமாகக் கொண்டு உகந்தார். இவர் இராமானுஜருக்கு அரிய மாணவராய்ப் பெரும்பணிகள் பல புரிந்துள்ளார். இவர் வரதராஜஸ்தவம், சுந்தரபாஹுஸ்தவம், ஸ்ரீவைகுண்ட ஸ்தவம் முதலிய நூல்களையன்றித் திருவரங்கநாதரைப் போற்றும் வகையில் இராமானுஜர் இயற்றிய ஸ்ரீரங்க கத்தியத்திற்கு விளக்கவுரையும் இயற்றியுள்ளார்.

இக்கோயிலின் கருவறையோடு இணைந்துள்ள உள்மண்டபம் முகமண்டபம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இரு தூண்களை யுடைய இரு வரிசைத் தூண்கள் உள்ளன. மகா மண்டபத்தில் ஒவ்வொன்றிலும் ஆறு தூண்களையுடைய இரண்டு வரிசைத் தூண்கள் உள்ளன, இம் மகா மண்டபத்திற்கு அருகில் இலட்சுமி நரசிம்மர் சந்நிதி உள்ளது. கூரத்தாழ்வார் திருவுருவத்திற்கு நாள் பூசையோடு, மாதந் தோறும் அவரது அந்த நட்சத்திரத்தில் சிறப்பு வழிபாடும் ஆற்றப் பெறுகிறது.

கூரத்தாழ்வாருக்குப் பின்னர் அவர் புதல்வர் பட்டர் இக் கோயில் திருவாகத்தை மேற்கொண்டார். பின்னர், இக்கோயிலின் பொறுப்பை நஞ்சியர் ஏற்றுக் கொண்டார். ஆதலால் கூரத்தாழ் வார் சந்நிதியில் பட்டர், நஞ்சியர் ஆகியோர் உற்சவத் திரு வுருவங்கள் இங்கு நிலை படுத்தப் பெற்றுள்ளன. கூரத்தாழ்வார் பெயரில் ஒரு கோயில் கூரத்தில் இருக்கின்றது.

4) அஷ்டபுஜக் கிருஷ்ணர் தொண்டரடிப் பொடியாழ்வார்

கூரத்தாழ்வார் சந்நிதிக்கு வடக்கில், மேற்கு நோக்கியவாறு தொண்டரடிப் பொடியாழ்வார் சந்நிதி உள்ளது.

இக்கோயிலில் தொண்டரடிப் பொடியாழ்வாரின் உற்சவத் திருவுருவம் உள்ளது. இங்கு அஷ்டபுஜக்கிருஷ்ணர் திருவுருவமும் சத்தியபாமை, உருக்குமணி ஆகியோரின் திருவுருவங்களும் உள்ளன. புல்லாங்குழல் இயக்கும் வேணுகோபாலரின் திருவடியில் பசுஒன்று அவரதுஇசையில் திளைத்து மெய்மறந்து நிற்பதை இங்குச் சிற்பத்தில் காணலாம்.

தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் சோழ நாட்டைச் சேர்ந்த திருமண்டங்குடியில் அந்தணர் குலத்தில்; தோன்றி, 'விப்பிர நாராயணன்'என்னும் பெயருடன் திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்துத் திருவரங்கப் பெருமாளுக்கு மாலைகள் கட்டி அளித்து வந்தார். இவ்வாறு பணியாற்றி வந்த காலத்தில் இவர் தமது

நெறியிலிருந்து பிறழ்ந்து தேவதேவி என்னும் பேரழகு வாய்ந்த பெண்மணியோடு வாழ் வாராயினர்.

இவர் இவ்வாறு வாழ்ந்து வந்த காலத்தில் இவர் மீது பேரிரக்கம் கொண்ட பிராட்டியார் இவருக்கு அருள்புரியுமாறு நம்பெருமானிடம் வேண்ட, நம்பெருமானும் தமது பஞ்ச பாத்திரங்களில் ஒன்றான சுத்தோதகப் பொற் பாத்திரத்தைத் தேவதேவியிடம் கொடுத்துவிட்டார். அடுத்த நாள் அப்பொற்பாத்திரம் தேவ தேவியின் இல்லத்தில் இருப்பதாகத் தெரியவந்தது. மன்னரின் காவலர்கள் அப்பாத்திரத்தைத் தேவதேவியின் இல்லத்திலிருந்து கைப்பற்றி, விப்பிர நாராயணனையும் சிறைப்படுத்தினார்கள்.

அன்றிரவு மன்னர் கனவில் நம்பெருமான் தோன்றி, "விப்பிர நாராயணனின் முன்வினை நீங்கப் பொற்பாத்திரத்தை நாமே அளித்தோம்" என்று தெரிவித்தார். உடனே மன்னர் இவரைச் சிறையிலிருந்து விடுவித்தார். இதன்பின்னர், இவரது புகழ் பரவிற்று. அந்நிலையில் 'தொண்டரடிப் பொடியாழ்வார்' என்ற பெயரில் அரங்கநாதருக்கு இவர் பணியாற்றி வருவாராயினர்.

அரங்கநாதர் மீது 'திருமாலை என்னும் தலைப்பில் 45 பாடல்களும், பத்துப் பாடல்களைக் கொண்ட திருப்பள்ளியெழுச்சிப் பதிகமும் இவர் அருளினார். திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் யாவுமே திருவரங்கப் பெருமாள் மீது பாடப் பெற்றவை.

இந்த உள் மண்டபமும், முக மண்டபமும் உள்ளன. முக மண்டபத்தில் ஒவ்வொரு வரிசையிலும் ஐந்து தூண்களுடைய இரண்டு வரிசைகள் உள்ளன.

5) விட்டல கிருட்டிணன், மதுரகவியாழ்வார்

தொண்டரடிப் பொடியாழ்வார் சந்நிதிக்கு வடக்கில் மேற்கு நோக்கி விட்டல கிருட்டிணன் சந்நிதி 6 மீட்டர் சதுரப் பரப்பில் அமைந்துள்ளது. இக்கருவறையில் விட்டல கிருட்டிணன் திருவுருவத்துக்கு வலப்புறம் மதுரகவியாழ்வார் திருவுருவமும் இடப்புறம் நம்மாழ்வாரின் திருவுருவமும் உள்ளன.

கருவறையுடன் முன்மண்டபம், முகமண்டபம் ஆகியவை உள்ளன. முகமண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. இச்சந்நிதியின்வடக்கே நந்தவனம் ஒன்றும் உள்ளது. இக்கோயில் பகுதிகளுக்குத் திருப்பணி தேவைப்படுகிறது.

6) இலட்சுமிநாராயணர், திருப்பாணாழ்வார்

திருப்பாணாழ்வார்சந்நிதிவிட்டலகிருட்டிணன்கோயிலுக்குஅடுத்து வடக்கில் இருக்கிறது. இச்சந்நிதியில், இலட்சுமி நாராயணன், சுருடர் ஆகியோரின் சிலைத் திருவுருவங்களும், திருப்பாணாழ் வாரின் உற்சவத் திருவுருவமும் உள்ளன. இச்சந்நிதியில் திருப் பாணாழ்வார் திருவுருவத்திற்குப் பின்புறம் வீர ஆஞ்சநேயரின் திருவுருவம் சிலை வடிவில் ஓங்கி நிற்கிறது. இத்திருவுருவத்தில் அனுமனின் தலையும், பீமனின் உடலும்,' உள்ளன. இவ்வீரஅனும னின் தூக்கிய வலக்கை அருள் பாலிக்கிறது. இவர் தமது இடக்கையில் கதையைவைத்துள்ளார். திருப்பாணாழ்வார் உறையூரில், இழிந்த குலம் என்று கருதப்பட்ட பஞ்சமர் குலத்தில் தோன்றியவர். இவர் திருவரங்கப் பெருமானிடம் பேரன்பு கொண்டு, காவிரிக்குத் தென்கரையில் வீணையும் கையுமாக நின்று அவரைப் பல நாள்கள் துதித்து வந்தார். திருவரங்கநாதரும் இவருக்கு அருள்பாலிக்கும் நோக்கில், தமக்குத் திருமஞ்சனம் எடுத்துவரும் திருலோகசாரங்க முனிவரிடம், ''நமக்கு அந்தரங்க ரான பாண்பெருமானை நெகிழ நினையாதே. இவரை உம்முடைய தோளிலே கொண்டு நம்பக்கல் அழைத்துக்கொண்டு வருக'' எனத் தெரிவித்தார்.

இவ்வாணைக்கேற்பத் திருலோகசாரங்க முனிகளும் திருப் பாணாழ்வாரைத் தம் தோளின் மீது எழுந்தருளச் செய்வித்து அழகிய மணவாளர் திருமண்டபத்திற்குக் கொண்டுவந்து சேர்த் தார். அவ்வாறு வந்த திருப்பாணாழ்வார் திருவரங்கப் பெருமானால் ஆட்கொள்ளப்பெற்றார். அப்போது இவர் பணிவு டன் 'அமலனாதிபிரான்' என்னும்தலைப்பில் பத்துப்பாடல்களைத் திருவரங்கப் பெருமாள் மீது அருளினார்.

இக்கோயிலில் உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவை இணைந்துள்ளன.

இக்கோயிலின் மண்டபம் ஒவ்வொன்றிலும் 6 தூண்களை யுடைய மூன்று வரிசைத் தூண்கள் உள்ளன.

7. வீரநாராயணப்பெருமாள், நாதமுனிகள்

திருப்பாணாழ்வார் கோயிலுக்குத் தென்மேற்கில் வீர நாராயணப் பெருமாள் திருவுருவத்தைக் கொண்டுள்ள கோயில் இருக்கின்றது. இவ்வீர நாராயணப் பெருமாள், சிதம்பரத்திற்கு அடுத்துள்ள காட்டு மன்னார் கோயிலில் எழுந்தருளியுள்ளவர்.

இவ்வூரில் திகழ்ந்த நாதமுனிகள் இப்பெருமாளைப் பல நாள்கள் வழிபட்டு வந்த காரணமாகவும், இவர் ஆற்றிய பெரும்பணிகளை நினைவுகூரும் வகையிலும் வீரநாராயணப் பெருமாள் திருவுருவமும் நாதமுனிகள் திருவுருவமும் இக்கோயிலில் நிலைபடுத்தப் பெற்றுள்ளன.

நாதமுனிகள் அந்தணர் குலத்தில் தோன்றியவர். வடமதுரை திருவாய்ப்பாடி, பிருந்தாவனம், துவாரகை, அயோத்தி, சாளக்கிராமம் முதலிய பல திவ்விய தேசங்களில் வழிபாடாற்றிப் பின்னர்க் காட்டு மன்னார் கோயிலுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். இக்கோயிலில் அவர் அரும்பணிகள் ஆற்றிவந்த காலத்தில் ஒரு நாள் மேல்நாட்டிலிருந்து இக்கோயிலுக்கு வந்த வைணவர்கள், மன்னனார் சந்நிதியில் ''ஆரா அமுதே அடியேனுடலம் நின் பாலன்பாயே'' எனத் தொடங்கும் திருவாய்மொழிப் பத்துப் பாடல்களைப் பாடி இறுதியில், இப்பாடல்களைப் பாடியருளிய குருகூர்ச்சடகோபன் (நம்மாழ்வார்) அருளிய ஓராயிரத்துள் இப்பத்துப் பாடல்கள் அடங்கும் என்னும் குறிப்பைத் தெரிவித்தார்கள். இவற்றைச் செவிமடுத்த நாதமுனிகள் அவர்களை நோக்கி, ''இப்பத்தும் என்றீர்களே, இப்பிரபந்தம் முழுதும் கைவரப் பெறுமோ'' என வினவினர். உடனே அவர்கள் ''இப்பத்துப் பாடல்களே யாம் அறிவோம். மற்றவை பற்றியாதும் அறிந்திலம்' என்றனர். அவர்களை வழியனுப்பிவிட்டு உடனடியாக நாதமுனிகள், நம்மாழ்வார் தோன்றிய ஆழ்வார் திருநகரி எனப் பெறும் திருக்குருகூரிலே இப்பிரபந்தம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் அங்குப் ''பொலிந்து நின்ற பிரானை'' வழிபட்டு, இப் பிரபந்தம் கைவரப் பெறவழி வகுத்துக் கொடுக்குமாறு, மதுரகவி களின் மாணவராகிய பராங்குதாசரை நாடினார். பராங்குதாசரும் மனமுவந்து, நம்மாழ்வார் மீது மதுரகவிகள்பாடியருளிய ''கண்ணி நுண் சிறுத்தாம்பு'' எனத் தொடங்கும் பாடல்களை நம்மாழ்வார் திருவுருவத்தின் திருமுன் ஒரே மனத்தோடு அவருடைய திருவடி களில் சிந்தையைச்செலுத்திப்பன்னிராயிரம்தடவை ஓதுவீர் எனில் ஆழ்வார் தோன்றி அருள் புரிவார், எனத் தெரிவித்தார். இவ்வாறு நாதமுனிகள் நம்மாழ்வாரை வழிபட, நம்மாழ்வார் நாதமுனிகள் முன்தோன்றி, இரகசியத் திரயத்தையும் திருவாய் மொழியையும் மற்றுமுள்ள மூவாயிரப் பிரபந்தங்களையும் நாதமுனிவர்க்கு அன்புகூர்ந்து அறிவித்தார் பின்னர், இவ்வாறு இப்பிரபந்தங்கள் கைவரப்பெற்ற நாதமுனிகள் வீர நாராயணபுரம் சென்று அங்கிருந்த வைணவர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அடுத்து இவர், இப்பிரபந்தங்களை ''இயலும் இசையில்'' ஆக்க முற்பட்டார். இவ்வாறு செய்யின் இனிய கவிகள் பாடிய அருளாளர்களால் தொகுக்கப் பெற்ற தெய்வ நன்மாலைகளாகிய பிரபந்தங்கள் சிறக்கும் எனக் கண்டறிந்தார். இவ்வகையில் இவர் இத்திவ்வியப் பிரபந்தங்களைத் திவ்விய கானத்திலே அடைத்து இயலுமிசையுமாக்கிப் பாடுவித்தருளினார்.

முதலில் இப்பாடல்களைத் தம் உள்ளூர்க் காட்டு மன்னார் கோயிலில் ஓதுமாறு ஒரு திட்டத்தை இவர் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். பின்னர்த் திருவரங்கம் கோயிலுக்கு வந்து, அக்கோயில் அலுவலர்களோடு அளவளாவி, இத்திட்டத்தை இங்கும் செயல் படுத்தினார். இத்திட்டத்தின் கீழ் மார்கழி மாதம் மூன்று வாரங்களுக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் நாள்தோறும் ஓதுவது வழக்கமாக ஏற்பட்டது. இத்திட்டம் தென்னாட்டிலுள்ள முதன்மை வைணவக் கோயில்களெல்லாவற்றிலும் பின்பற்றப்பெற்றது.

ஆளவந்தார் திருவிழா மூன்று நாள்களும், நாதமுனிகள் திருவிழா பத்து நாள்களும், ஆண்டாள் திருவிழா பத்து நாள்களும் இங்கு நடைபெறுகின்றன. இவை தவிர, மாதந்தோறும் நாதமுனிவரின் திருநாள் கொண்டாடப் பெறுகிறது.

இராமர், இலக்குவணர், சீதை, ஆஞ்சநேயர்

8. உள் ஆண்டாள்

நாதமுனிகள் சந்நிதிக்கு வடமேற்கில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது- அடையவளைந்தான் வீதியில் தென்மேற்கில் ஏற்கனவே ஒரு கோயில் ஆண்டாள் பெயரில் இருப்பதால், இங்குள்ள கோயில் 'உள் ஆண்டாள் கோயில் எனக் குறிப்பிடப் பெறுகிறது.

ஆண்டாளை வளர்த்து அரங்கநாதரிடம் கொண்டு வந்து ஒப்புவித்தவர் பெரியாழ்வார். இவரது திருவுருவம் இங்குள்ளது. இவருக்குப் பட்டர்பிரான் என்னும் பெயர் பலரறியச் சூட்டப் பெற்றது. இவர் பெருமாள்மீது திருப்பல்லாண்டு (12 பாடல்கள்) பாடியருளினார். இவர் அருளிய திருவாய்மொழியிலுள்ள 35 பாடல்கள் அரங்கநாதர்மீது பாடப்பெற்றன.

இக்கோயிலில் மகா மண்டபம், உள் மண்டபம், முக மண்டபம், ஆகியவை உள்ளன. ஒரு தளமும், ஒரு கலசமும் கூடிய விமானம் அணி செய்கின்றது. முகமண்டபத்தில் ஒவ்வொன்றிலும் நான்கு தூண்களாக மூன்றுவரிசைத் தூண்கள் உள்ளன. இராமர், இலக்குவனர், சீதை, ஆஞ்சநேயர் ஆகியோரின் திருவுருவங்

களும் உற்சவத் திருவுருவங்களும் உள்ளன. உள் ஆண்டாள் கோயிலின் தென்புறத்தில் சிறிய சந்நிதியில் இராமனுசரின் திருவுருவமும் உற்சவர் திருவுருவமும் பெரியாழ்வாரின் உற்சவத் திருவுருவமும் உள்ளன. தை, மாசி, சித்திரைத் திருவிழாவின் ஆறாம் நாளில் அரங்கநாதர் யானை வாகனத்தில் உலா வரும்போது ஆண்டாள் சந்நிதிக்கு வந்திருந்து ஆண்டாளிடம் மாலை மாற்றிக் கொள்கிறார்.

9. வேணுகோபாலர்

உள் ஆண்டாள் சந்நிதிக்கு வடக்கில் கிழக்கு நோக்கி 18 மீட்டர் நீளமும், 10 மீட்டர் அகலமும் கொண்டுள்ள வேணு கோபாலர் கோயில் உள்ளது. இக்கோயில் கருவறையில் வேணு கோபாலர் காளிங்கன் மீது நடனம் புரிகிறார். இங்கு உருக்குமணி சத்தியபாமை, ஆஞ்சநேயர் ஆகியோரின் திருவுருவங்களும் உள்ளன.

ஒய்சால மன்னர் இரண்டாம் நரசிம்மர் திருவரங்கம் வந்த போது, அவருடன் வந்திருந்த சீராமபட்டர் என்பவரால் கி.பி. 1617–ஆம் ஆண்டில் இக்கோயில் கட்டப்பட்டது.[6] இச்சந்நிதியில் வேணுகோபாலர் குழலூதிய பிள்ளை' (வேணுகோபாலர் என்னும் பெயரில் விளங்குகிறார்.

இச்சந்நிதிக்குக் கருவறை, உள் மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகியவையும், ஒரு பிராகாரமும் உள்ளன. மகா மண்டபத்தின் ஒவ்வொன்றிலும் எட்டுத் தூண்களுடைய ஆறு வரிசைத் தூண்கள் உள்ளன.

10. அமுத கலசக் கருடர்

வேணுகோபாலர் சந்நிதிக்கு வடக்கில் அமுத கலசக் கருடர் சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது. இங்கு உற்சவராக இருக்கும் கருடருக்கு நான்கு கைகள் உள்ளன. இத்திருவுருவத்தின் வலக் கையில் அமுத கலசமும், இடக்கையில் எட்டு நாகங்களும் உள்ளன. இக் கோயிலில் உள்மண்டபம், முக மண்டபம் ஆகியன உள்ளன. முக மண்டபத்திற்கு 4 தூண்கள் உள்ளன.

11. அனுமன்

அமுதக் கலசக் கருடர் சந்நிதிக்குக் கிழக்கில் அனுமன் சந்நிதி வடக்கு நோக்கியவாறு தனிக்கோயிலில் ஒரு விமானத்

---

6. 1937 ஆம் ஆண்டு தொல்பொருள் கல்வெட்டு

துடன் அமைந்துள்ளது. இங்கு அனுமனின் அழகிய திருவுரு வமும் உற்சவர் திருமேனியும் உள்ளன.

12. சக்கரத்தாழ்வார்

அமுத கலசக் கருடர் சந்நிதிக்கு வடமேற்கில் சக்கரத்தாழ் வார் சந்நிதி அமைந்துள்ளது. சக்கரத்தாழ்வாருக்கு 16 கைகள் உள்ளன. இவருடைய கைகளில் உள்ள ஆயுதங்கள் அந்த அந்தச் சமயங்களில் அன்பர்களுக்கு அவ்வப்போதுஏற்படும்இடர்களுக்குத் தக்கவாறு எதிர்த்து அவை தாமாகவே செயல்படுகின்றன. மூலவர் சக்கரத் தாழ்வார் 'சுதர்சன ஆழ்வார்' எனவும் போற்றப் படுகிறார். உற்சவருக்கு எட்டுக்கைகள் உள்ளன. இவற்றில் நான்கு கைகள் சங்கு, சக்கரம், அங்குசம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இவருக்குரிய மூன்று கண்களில் மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண் தக்கசமயத்தில் மட்டுமேசெயலாற்றும். இம் மூலவரைச் சுற்றி 108 அட்சரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை யோக யந்திரங்களாகும். மூலவர் சக்கரத்தாழ்வாரின் பின்புறம் யோக நரசிம்மரின் திருவுருவத்தைக் காணலாம். யோக நரசிம்மருக்கு நான்கு கைகள் உள்ளன. அவற்றில் அவர் நான்கு சக்கரங்களை ஏந்தி வீற்றிருக்கின்றார். இக்கோயில் பூசைக்குச் சனிக்கிழமை மிக உகந்த நாளாகக் கருதப்படுகிறது. மனக் கோளாறுடையோர் இங்கு வழிபாடாற்றிக் குணம் பெறுகிறார் என்பது நம்பப்படுகிறது.

இக்கோயில் கருவறையில் உள்மண்டபம், முகமண்டபம், மகாமண்டபம், பிராகாரம் ஆகியவை உள்ளன. முகமண்டபத்தில் ஒவ்வொன்றிலும் எட்டுத்தூண்களுடைய ஆறு வரிசைத்தூண்கள் இருக்கின்றன. கருவறையின் மிக அருகில்இரண்டு வரிசைகள் உள்ள தூண்கள் நீண்ட சதுரப்பீடத்தைக் கொண்டுள்ளன.

மகாமண்டபத்தில் ஒவ்வொன்றிலும் ஆறு தூண்கள் கொண்ட ஆறு வரிசைகள் உள்ளன. முக மண்டபத்திற்கு இருபுறங்களிலும் திண்ணைகள் உள்ளன. இந்தக் கருவறை மீதுள்ள விமானம் ஒரு தளம் உடையது. இம்விமானத்தின் இரு புறங்களிலும் திருமாலின் சுதைத் திருவுருவங்கள் உள்ளன.

சக்கரத்தாழ்வார் கோயில் உள்புறத்தில் நெய் விளக்கும், வெளியில் நல்லெண்ணெய்விளக்கும் பயன்படுத்தப் பெறுகின்றன. இங்கு நாள்தோறும் 'சுதர்சன சதகம்' ஓதப்பெறுகிறது.

13. திருவரங்கநாச்சியார்

சக்கரத்தாழ்வார் சந்நிதிக்கு நேர் வடக்கில் அரங்க நாச்சியார் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இது 121 மீட்டர் நீளமும், 37 மீட்டர் அகலமும் கொண்டது. இக்கோயிலில் கருவறை, உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவை இருக்கின்றன. இவற்றைச் சுற்றிலும் இரு பிரகாரங்கள் உள்ளன. கருவறை 2 மீட்டர் நீளமும், 6 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் காணப்படுகிறது.

இங்கு நாற்புறங்களிலும் மண்டபங்கள் உள்ளன. தென் புறத்தில் பங்குனி உத்தரத் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. அதில் இரண்டு வரிசைத் தூண்கள் உள்ளன.

வடபுறத்தில் ஊஞ்சல்மண்டபம் உள்ளது. மேற்குப்புறத்தில் வசந்த மணடபமும் இருக்கிறது. அதைச் சுற்றிலும் ஓர் அகழி உள்ளது. வடக்குப் பிரகாரக் கிழக்குப் பகுதி திறந்தவெளியாக இருக்கிறது.

இக்கருவறையில் வடகிழக்கில் வில்வ மரமும், பிருந்தாவனம் எனப்படும் துளசி மாடமும் கல்மேடையில் இருக்கின்றன. இந்தப் பிருந்தாவனத்தில் அல்லைப்புறங்களில்மூன்று மாடங்கள்,செங்குத் தாக உள்ளன. அவற்றில் வேணுகோபாலர், ஐராவதத்தின் மேல் இந்திரன். ஆட்டின்மீது இருதலை அக்கினி, குதிரையின் மீது கல்கி, நின்ற நிலையில் திருமால் ஆகிய திருவுருவங்கள் உள் ளன. வெளியில் நவராத்திரி மண்டபம் காணப்படுகிறது.

இக்கோயிலின் கருவறையில் நாச்சியார் திருவுருவங்கள் இரண்டு உள்ளன. இவற்றுள் "முதலில் இருந்த திருவுருவம், முகமதியர் படையெடுப்பின் அச்சம் காரணமாகத் தாயார் சந்நிதியின் வட கிழக்கில் வில்வ மரத்தடியில் புதைத்து மறைத்து வைக்கப் பட்டது.

அப்போது கருவறை வெற்றிடமாக இருந்ததால், சீதேவி எனத்தற்போது சொல்லப்படும் புதிய திருவுருவம் நிலைநாட்டப் பெற்றது. முகமதியர் படையெடுப்பின் அச்சம் நீங்கவே, பழைய திருவுருவமும் நிலைநாட்டப் பெற்றது. இத்திருவுருவம் பூதேவி எனவும், புதிய திருவுருவம் சீதேவி எனவும் தற்போது வழிபடப் பெறுகின்றன.

ஆண்டிற்கொருமுறை ஆதி பிரமோற்சவத்தில் ஒன்பதாம் நாள் பங்குனி உத்தர மண்டபத்தில் தாயார், பெருமாள் ஆகி

யோருக்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. அப்போது இராமானுஜர் இயற்றிய ''திருவரங்கக்கத்தியத் திரயம்'' ஓதப்பெறுகிறது இதில் இராமானுஜர் திருவரங்கநாதருடைய பெருமைகளையெல்லாம் விதந்து விதந்து எடுத்துரைத்துள்ளார். தாயார் கோயில் உற்சவங்களெல்லாம் தாயார் சந்நிதியிலேயே நடைபெறுகின்றன. நாச்சியார் வெளியில் வருவதில்லை. அதனால். அவர் 'படி தாண்டாப் பத்தினி' எனப் போற்றப் பெறுகிறார்.

நாச்சியாரின் இப்பெருமை காரணமாகச் சீலமிக்கோரை, 'நல்லகுடி நாச்சியார்' எனப் பாராட்டும் வழக்கம் நடைமுறையில் வருவதாயிற்று.

அரங்கநாதரே ஆண்டில் ஐந்துமுறை அரங்கநாச்சியார் சந்நிதிக்கு எழுந்தருளுகிறார். தை மாதம் பூபதி[7] திருவிழாவில் ஏழாம் நாள் நவராத்திரி மண்டபத்தில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் சீதேவிபூதேவி ஆகியோர்களும் உபய நாச்சிமார்களுடன் கதிரலங்காரத்துடன்[8] அவர் காட்சியளிக்கிறார். பங்குனி மாதம் ஏழாம் திருவிழாவில் பெருமாள் சீதேவி - பூதேவியுடன் தாயார் சந்நிதிக்கு எழுந்தருள, நவ்ராத்திரி மண்டபத்தில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. ஆண்டிற்கொருமுறை பங்குனி உத்தர மண்டபத்தில் நாச்சியாருக்கும், திருவரங்கநாதருக்கும் திருமஞ்சனம் நடைபெறுகிறது. இது பதினெட்டுச் சலவைகள் சிறப்புத் திருமஞ்சனத் திருநாளாகும். விருப்பண் திருநாளில்[9] நவராத்திரி மண்டபத்திற்கு அரங்கநாதர் சீதேவி - பூதேவியுடன் வந்து திருமஞ்சனம் ஏற்றுக்கொள்வார். ஆண்டிற்கொருமுறை பங்குனி உத்தரத்தின்போது பதினெட்டுமுறை திருமஞ்சனம் செய்யப் பெறுகிறது. பதினெட்டு முறையும் நம்பெருமானுக்குஆடையைமாற்றிப்புதிய ஆடையை அணிவிக்கிறார்கள். இதுவே பதினெட்டுச் சலவை எனப்படும்.

14) அயக்ரீவர் வேதாந்த தேசிகர் (கி. பி. 1268 - 1369)

தாயார் சந்நிதிக்குக் கிழக்கில் வேதாந்த தேசிகர் கோயில் உள்ளது. இச்சந்நிதியில் அயக்ரீவர் திருவுருவம் இருக்கின்றது.

7. பூபதியாகிய இறைவர் பெயரில் தொடங்கப் பெற்றதும் மிகச் சிறப்புடையதுமான திருவிழா.
8. கதிரலங்காரம் என்பது புதிதாக அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களைக் கட்டுக்கட்டாக அவற்றிற்கு உரிமை பெற்றுள்ளவர்கள் எடுத்து வந்து தாயார், பெருமாள் ஆகியோர்கள் திருவடிகளில் வரிசைப்படுத்துவது ஆகும்.
9. இவ்விழா, விசய நகர மன்னர் விருப்பண்ண உடையார் பெயரில் நடைபெறுகிறது.

அயக்ரீவர் குதிரை முகத்துடன் விளங்கும் திருமால் திருவவதாரம் ஆகும். அயக்ரீவரை வழிபட்டு வேதாந்த தேசிகர் எல்லாச் சித்திகளையும் பெற்றார். அதனால் அயக்ரீவர் திருவுருவம் இச் சந்நிதியில் உள்ளது. இச்சந்நிதியில் வேதாந்த தேசிகர் திருவுருவம் மேற்கு நோக்கியவாறு இருக்கின்றது.

இவர் காஞ்சிக்கருகேயுள்ள 'துப்புல்' என்னும் ஊரில் தோன்றினார். இவர் வேத விற்பன்னராகவும், கவிஞராகவும் விளங்கியவர். இவருக்குக் 'கவி தர்க்க சிம்மம்' என்ற பெயரும் உண்டு. திருவரங்கத்தில் இவர் அத்வைத மிச்ரா என்பவரை வென்று, 'வேதாந்தாசாரியார்', 'சர்வ தந்திர சுதந்திரர்' என்னும் பட்டங்களைப் பெற்றார். இவர், சததூசினி, சங்கல்பசூரியோதய யாதவபியூதய, யதிராச சப்ததி, ஸ்ரீஸ்துதி. பூஸ்துதி முதலிய நூல்களை இயற்றினார். மற்றும் இவர் அபீதிஸ்வம் போன்ற வடமொழி நூல்களையும் இயற்றினார். இவர் பல காலம் திருவரங்கத்தில் தங்கியிருந்தார்.

முகமதியர் படையெடுப்பின்போது, ஸ்ரீபாஷ்யத்திற்கு விளக்கவுரையாக இருந்த 'சுருதபிரகாசிகை'யை இவர் பாதுகாத்தார். அக்காலத்தில் இவர் திருவரங்கத்தை விடுத்துத் தற்போது பெரியார் மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலத்தில் சிலகாலம் வாழ்ந்தார். இவர் வடமொழி வல்லுநராயிருந்த போதிலும் ஆழ்வார்களுடைய பாடல்களில் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்து வந்தார். வைணவப் பெரியோர்கள் திகழ்ந்த திருவரங்கத்தில் தாம் வாழ்வதற்கான நற்பேறு பெற்றதை அவர் தாம் இயற்றிய அபீதஸ்வத்தில் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

இக்கோயில் கருவறையுடன் உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவை இருக்கின்றன. முக மண்டபத்தில் இரு புறங்களிலும் நான்கு தூண்கள் இருவரிசைகளில் உள்ளன. இதன் விமானத்திற்கு ஒரு தளமும். ஒரு கலசமும் அமைக்கப்பட்டுள்ளன.

15) மேட்டு அழகிய சிங்கர்

வேதாந்த தேசிகர் சந்நிதிக்குத் தென்மேற்கில் மேட்டு அழகிய சிங்கர் சந்நிதி வடக்கு நோக்கி அமைந்துள்ளது. 25 படிகள் உயரத்தில் இக்கோயில் அமைந்துள்ளதால் மேட்டு அழகிய சிங்கர் கோயில் என இது குறிப்பிடப் பெறுகிறது.

அழகிய சிங்கர் எடுத்த கை இரணியனை அழித்தது. அதே சமயத்தில் இது பிரகலாதனையும் காப்பாற்றியது. இக்கார

ணங்களுக்காக, இவர் 'எடுத்த கை அழகிய சிங்கர்' என்னும் திருப்பெயரில் துதிக்கப் பெறுகிறார்.

மேட்டு அழகிய சிங்கர் கோயிலுக்கு அருகிலுள்ள அருளாளர் பெருமாள் மண்டபத்தில் இராமானுஜருக்கும் யக்ஞய மூர்த்திக்கும் பதினான்கு நாள்கள் தொடர்ந்து நிகழ்ந்த வாக்கு வாதத்தில் இராமானுஜருக்கே வெற்றி என்பதைத் தெரிவிக்கும் வகையில் மேட்டு அழகிய சிங்கர் பெருமுழக்கம் செய்து சிரித்ததாகத் 'திவ்விய சூரிசரிதம்' கூறுகிறது.

16) வாசுதேவப் பெருமாள்

மேட்டு அழகிய சிங்கர் கோயிலுக்குத் தென்கிழக்கில் சிறிய அறை ஒன்றில் நின்ற கோலத்தில் வாசுதேவர் உற்சவர் திருவுருவம் வடக்கு நோக்கி இருக்கின்றது.

17) கிருஷ்ணர், திருவேங்கடம் சீனிவாசப் பெருமாள் பெரியவாச்சான் பிள்ளை

பதின்மூன்றாம் நூற்றாண்டில் திகழ்ந்த பேரறிஞர் இவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களுக்கு விளக்கவுரை விரிவாக இயற்றியுள்ளார். மற்றும் கத்யத்ரயம், அபயப்பிரதானம், ஆளவந்தார் தோத்திரம் ஆகியவற்றிற்கும் விளக்கவுரை எழுதியுள்ளார்.

மேட்டு அழகிய சிங்கர் கோயிலுக்குக் கிழக்கில் ஆயிரக்கால் மண்டபத்துக்குச் செல்லும் வழியிலுள்ள இவரது கோயிலில் இவரது உற்சவர் திருவுருவமும், கிருஷ்ணர் மூலவர் திருவுருவமும் இருக்கின்றன. இவர் வழிபட்டு வந்த திருவேங்கடம் சீனிவாசப் பெருமாள் திருவுருவம் இங்குள்ளது.

18) பிள்ளை லோகாசாரியார்

பெரியவாச்சான் பிள்ளை சந்நிதியிலிருந்து கிழக்கில் சிறிது தூரம் சென்று தெற்கு நோக்கியே செல்வோம் எனில், வைணவ சமய விளக்க ஆசிரியராகிய பிள்ளை லோகாசாரியார் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளதைக் காணலாம்.

இவர் திருவரங்கத்தில் தோன்றி, வடக்குத் திருவீதியில் நிலையாக வாழ்ந்த பிரம்மசரிய நிலையினர். இவரது காலம் கி. பி. 13–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும். இவர் 'தனிப் பிரவணம்' முதல் 'வசன பூஷணம்' ஈறாக உள்ள பதினெட்டு வைணவ சாத்திரங்களை

யும் இயற்றினார். இவற்றை 'அஷ்டாதச ரகசியம்' எனக் குறிப்பிடுவதுண்டு. சைவத்தில் 14 சித்தாந்த சாத்திரங்கள் இருப்பன போன்று இவை வைணவச் சமயத்திற்கு அமைந்திருக்கின்றன. இவற்றில் விளக்கம் பெற்றவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களின் கருத்துப் பொருள்களும், வேதாந்தங்களின் நுண்பொருளுமாகும்.

முகமதியர் திருவரங்கத்தின்மீது படையெடுத்துத் திருவரங்கப் பெருமாள் கோயில்பொருள்களை அவர்கள் எடுத்துச்சென்றபோது, அவர்களைப் பின்தொடர்ந்தார். அவர், வயது முதிர்வு காரணமாக உயிர் துறந்தார்.

பிள்ளை லோகாசாரியாரை நினைவு கூரும் வகையிலுள்ள இக்கோயிலில், கருவறை, உள் மண்டபம், முக மண்டபம் ஆகியவை இருக்கின்றன. முக மண்டபத்தில் ஒவ்வொன்றிலும் நான்கு தூண்களையுடைய இரண்டு வரிசைத் தூண்கள் உள்ளன. பிள்ளை லோகாசாரியார் திருவுருவம் இங்கு மேற்கு நோக்கியுள்ளது.

19) கோதண்டராமர்

பிள்ளை லோகாசாரியார் சந்நிதிக்கு வடக்கில் கோதண்டராமர் சந்நிதி வடக்கு நோக்கி ஒரு பிராகாரத்துடன் அமைந்துள்ளது. இக்கோயிலின் கருவறையுடன் உள் மண்டபம், முக மண்டபம் ஆகியவை இருக்கின்றன. இச்சந்நிதியில் இராமர், சீதை, இலக்குவனர், ஆஞ்சநேயர் ஆகியோரின் மூலவர் திருவுருவங்கள் உள்ளன.

20) பார்த்தசாரதி

பிள்ளை லோகாசாரியார் சந்நிதிக்குத் தெற்கில் பார்த்தசாரதி கோயில் அமைந்துள்ளது, பார்த்தனாகிய அருச்சுனனுக்குக் கண்ணன் சாரதியாகத் தேர் ஓட்டியதால் கண்ணனுக்குப் பார்த்தசாரதி என்னும் பெயர் அமைந்தது. தேரில் கண்ணன் அருச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்யும்முறையில் இத்திருவுருவம் காட்சியளிக்கிறது. கண்ணன் ஞானக் கண்ணும், அருள் நோக்கும் உடையவராகக் காட்சி தருகிறார். இச்சந்நிதியில் கருவறையுடன் உள் மண்டபம், முகமண்டபம் ஆகியவை உள்ளன முக மண்டபத்திற்கு நான்கு தூண்கள் இருக்கின்றன.

வரதராஜர், நர்த்தனக் கிருஷ்ணன், யோகநரசிம்மர் இராமாநுஜர் (கி. பி. 1017-1127)

பார்த்தசாரதி சந்நிதிக்குத் தெற்கில் பாஷ்யக்காரர், எம்பெருமானார், உடையவர் என்னும் பெயர்களைத் தாங்கிய இராமானுஜர் கோயில் இருக்கின்றது. இங்குச் சீதேவி, பூதேவியுடன் வரதராஜர், ஆதிசேடனுடன் நர்த்தனக் கிருஷ்ணர், ஒரே சாளகிராமத்தினாலான ஐந்துதலைப் பாம்புடன் கூடிய யோகநரசிம்மர் ஆகிய திருவுருவங்கள் உள்ளன. காஷ்மீரில் சரசுவதி இராமானுஜருக்கு அளித்த அயக்ரீவர் திருவுருவமும் இங்குள்ளது.

இராமானுஜர் கி, பி. 1017-ஆம் ஆண்டில் திருப்பெரும்புதூரில் தோன்றினார். காஞ்சிபுரத்தில் வரதராஜப்பெருமாள் கோயில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது, இவர் திருவரங்கநாதர் கோயில் ஆசாரியராக வேண்டும் என ஆளவந்தாரும் பெரிய நம்பியும் விரும்பினர். இவர்கள் விருப்பத்திற்கேற்ப இராமானுஜர் பெரிய நம்பியை அடுத்துத் திருவரங்கநாதர் கோயில் ஆசாரியாராயினர். இவர் எவ்வாறு திருவரங்கப் பெருமாளால் ஆட்கொள்ளப் பெற்றார் என்பதை ஆறாயிரப்படி குரு பரம்பராப் ரபாவம் தெரிவிக்கிறது. இவர் கிழக்குக் கோபுரமாகிய தாமோதரன் கோபுரத்தில் வழியாகக் இக்கோயிலினுள் வந்தார். இக்கோபுரத்தின் முன் நிலம் தோய வீழ்ந்து வணங்கினார். இவ்வாறு இவர் கிழக்குக் கோபுரத்தில் வழியாக வருவதற்குக் காரணங்கள் இரண்டு கற்பிக்கப்படுகின்றன. முதலாவது இக்கோயில் வெளிக் கோபுரங்களுள் தாமோதரன் என்னும் புனிதப் பெயர் தாங்கிய கோபுரம் கிழக்குக் கோபுரமாகும். மற்றும் அரங்கநாதர் 'குடதிசை (மேற்குத் திசை) முடியை வைத்துக், குணதிசை பாதம் நீட்டி' பள்ளி கொண்டுள்ளார் என்பதை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தெரிவிக்கிறது. எனவே, அரங்கநாதர் திருவடி கிழக்குக் கோபுரத்திற்கும் அப்பாலும் நீண்டுள்ளது என்பது நம்பிக்கையாகும். இத்தகைய சிறப்புடைய இடத்துக் கோபுரத்தின் வழியாக இவர் இக்கோயிலினுள் வந்ததில் பொருத்தம் உள்ளது. பின்பு இவர் திரு விக்கிரமன் திருச்சுற்றாகிய சிறந்த பிராகாரத்தின் வழியாக வந்து பலிபீடத்தடியே வணங்கி நரசிம்மர் திருவடி தொழுது திருவரங்க நாச்சியாரை வழிபட்டார். பின்னர்ச் சந்திர புஷ்கரணியில் தீர்த்தம் கண்டருளித் திருகோபுரத்து நாயனார்களுக்கு வணக்கம் செலுத்தி. நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களைச் சேவித்து அணி அரங்கர் திருமுற்றத்தே புகுந்து வணக்கம் செலுத்தி, வலம் வந்து பிரணவ வடிவிலான திவ்விய விமானத்தைச் சேவித்தார். பின்னர் இங்குக் கோயில் கொண்ட சேனை

முதலியார் திருவடி தொழுதார். அந்நிலையில் 'முக்தனை வைகுந்தப் பெருமாள் எதிர்கொள்வார் போன்று, 'திருவரங்கப் பெருமாள் திருக்கைத்தலத்திலே எழுந்தருளிப் புறப்பட்டு அழகிய மணவாளர் திருமண்டபத்திற்கு எழுந்தருளினார். அப்போது, இராமானுஜர் 'விழுவது' 'எழுவது' 'தொழுவது' என்னும் முறையில் மீண்டும் மீண்டும் வழிபட்டார் அப்போது 'அரங்கம் தன்னுள் பாம்பணைப் பள்ளி கொள்ளும் கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக்' 'கண்ணாரக் கண்டு உகந்து வாயார வாழ்த்தினார்'

''அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதனைக்

கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' எனத் திருப்பாணாழ்வார் அமலனாதிபிரான் பிரபந்தத்தில் தெரிவித்து உள்ளவாறு அரங்கநாதரைக் கண்டு களித்தார். அரங்கநாதரும் இராமானுஜரை ஆட்கொண்டார்; உடையவர் என்னும் திருப்பெயரும் சூட்டப் பெற்றார்; பின்னர்த் திருவரங்கநாதர் திருக்கோயில் பணிகளை மேற்கொண்டார். இவர் கருவூலங்களை ஆராய்ந்து நடத்திக் கோயில் பரப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை நேர்படுத்தித் திருமதில்களுக்குத் திருப்பணிகள் செய்து நந்தவனங்களை அமைத்து நித்திய வழிபாடுகள், மாத வழிபாடுகள், ஆண்டு விழாக்கள் ஆகியவற்றைக் குறைவற நடத்தினார்;

இராமானுஜரின் பூத உடலைத் தாங்கியுள்ள இச்சந்நிதி முன்பு வசந்த மண்டபமாக இருந்து வந்தது. குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் ஆகியவற்றை இருமுறை அரைத்து ஆண்டு தோறும் இராமானுஜரின் மூலவர்திருவுருவத்தில் சாத்துகிறார்கள்.

இவரது திருவுருவத்தில் விரல், நகம், தலை முடி ஆகியவை இயற்கையில் மனித உடலில் எவ்வாறு இருக்குமோ, அவ்வாறு இருக்கின்றன. இக்கோயிலின் கருவறையில் உடையவருடைய மூலவர், உற்சவர் திருவுருவங்கள் உள்ளன. இங்கு ஆளவந்தாரது உற்சவத் திருமேனியும் இருக்கிறது.

இக்கோயில் கருவறையுடன், உள் மண்டபம், முக மண்டபம் ஆகியவை உள்ளன. உடையவர் கோயில் முக மண்டபத்தில், ஒவ்வொன்றிலும் ஆறு தூண்களையுடைய நான்கு வரிசைத் தூண்கள் உள்ளன இந்த ஆளவந்தாருக்காக அமைக்கப்பட்ட கோயிலில் அவரது திருவுருவம் வைக்கப்படவில்லை. ஆனால், அது ஒரு கண்ணாடி அறையாகத் தற்போது பயன்படுத்தப்படுகிறது.

உடையவர் பிறந்த தினத்தன்று, அவரது உற்சவர் திருவுருவம் வீதிகளிலும் அத்தியயன நாள்களின்போது கோயில் பிராகாரத்திற்குள்ளும் உலா வருகிறது.

நான்காம் பிராகாரம்

21) ஆதிநாதப்பெருமாள் நம்மாழ்வார்

பாண்டிய நாட்டில், திருக்குருகூரில் மறந்தும் புறத்தொழாமே திருமாலுக்குக் குடிகுடி வழிபணி செய்து வந்த திருக்குலத்தில் தோன்றிய காரியாரும். அவர் துணைவியர் உடைய நங்கையாரும் இல்லறம் நடத்தி வந்தபோது, தங்களுக்கு மகப்பேறு கோரித் திருக்குறுங்குடிக் கோயிலில் எழுந்தருளிய பெருமாளிடம் வேண்ட, அவரும் மனமுவந்து அருள் புரிந்தார். இவ்வருள் பொலிய, நம்மாழ்வார் தோன்றினார். ஆனால் இவர், எத்தகைய முறுவலும் செய்யாமலும், முலைப்பால் உண்ணாமலும், முழுநிறைவுடன் இருக்கக் கண்ட இவருடைய பெற்றோர்கள் கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்த்தும், இவர் தம் கண்களை மூடிக்கொண்டும் யாதும் பேசாமல் இருந்தும் வந்தார். இத்தகைய நிலையில் இருந்து வந்த நம்மாழ்வாரை மதுரகவிகள் நேரில் கண்டு அவருடைய திருவடிகளில் வணங்கப், பெருமாளும் கருடவாகனத்தில் எழுந்தருளி, நம்மாழ்வாருக்கு மயர்வற மதிநலம் நல்கினார். அவ்வருளில் தோய்ந்த நம்மாழ்வார், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் திவ்வியப் பிரபந்தங்களை அருளினார். இவற்றுள் திருவிருத்தத்திலுள்ள ஒரு பாடலும், திருவாய்மொழியிலுள்ள பதினொரு பாடல்களும் திருவரங்கநாதர்மீது பாடப்பெற்றன.

மதுரகவிகள் நம்மாழ்வாரைத் திருவரங்கத்திற்கு அழைத்து வந்தார் எனவும், அவ்வாறு வந்திருந்த நம்மாழ்வார் திருவரங்க நாதரைப் பலகாலம் வழிபட்டு வந்தார் எனவும் வரலாறு கூறுகிறது.

நம்மாழ்வார் ஒருவரையே வழிபட்டவர் மதுரகவிகள் அவர் நம்மாழ்வார்மீது பதினொரு பாடல்களைக் கொண்ட 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்னும் திவ்வியப் பிரபந்தத்தை இயற்றினார்.

திருமங்கையாழ்வார் திருஆலி திருநகரியில் தோன்றியவர்' சோழ மன்னரிடம் சிற்றரசராகவும். சேனைத் தலைவராகவும் திகழ்ந்தார். இவர் திருநறையூரில் வைணவர்களுக்குத் திருவமுது செய்து பெரும் பேறுபெற்ற குமுதவல்லியாரைத் திருமணம் செய்து கொண்டார். தம்மிடமிருந்த செல்வங்களையெல்லாம்

திருமாலடியார்களுக்கு அமுது செய்வித்தலிலே இழந்துவிட்டு, வழிப்பறி செய்தும், இப்பணிக்காகப் பொருள் ஈட்டி வந்தார். இந்நிலையில் ஒருநாள் இவருக்கு அருள்புரியத் தம் தேவியருடன் திருமால் இவர் முன் காட்சியளித்தார். அப்போது திருமாலிடமிருந்து .இவர் கைப்பற்றிய பொருள்களை எடுத்துச் செல்ல இவரால் இயலாது, ''நீர் மந்திரம் செய்தீரோ'' எனத் திருமாலிடம் இவர் வினவ, திருமாலும் அவருக்கு அருள் பாலிக்கும் அருமைக் குருவாக அவருக்குப் பெரிய மந்திரத்தை உபதேசித்தார். அப்போது திருமங்கையாழ்வார் பெருவெள்ளமாகப் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம். திருஎழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், என்னும் ஆறு திவ்வியப் பிரபந்தங்களை இயற்றினார், இவற்றுள் திருவரங்கநாதர் மீது பாடப்பெற்றவை எழுபத்து மூன்று பாடல்களாகும்,

திருவரங்கர் பெரிய கோயில் விமானம், மண்டபம், கோபுரம் ஆகியவற்றிற்குத் திருப்பணிபுரிய எண்ணிய திருமங்கையாழ்வார் நாகப்பட்டினம் சென்று ஆங்கிருந்த புத்தர் பொன் திருவுருவத்தை எடுத்து வந்து, அதனை உருக்கிப் பொன்னாக்கி, அதனைக் கொண்டு திருவரங்கம் பெரிய கோயில் திருமதில் ஒன்றையும் திருமண்டபம் முதலியவற்றையும் அமைத்தார்.

இக்கோயிலின் மூன்றாம் பிராகாரத்தில் மேற்குப் பகுதியில் நம்மாழ்வார் சந்நிதி வடக்கு நோக்கி இருக்கின்றது. இங்கு நம்மாழ்வார் மூலவர் திருவுருவமும், திருமங்கை ஆழ்வார், மதுரகவி ஆழ்வார் ஆகியோர் மூலவர் உற்சவர் திருவுருங்களும் உள்ளன, நம்மாழ்வார் திருவடியில் இராமானுஜர் மூலவர் திருவுருவம் இருக்கின்றது.

நம்மாழ்வார் கோயிலின் கருவறைக்கு இடப்புறத்தில் ஒரு சிறிய சந்நிதி உள்ளது. இதில் ஆழ்வார் திருநகரி ஆதிநாதப் பெருமாள் திருவுருவமும், நம்மாழ்வார் உற்சவர் திருவுருவமும் இருக்கின்றன.

22) கருடாழ்வார்

நம்மாழ்வார் சந்நிதிக்குக் கிழக்கில் கருடாழ்வார் சந்நிதி இருக்கின்றது. இச்சந்நிதியில் கருடாழ்வார் 4 மீட்டர் உயரத்தில் 2 மீட்டர் உயரமுள்ள பீடத்தில் வீற்றிருக்கிறார். இங்கு இவரது உற்சவர் திருமேனி நின்ற நிலையில் இருக்கின்றது. இத்திருமேனிக்கு நாள்தோறும் ஆராதனையும், திருமஞ்சனமும் நடை

பெறுகின்றன. இக்கருடாழ்வார் கோயிலுக்கு ஒரு தளமும், ஒரு கலசமும் கொண்ட அழகிய விமானம் இருக்கின்றது. இக்கோயி லின் துவாரபாலகர்களாகச் சுக்கிரீவன், அங்கதன் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

வைகுண்ட ஏகாதசி நாளில் அரங்கநாதர் மோகினி வடிவில் கருடாழ்வார் மண்டபத்தில் எழுந்தருளுகின்றார்.

23) மேலப்பட்டாபிராமர்

மூன்றாம் பிராகாரத்தின் வடமேற்கில் மேலப்பட்டாபிராமர் கோயில், முதலாழ்வார் கோயில், தீர்த்தக்கரை வாசுதேவப் பெருமாள் கோயில் ஆகிய இம்மூன்று கோயில்களும் ஒரே நூற்றுக் கால் மண்டபத்திலிருந்து பிரிக்கப்பட்ட சந்நிதிகளாகும்.

மேலப்பட்டாபிராமர் கோயிலில் கருவறை, உள்மண்டபம். முக மண்டபம் ஆகியவை உள்ளன. சீதை, இலக்குவனர் சத்துருக்கனர் ஆகியோரோடு இராமர் பட்டாபிடேகக் கோலத் தில் இங்குக் காட்சிஅளிக்கிறார். இங்குக் கோதண்டராமர், சீதை, இலக்குவனர், ஆஞ்சநேயர் ஆகியோருடைய உற்சவத் திருமேனிகளும் உள்ளன.

இச்சந்நிதியின் தெற்கில் ஒரு நந்தவனமும், நன்னிலையில் அமைந்த ஒரு கிணறும் இருக்கின்றன.

சித்திரை மாதத்தில் இராமநவமி உற்சவம் பத்து நாள்கள் இங்கு நடத்தப் பெறுகிறது.

ஆதிநாராயணப்பெருமாள்
24) முதலாழ்வார்

பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய இம்மூவருமே முதலாழ்வார்கள். பொய்கையாழ்வார் காஞ்சி புரத்துத் திருவெஃகாவிலுள்ள கண்ணன் கோயில் பொற்றா மரைக் குளத்தில் தோன்றியவர். பூதத்தாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அப்பாலுள்ள மாமல்ல மாதவிப் பூவில் தோன்றினார்; பேயாழ் வார் தேனமர் சோலை மாடமயிலையிலுள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருக்கிணற்றின் செவ்வந்திப் பூவில் தோன் றினார். இம்மூவரும் ஒரு நாள் திருக்கோவலூரில் தங்கியிருந்த போது, அவர்களுக்கு நம்பெருமானனார் அருள் புரிந்தார். இம் மூவரும் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதி களை அருளிச் செய்தனர். இவற்றுள் பொய்கையாழ்வார் பாடல் ஒன்றும், பூதத்தாழ்வார் பாடல்கள் நான்கும், பேயாழ்வார் பாடல்கள் இரண்டும் திருவரங்கநாதர்மீது பாடப்பெற்றவை.

மேலப்பட்டாபிராமர் கோயிலுக்கு வடகிழக்கில் இம்முதலாழ்வார்கள் கோயில் அமைந்திருக்கிறது. இக்கோயிலில் ஆதி நாராயணப் பெருமாள் திருவுருவம் ஒரு புறத்திலும், முதலாழ்வார்கள் உற்சவர் திருமேனிகள் ஒரே வரிசையில் மற்றொரு புறத்திலும் உள்ளன, இம் முதலாழ்வார்களுக்கு முறையே அவ்ரவர்கள் திருநாள்களாகிய, திருவோணம், அவிட்டம், சதயம் ஆகிய நாள்களில் உற்சவம் நடைபெறுகின்றன.

25) தீர்த்தக்கரை வாசுதேவர்

முதலாழ்வார் சந்நிதிக்கு வடகிழக்கில் தீர்த்தக்கரை வாசுதேவர் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வசுதேவர் புதல்வர் வாசுதேவர் (கண்ணன்). இவர் சந்நிதி சந்திர புஷ்கரணித் தீர்த்தத்திற்கு எதிரில் இருப்பதால் இது தீர்த்தக்கரை வாசுதேவர் பெருமாள் சந்நிதி எனக் குறிப்பிடப் பெறுகிறது. இக்கோயிலில் உருக்குமணி, சத்தியபாமை ஆகியோர் திருவுருவங்களுடன் தீர்த்தக்கரை வாசுதேவர் திருவுருவமும் இருக்கின்றது.

இக்கோயில் கருவறையுடன், உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவை உள்ளன.

26) தன்வந்திரி

தீர்த்தக்கரை வாசுதேவர் சந்நிதிக்கு வடகிழக்கில் திருமாலின் சந்நிதியாகத் தன்வந்திரி சந்நிதி உள்ளது. இக்கோயில் கருவறையுடன் உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவை இருக்கின்றன. இச்சந்நிதியில் உள்ள தன்வந்திரியின் கையில் ஓர் அட்டைப்பூச்சி உருவம் இருக்கிறது. நோய்வாய்ப்பட்டவர்கள் மீது அட்டைப்பூச்சியை விட்டு அது நோயாளியின் தீய உதிரத்தை உறிஞ்சுமாறு செய்யும் முறையை இது குறிக்கிறது. ஆண்டில் குறிப்பிட்ட ஒரு நாளில் அரங்கநாதருக்கு நாவல்பழம் திருவமுதுமுன்புசெய்விக்கப்பட்டது.[10]

27) சந்தான கோபாலக்கிருஷ்ணரும். இராத ஆலிங்கனக் கிருஷ்ணரும்

இச்சிறு கோயில், தன்வந்திரி கோயிலையடுத்துச் சந்திர புஷ்கரணிக்கு வடமேற்கில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இதில் மேல்புறத்தில் சந்தான கோபாலக்கிருஷ்ணர் திருவுருவம் நின்ற நிலையில் உள்ளது. இத் திருவுருவத்திற்குக்

10 கோயில் ஒழுகு 43

கிழக்கில் இராத ஆலிங்கனக் கிருஷ்ணர் திருவுருவம் நின்ற நிலையில் இருக்கிறது.

28) வியாசர்

சந்தான கோபாலக்கிருஷ்ணர், இராத ஆலிங்கனக்கிருஷ்ணர் கோயிலுக்குக் கிழக்கிலுள்ள இச் சிறிய கோயிலில், பாரதம் இயற்றிய வியாசர் திருவுருவம் நிலை நாட்டப் பெற்றுள்ளது. இச் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

29) வராகப்பெருமாள், வரதராஜப் பெருமாள், புருடோத்தமர்

வியாசர் சந்நிதிக்குக் கிழக்கில் தெற்கு நோக்கி இச்சந்நிதி அமைந்துள்ளது. இதில் வராகப் பெருமாள், வரதராஜப் பெருமாள், புருடோத்தமர் ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன.

30) இராமர்

தன்வந்திரி சந்நிதிக்குக் கிழக்கில் இராமர் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. இச்சந்நிதியில் இராமர், இலக்குவனர், சீதை ஆஞ்சநேயர் அகியோரின் திருவுருவங்கள் தெற்கு நோக்கி உள் ளன. இச்சந்நிதியில் கருவறைக்கு முன்செல்லும் வழியில் உள் மண்டபம் இருக்கிறது.

இராமநவமித் திருவிழா ஒருநாள் இங்கு நடைபெறுகிறது.

இச்சந்நிதியின் மேற்குப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறு குலசேக ஆழ்வார் திருவுருவமும், வரதரர்ஜப் பெருமர்ள் திருவுரு வமும் இருக்கின்றன.

31) குலசேகராழ்வார்

குலசேகராழ்வார் பெருஞ்சேனையுடன் ஆட்சி புரிந்து வந் தார். வால்மீகி இராமாயணத்தைச் செவிக்கினிய சொல்லாகக் கொண்டு பற்றற்ற நிலையில் திருவரங்கத்தில் வாழ்ந்துவர எண்ணினார். அவ்வாறே தமது நாட்டின் ஆட்சியைத் தம் புதல் வரிடம் ஒப்புவித்துவிட்டுத் திருவரங்கம் சென்று அரங்கத்தம் மானைக் கண்ணாரக் கண்டு, வாயார வாழ்த்தி வாழும் நாளில், 'பெருமாள் திருமொழி' என்னும் திவ்வியப் பிரபந்தத்தை அருளிச் செய்தார். இதிலுள்ள 31 பாடல்கள் அரங்கநாதர் மீது பாடப்பெற்றவை.

ஆண்டுதோறும் மாசி மாதம் தெப்பத் திருவிழாவில் மூன்று நாள்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பாடப்பெற்ற பின் குலசேகர ஆழ்வார் திருவுருவம் சித்திரை வீதி உலா வந்து பின் கோயில் வந்து சேரும்.

32) பரமபதநாதர்

இராமர் சந்நிதிக்குக் கிழக்கில் பரமபதநாதர் சந்நிதி உள்ளது. இச்சந்நதியில் சீதேவி, பூதேவி, நீலாதேவி ஆகியோருடன் பரமபதநாதர் தெற்கு நோக்கி இருக்கின்றரர். ஆண்டாள் திருவுருவம் கிழக்கு நோக்கியும், நாதமுனிகள், விசுவசேனர் உடையவர், பிள்ளை லோகாசாரியார் ஆகியோரின் திருவுருவங்கள் மேற்கு நோக்கியும் உள்ளன. பரமபதம் விண்ணுலகில் உள்ளது. வைணவ நூற்றெட்டுத் திவ்விய தேசங்களில் இது இறுதித் தலமாக இருக்கிறது.

33) கீழ்ப்பட்டாபிராமர்

வடமேற்கிலுள்ள மேல்பட்டா பிசாமர் கோயிலில் இருப்பது போன்று, அதற்கு நேரொத்தவாறு கீழ்ப்பட்டாபிராமர் கோயில் மேற்கு நோக்கி இருக்கின்றது. இங்கு இலக்குவனர், பரதர், சத்துருக்கனர், ஆஞ்சநேயர் ஆகியோரோடு பட்டாபிடேகக் கோலத்தில் இராமர் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறார். இவர்களின் உற்சவத் திருவுருவங்களும் இங்குள்ளன.

34) சீனிவாசப் பெருமாள்

கீழ்ப்பட்டாபிராமர் சந்நிதிக்குத் தெற்கில் சீனிவாசப் பெருமாள் சந்நிதி மேற்கு நோக்கி இருக்கின்றது. இங்குச் சீனிவாசப் பெருமாள் உற்சவர் திருமேனி மட்டும் உள்ளது.

35) போஜ ராமர்

சீனிவாசப் பெருமாள் சந்நிதிக்குத் தெற்கில் போஜராமர் சந்நிதி இருக்கின்றது. இச்சந்நிதியில் இராமர், சீதை, இலக்குவனர், ஆஞ்சநேயர் ஆகியோரின் உற்சவத் திருவுருவங்கள் உள்ளன.

இப்பிராகாரத்தில் இராமர் கோயில் ஐந்து இடங்களில் உள்ளன. இதற்கு ஒரு காரணம் கற்பிக்கப்படுகிறது. இராமர் திருவரங்க விமானத்தை விபீடணரிடம் கொடுத்து விட்டார்.

அதனைப் பிரிந்த நிலையில் அதனைப் பார்த்து இன்புறலாம் என்பதற்காக இராமர் பல வடிவங்கள் கொண்டு இங்கு எழுந்தருளியுள்ளார் என்பது ஒரு கருத்தாகும்.

36) வேணுகோபாலர்

போஜராமர் சந்நிதிக்குத் தெற்கில் இச்சந்நிதி மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. கோபாலர் பின்னமரத்தின் அடியில் எட்டுக் கைகளுடன், கையில் புல்லாங்குழல் ஏந்தி, ஆதிசேடன் படத்தின்கீழ் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். வேணுகோபாலர் திருவுருவத்தின் திருவடியில் பசு ஒன்று அவரது புல்லாங்குழல் இசையில் திளைத்து, மெய்மறந்து நிற்பதுபோல் இத்திருவுருவம் அமைந்துள்ளது. உருக்குமணி, சத்தியபாமை, இராதை, சுகதேவர் ஆகியோர் திருவுருவங்களும் இங்கு இருக்கின்றன.

37) திருமழிசையாழ்வார்

பார்க்கவ மாமுனிவர் ஒரு வேள்வி புரிந்து அதில் நாராயணனை வழிபட்டார். அதன் பயனாக, அவர் துணைவியர் ஒரு மகவைப் பெற்றெடுத்தார். இக்குழந்தை திருவாளன் என்போராலும் அவர் துணைவியார் பங்கயச் செல்வியாராலும் வளர்க்கப் பெற்றுப் பின்னர் திருமழிசை ஆழ்வாராகப் புகழ் எய்தியதை வரலாறு கூறுகிறது.

திருமழிசை ஆழ்வாரின் பெருமைகளை உணர்ந்திருந்த அந்நாட்டு மன்னர் திருமழிசை ஆழ்வாரைக்கொண்டு தம்மீது பாடல் இயற்றப் பெற விரும்பினார். இதற்காக, திருமழிசை ஆழ்வாரின் மாணவராகிய கணிகண்ணரை அம்மன்னர் வரவழைத்துத் தம்மீது திருமழிசை ஆழ்வார் பாடல் இயற்றவேண்டுமெனத் திருமழிசை ஆழ்வாரிடம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கணிகண்ணரிடம் தெரிவித்தார். பெருமாள்மீது துதிப்பாடல்களை திருமழிசை ஆழ்வார் இயற்றுவாரன்றி மனிதர், மன்னர் ஆகியோர் மீது பாடல் இயற்றார் என்பதைக் கணிகண்ணர் அம்மன்னருக்குத் தெளிவாக எடுத்துரைத்தார். கணிகண்ணர் தெரிவித்த இவ்வெதிர்ப்பை அம்மன்னர் எதிர்பார்க்கவில்லை. உடனே கணிகண்ணர்மீது சீற்றம் கொண்டு கணிகண்ணரை நாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என அம்மன்னர் ஆணை பிறப்பித்தார். இதனைக் கேள்வியுற்ற திருமழிசையாழ்வார் ஆங்குக் காஞ்சிக் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமாளை நோக்கி,

''கண்கண்ணன் போகின்றான்;
காமருபூங் கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க
வேண்டா! துணிவுடைய
செந்நாப் புலவனும்
செல்கின்றேன்; நீயும் உன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''

என்னும் பாசுரத்தைப் பாடித் தம் மாணவராகிய கணிகண்ணரைப் பின் தொடர்ந்தார்.

அப்போது அக்கோயிலில் எழுந்தருளிய பெருமாள் தம் படுக்கையைச் சுற்றிக் கொண்டு தம் பெரிய பிராட்டியாருடன், ஆழ்வாரைப் பின் தொடர்ந்து செல்வராயினர். முன்னே கணி கண்ணர், பின்னே திருமழிசையாழ்வார், இறுதியில் பெருமாள்— இப்படி மூவரும் போவதைக் கண்டு மக்கள் பலர் பின்தொடர்ந்து சென்றனர். இதனைக் கண்ணுற்ற வேந்தர் தாம் புரிந்த குற்றத் தினை உணர்ந்து கணிகண்ணரைத் தேடிச் சென்று நகர் திரும்பு மாறு கணிகண்ணரிடம் வேண்டினர், அவரும் ஆழ்வாரின் அருளை நாடினார். ஆழ்வாரும் பெருமாளை நோக்கி,

''கணிகண்ணன் போக்கொழிந்தான்,
காமருபூங் கச்சி
மணிவ்ண்ணா! நீ கிடக்க
வேண்டும்: துணிவுடைய
செந்நாப் புலவனும்
செலவொழிந்தேன், நீயும் உன்தன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்''

என்று தாம் முன்பு பாடிய பாசுரத்தையே மாற்றிப் பாடினார், இதன் பயனாகப் பெருமாளும் மக்களும் ஊர் திரும்பினர்.

திருமழிசை ஆழ்வார் கேட்டுக்கொண்ட வண்ணம், அருள் புரிந்த பெருமாள் 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்னும் பெயரில் விளங்குவாராயினர். இப்பெயர் வடமொழியில் 'யாதோத்காரி' என வழங்கி வருகிறது.

இத்தகைய பேரருள் எய்திய திருமழிசை ஆழ்வார் கும்ப கோணத்தில் வாழ்ந்துவந்த காலத்தில் திருமால்மீது தாம் இயற் றிய நூல்களைக் காவிரியில் விட, அவற்றில் அவர் அருளிய 'திருச்சந்த விருத்தம்', நான்முகன் திருவந்தாதி' ஆகிய இவ்

விரண்டு பிரபந்தங்கள் மட்டும் ஆற்றின் போக்கை எதிர்த்து ஆழ்வார் திருவடிகளையடைந்தன. அவற்றிலுள்ள பதினான்கு பாடல்கள் அவர் திருவரங்கநாதர்மீது பாடியவை.

திருமழிசை ஆழ்வாருக்கு அருள் புரிந்த யதோத்காரி பெருமாள் மூலவர் உற்சவர் திருவுருவங்கள் இங்குள்ளன.

திருமழிசை ஆழ்வார் திரு நட்சத்திரத்தின் போது மூன்று நாள்கள் திருவிழா நடைபெறுகிறது. அப்போது இவர் சித்திரைத் திருவீதியில் உலா வருகிறார்.

இக்கோயிலில் எம்பார் சந்நிதி இருக்கின்றது. இவர் இராமானுஜரின் மாணவர். இவர் மாணவர்கள் பட்டர் முதலியோர்கள். இவருக்கு 'இராமானுஜர் பதச்சாயையார்' 'கோவிந்தராஜர்' என்னும் பெயர்களும் உண்டு. இராமானுஜருக்குப் பின் இவர் திருவரங்கர் கோயிலின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். அப்போது வைணவ சமயத்தலைவராக இருந்து வந்தார்.

எம்பார் திருநட்சத்திரம் தை மாசம் புனர்பூசம் ஆகும். இந் நாளில் இவர் விழா கொண்டாடப்படுகிறது.

38) திருக்கச்சி நம்பிகள்

நம்மாழ்வார் சந்நிதிக்குக் கிழக்கில் திருக்கச்சி நம்பிகள் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது, திருக்கச்சி நம்பிகள் பூந்தமல்லியில் வைசியர் குலத்தில் தோன்றியவர் ஆவர். இவர் காஞ்சி வரதராசர் பெருமாளிடம் பேரன்பு கொண்டிருந்தார். இவரை இராமானுஜர் தம் குருவாக ஏற்றுக்கொண்டிருந்தார். பெரிய நம்பிகளின் அறிவுரையைப்பெறுமாறு இராமானுஜருக்குத் திருக்கச்சிநம்பிகள் எடுத்துரைத்தார். அவ்வாறு இராமானுஜர் பெரிய நம்பிகளிடமிருந்து வாழ்த்துப் பெற்றார்.

சிறிது காலத்திற்குப் பின்னர், கச்சி நம்பிகள் காஞ்சிபுரத் திற்குத் திரும்பினார். ஆளவந்தாரிடம் உபதேசம் பெறக் காஞ்சியிலிருந்து திருவரங்கம் கால்நடையாகச் சென்ற கச்சிநம்பிகளைப் பெரிய நம்பிகள் ஆளவந்தாரிடம் அறிமுகம் செய்வித்தார். ஆளவந்தாரும் கச்சிநம்பிகளுக்குப் பஞ்சசமஸ்காரம் செய்வித்துப் பேரருளாளர்தாசர் என்னும் பெயரும் சூட்டினார். இவ்வுதவி செய்வதற்காகக் கச்சி நம்பிகள் ஆளவந்தார் மாளிகைக்குச் சென்று அவருடைய பசுக்களை மேய்க்கும் பணியை ஏற்றுக்கொண்டார். (இதை நினைவுபடுத்தும் வகையில் பூவிருந்தவல்லியிலுள்ள

கச்சி நம்பிகளின் கோயிலில் அவரது திருவுருவத்தின் அருகில் பசுக்களின் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன)

39) மூன்றாம் பிராகாரம் தசமூர்த்திகள்

எட்டுத் திக்குகள், ஆகாயம், நிலம் ஆகிய இப்பத்து இடங்களிலுள்ள தேவதைகளுக்கு நீருடன் கூடிய அன்னத்தைச் சேர்ப்பித்தலே 'தசமூர்த்திகள் பலி சாதித்தல்' எனப்படும். திருவிழா நாள்களில் நாள்தோறும் பெருமாள் திருவீதியில் புறப்படுவதற்கு முன், இத் தசமூர்த்திகளும் புறப்படுகிறார்கள். இத் தசமூர்த்திகள் வழிபாடு. பத்து வாயுக்கள், பத்து நாடிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்திப் பிராணசக்திக்கு ஊக்கமளிப்பதைக் குறிக்கிறது.

40) அயக்ரீவர், சரசுவதி

காஷ்மீரில் இராமானுஜருக்கு அயக்ரீவர் திருவுருவத்தைச் சரசுவதி தேவி அளித்தார். அயக்ரீவர் குதிரை முகத்துடன் கூடிய திருமாலின் அவதாரத் திருவுருவமாம் இத்திருவுருவங்கள் இரண்டும் இங்குள்ளன.

41) இரண்டாம் பிராகாரம்-சங்கநிதி, பதுமநிதி

இரண்டாம் பிராகாரத்தில் உள் நுழையும்போது உள்பக்கத்தில் ஒருபுறம் சங்கநிதியும், மறுபுறம் பதுமநிதியும் துவார பாலகர் போல் காணலாம். சங்கநிதி, பதுமநிதி என்னும் இச் செல்வங்கள் யாவும் அன்பர்களுக்குக் கிடைக்கும் என்பதை இத் திருவுருவங்கள் காட்டுகின்றன.

42) சேனை முதலியார்

இரண்டாம் பிராகாரத்தின் வடகிழக்கில் சேனை முதலியார் என்கிற விசுவசேனர் சந்நிதி உள்ளது. இவர் அரங்கநாதருக்கு அமைச்சராகவும், படைத்தலைவராகவும் இருப்பவர். இவரது உற்சவர் திருவுருவம் நின்ற நிலையில் இருக்கின்றது. இத்திருவுருவத்தின் அருகில், அனுமர், விபீடணர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. பெருமாளின் ஆணைகள் சேனை முதலியார் வழியாக அறிவிக்கப்படுகின்றன. பெருமாள் வெளியில் செல்லும் போது தமது பொறுப்பைச் சேனை முதலியாரிடம் ஒப்புவிப்பார். அப்போது அவருக்கு அரங்கநாதர் மாலையிடுவார். பெருமானுக்குச் சமர்ப்பிக்கப்பெறும் நைவேத்தியங்கள் அனைத்தும் இவருக்கும் படைக்கப்படுகின்றன.

விபீடணர் திருவரங்க விமானத்தை விட்டுச் செல்வதற்கும் முன் அரங்கநாதர் தெரிவித்த அறிவுரைக்கேற்ப, விபீடணர் ஆதிபிரமோற்சவத்தைத் தொடங்கினார். அதன் அங்குரார்ப் பனச் சடங்குகளில் அவர் ஈடுபட்டார், இதைக் காட்டுகிற வகை யில் அவர் திருவுருவம் இங்குள்ளது.

43) துலுக்க நாச்சியார்

கி. பி. 1371–ஆம் ஆண்டில் மாலிக்காபூர் தலைமையில் முக மதியர்கள் திருவரங்கத்தின்மீது படையெடுத்து அக்கோயிலின் கருவூலத்திலிருந்த விலை மதிப்புடைய பொருள்களையும். உற் சவத் திருமேனியையும் தில்லிக்கு எடுத்துச் சென்றார்கள். அத் திருவுருவம் அம்முகமதிய மன்னரின் அரண்மனையில் இருந்த போது, அம்மன்னரின் புதல்வி அதனைப் பேரன்போடு வழிபட்டு வந்தாள். பின்னர்த் திருவரங்கத்தில் அமைதி நிலவியபோது, பேரருளாளர்சிலர் மன்னரை அணுகித் திருவரங்கநாதரின் திருவுரு வத்தைத் தங்களிடம் திருப்பித் தந்து விடுமாறு வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளை ஏற்று, அத்திருவுரு வம் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட அம்மன்னர் ஏற்பாடு செய்தார். அத்திருவுருவம் பின்னர்திருவரங்கநாதர்திருக்கோயில்கரு வறையில் நிலைநாட்டப் பெற்றது.

இதனை அறிந்த அம் மன்னரின் மகள் தனது மனத்தைக் கவர்ந்த அரங்கநாதர் திருவுருவத்தை நாடித் திருவரங்கத்திற்கு விரைந்து வந்தாள். அதற்குள் அத் திருவுருவம் கருவறையில் நிலைபடுத்தப்பட்டதைக் கண்டு மனம் நொந்து அத் திருவுருவத் திலே திளைத்துப் பின் மறைந்தாள். அம்மன்னர் இதனை அறிந்து இக்கோயில் பராமரிப்புக்காகச் சில கிராமங்களை அளித் தார். இப்பெண்மணியின் வரலாறு ஆண்டாள் வரலாற்றிற்கு ஒரு வகையில் ஒத்துள்ளது.

இந்நிகழ்ச்சியை உள் பிராகாரத்தில் வடகிழக்கில் இவரது பெயரில் உள்ள துலுக்க நாச்சியார் சந்நிதி நினைவுபடுத்துகிறது. இச்சந்நிதியில் சித்திர வடிவில் துலுக்க நாச்சியாரின் உருவம் தீட்டப் பெற்றுள்ளது.

துலுக்க நாச்சியார் நினைவாக, 'ரொட்டி. பால்' முதலியவை திருவமுது செய்விக்கப்படுகின்றன.

44) சேரகுல நாச்சியார்

சேரகுலவல்லி சேர மன்னரின் புதல்வியாராவர். ஆண்டாள், துலுக்க நாச்சியார் ஆகியோரின் வரலாற்றுக்கு ஒத்தவாறு சேர

குலவல்லி வரலாறும் அமைந்துள்ளது. சேரகுலவல்லி திருமாலின் அழகில் ஈடுபட்டு அவரையே மணந்து கொண்டார் என்பது இச்சந்நிதி காட்டுகின்றது, சேரகுலவல்லியார் சந்நிதி காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலிலும் உள்ளது. காஞ்சிபுரத்தில் வரதராஜப்பெருமாள் கோயிலில் சேரகுலவல்லி நாச்சியார் நின்ற நிலையில் உள்ளார். ஆனால் திருவரங்க அரங்கநாதர் கோயிலில் சேரகுலவல்லியார் திருவுருவம் அமர்ந்த நிலையில் இருக்கிறது. இவர் குலசேகராழ்வார் பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்னும் கருத்து நிலவி வருகிறது. இராம நவமி காலத்தில் அரங்கநாதரும். சேரகுலவல்லியாரும் ஒரே ஆசனத்தில் அமர்கிறார்கள்.

45) கிருஷ்ணர்

இரண்டாம் பிராகாரத்தில் தென்கிழக்குக் கோடியில் கிருஷ்ணர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. இச்சந்நிதியில் நவநீத கிருஷ்ணர், உருக்குமணி. சத்தியபாமை ஆகியோரின் உற்சவத் திருவுருவங்கள் இருக்கின்றன. பரவாசுதேவர், தேவகி உரோகிணி முதலியோர் திருவுருவங்கள் இங்குள்ளன. கிருஷ்ணருக்குப் பாலூட்டுவதற்குப் பரவாசுதேவர் கையில் பால் கலசம் உள்ளது.

இக்கோயிலின் கருவறையுடன் உள்மண்டபம் இருக்கின்றது

இராஜமகேந்திரன் திருவீதியால் சூழப்பெற்ற நீண்ட சதுர (40 மீட்டர் 15 மீட்டர்) அமைப்பில், கீழ்க்காணும்பகுதிகள் அடங்கியுள்ளன.

1. உச்சிச் சிகரத்துடன் கூடிய வட்டக் கருவறை.
2. உள் மண்டபம்
3. திருவுண்ணாழியையும், கருவறையும் சூழ்ந்துள்ள சதுரப் பிராகாரம் (இப்பிராகாரம் தருமவர்மர் திருவீதி எனப்படும்)
4. காயத்திரி மண்டபம் என்கிற முகமண்டபம்.
5. கருவறை நோக்கியுள்ள கருடன் கோயிலைக் கொண்டு உள்ள பெரிய திருமண்டபம் அல்லது அழகிய மணவாளர் திருமண்டபம்.

முதல் பிராகாரம் - 46) அரங்கநாதர்

கருவறைச் சந்நிதி நுழைவாயிலில் ஜெயன், விஜயன் என்னும் துவாரபாலகர் இருவர் உள்ளனர்.

காயத்திரி மண்டபத்தில் தென்மேற்கில் ஆதிவராகர் திருவுருவம் உள்ளது. முதல் பிராகாரத்தில் கருவறை வெளிச்சுவரில் மேற்கு நோக்கி யானை முகத்துடன் கூடிய கணபதி திருவுருவமும், கணபதி திருவுருவத்திற்கு வடமேற்கில் யோக அநந்தர் திருவுருவமும், யோக அநந்தர் திருவுருவத்திற்குக் கிழக்கில், யோக நரசிம்மர் திருவுருவமும், யோக நரசிம்மர் திருவுருவத்திற்குத் தென்மேற்கில், கருவறையில் கிழக்கு வெளிச்சுவரில் துர்க்கையின் திருவுருவமும் இருக்கின்றன. காயத்திரிமண்டபத்தில் தென்கிழக்கில் நாராயணர் திருவுருவம் உள்ளது.

அரங்கநாதர் கருவறை வட்ட வடிவில் இருக்கிறது. இக்கருவறையின் முன் சிறு சதுர மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் இரண்டு தூண்கள் இருக்கின்றன. இந்தத் தூண்கள் 'திருமணத் தூண்கள்' எனப்படும். இத் தூண்கள், சிகரத்தில் மீதுள்ள பரவாசுதேவருடைய திருவடியைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றன. திருவரங்கநாதர் கருவறையின் மீது பொன்விமானம் கிழமேலாக நான்கு கலசங்களும், தென்வடலாக நான்கு கலசங்களுமாக எட்டுக் கலசங்களுடன் திகழ்கிறது. இவ்விமானத்தில் பரவாசுதேவர் நின்ற கோலத்தில் தெற்கு நோக்கிக் காட்சியளிக்கிறார்.

கருவறையில் அரங்கநாதர் மூலவர் ஆதிசேஷன்மீது சயனம் கொண்ட நிலையில் தெற்கு நோக்கிக் காட்சியளிக்கிறார்.

மூலத்தானத்தில் மூலவர் அரங்கநாதர். கர்மார்ச்சி. கௌதுகபேரர் எனப்படும் உற்சவ பேரராகிய நம்பெருமாள். பலி பேரராகிய செல்வர், யாகபேரர், தீர்த்தபேரர், சயன பேரராகிய செல்வர் ஆகிய பஞ்ச பேரர்கள் இருக்கின்றனர். உச்சிக்காலப் பூசையில் கர்மார்ச்சி பிம்பத்திற்குப்பன்னிரண்டு கலசங்கள் மூலம் திருமஞ்சனம் நடைபெறுகிறது. கௌதுக பேரர் என்கிற நம் பெருமாள் மற்ற உற்சவங்களுக்கு எழுந்தருளி உலாக் கண்டருள்கிறார். யாக மூர்த்தியாகிய திருவரங்க மாளிகையார் பிரம்மோற்சவக் காலங்களிலும், பவித்தோற்சவக் காலங்களிலும் யாகசாலைக்குப் புறப்பட்டு, யாகசாலையில் யாகத்திற்கு அதிதி விஷ்ணு என்கிற முறையில் எழுந்தருள்கிறார். தீர்த்த பேரர் என்னும் செல்வர் பிரம்மோற்சவங்களின் போதும், பவித்ரோற்சவம் மற்றும் ஊஞ்சல் திருவிழாவின்போதும் தீர்த்தவாரிக்கு எழுந்தருள்கிறார்.

உற்சவ மூர்த்தியாகிய அழகிய மணவாளருக்குப் பின்னழகிய பெருமாள் என்னும் பெயர் வழங்கி வருகிறது. இவரது பின்ன

முகைப் பள்ளி கொண்டுள்ள அரங்கநாதப் பெருமாள் கண்டு களிக்கிறார், திருமகளும் பூமகளும் பின்னழகிய பெருமாளு டைய இருபுறங்களிலும் அமர்ந்து, அவரது அழகில் ஈடுபட்டு அந்நிலையில் மகிழ்கிறார்கள். பின்னழகிய மணவாளரின் பின்னழகைப்பாதுகாப்பார் போல் அவருக்கு எதிரில்கருடன் இருக் கின்றார் வழிபடும் அன்பர்களுடைய பாவம் நீங்கப் பூமகளும் திருமகளும் பின்னழகிய மணவாளரிடம் பரிந்துரை செய்கிற நிலையில் அவ்விருவரும் அவ்வாறு அமர்ந்திருக்கிறார்கள்.

7) தீர்த்தங்கள்

காவிரிப் புராணமும் துலாக்காவிரி மகாத்மியமும் திருவரங் கம் திருக்கோயிலுக்கு ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன எனக் கூறுகின்றன. அத்தீர்த்தங்களின் விவரங்களை அறிஞர்கள் ஒரு வாறு கீழ்க்காணுமாறு எடுத்துரைக்கிறார்கள்.

1. சந்திர புஷ்கரணி
2. வகுள தீர்த்தம்
3. சப்பு தீர்த்தம்
4. அசுவத் தீர்த்தம்
5. பலாசத் தீர்த்தம்
6. புன்னாகத் தீர்த்தம்
7. பில்வத் தீர்த்தம்
8. கதம்பத் தீர்த்தம்
9. ஆம்பரத் தீர்த்தம்

7.1) சந்திர புஷ்கரணி

இத் தீர்த்தம் வட்ட வடிவக் குளம், இது நான்காம் பிரா காரத்தின் வடக்கில் 25 மீட்டர் சதுரப் பரப்பில் அமைந்துள்ளது. இதன் தண்ணீர் ஆழம் 8 மீட்டர். இதனுள் வற்றாது நீரூற்று கள் உள்ளன.

இத்தீர்த்தத்திற்கு 3 மீட்டர் உயரமுள்ள கனத்த கைப்பிடிச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இதற்கு இறங்கு படித்துறை கிழக்கி லும், மேற்கிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மக்கள் நீராடு கிறார்கள்.

1. சித்திரை மாதம் விருப்பன் திருநாள்
2. பவித்திரோற்சவத் திருநாள்
3. வைகுண்ட ஏகாதசியில் இராப்பத்துத் திருநாள்
4. பூபதி திருநாள்
5. ஊஞ்சல் திருநாள்

ஆகிய திருநாள்களில் செல்வர் சந்திர புஷ்கரணியில் தீர்த்த வாரி கண்டருளுகிறார்,

சந்திர புஷ்கரணி இருதய கமலம். சிரசுத் தானத்தில் விளங்கும் சந்திரமண்டலத்தின் அமுத கிரகணங்கள் அமுதம் பொழிகின்றன. இந்த அமுதம் இங்குப் பிரதிபலிக்கிறது. இருதயத்தைச் சுற்றி எட்டு தளங்கள் உள்ளன. இதுபோன்று இத் தீர்த்தத்தைச்சுற்றி எட்டுத் தீர்த்தங்கள் விளங்குகின்றன.

7. 2) வகுளத் தீர்த்தம்

இராணி மங்கம்மாள் மண்டபத்திற்கு அருகில், சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் திருவானைக்காக் கோயில் வெளிப் பிராகார மதிலுக்கு வடக்கில் இத்தீர்த்தம் உள்ளது. ஆதி பிரம் மோற்சவமாகிய பங்குனிமாத உற்சவத்தில் எட்டாவது திரு நாளில் பெருமான் இங்குத் தீர்த்தவாரி கண்டருளுகிறார்.

7. 3) சம்பு தீர்த்தம்

இது திருவானைக்காக் கோயிலில் இருக்கிறது- முன்பு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும், ஆதி பிரம்மோற்சவத்தில் எட்டாம் நாளிலும் பெருமாள் சம்பு தீர்த்தத்திற்கு எழுந்தருளியதாகக் கூறப்படுகிறது, ஆனால் தற்போது இது நடைமுறையில்இல்லை.

7. 4) அசுவத் தீர்த்தம்

இது திருவரங்கம் அரசு மருத்துவமனைக்குக் கிழக்கில் உள்ளது. இதில் ஆதி பிரம்மோற்சவத்தின் எட்டாம் நாளில் சடாரி தீர்த்தவாரி கண்டருள்கிறார்.

7. 5) பலாசத் தீர்த்தம்

இது ஜீயபுரம் ஆஸ்தான மண்டபத்தில் உள்ளது. ஜீயபுரத்திற்கு எழுந்தருளும்போது ஆதிப்பிரம்மோற்சவமாகிய பங்குனித் திருவிழாவின் மூன்றாம்நாளில் இங்குப் பெருமாள் தீர்த்தவாரி கண்டருள்கிறார்.

6) புன்னாகத் தீர்த்தம்

இது மேலூர் விருட்சி மண்டபத்தில் உள்ளது. ஆதிப்பிரம் மோற்சவத்தின் மூன்றாம் நாள் ஜீயபுரத்திற்கு எழுந்தருளும் போது இத்தீர்த்தத்தில் பெருமாள் தீர்த்தவாரி கண்டருள்கிறார்.

7) பில்வத் தீர்த்தம்

இது திருச்சி - சேலம் நெடுஞ்சாலையில் திருவாசி என்னும் இடத்தில் இருந்தது எனவும். இது குணசீலமாக மாறியிருக்க லாம் எனவும் கருதப்படுகிறது. முன்பு இத்தீர்த்தத்தில் சடாரி தீராட்டப்பட்டது, ஆனால் இப்பொழுது இது நடைபெறுவது இல்லை.

8) கதம்பத் தீர்த்தம்

இது லால்குடி வட்டம் பிச்சாண்டார் கோயில், உத்தமர் கோயில் ஆகியவற்றிற்குத் கிழக்கேயுள்ளது. மாசி மாதத் தெப்பத் திருவிழாவின் ஐந்தாம் நாளில் தாழக்குடிக்குப் பெரு மாள் எழுந்தருளும்போது இங்குத் தீர்த்தவாரி கண்டருள்கிறார்.

9) ஆம்பர தீர்த்தம்

இது லால்குடி வட்டம் சாலையில் உள்ள தாழக்குடி ஆஸ் தான மண்டபத்தில் உள்ளது, மாசித் தெப்பத் திருவிழாவின் ஐந்தாம் நாளில் தாழக்குடிக்கு எழுந்தருளும் சமயம் பெருமாள் இத்தீர்த்தத்திற்கு எழுந்தருள்கிறார்.

மேலே குறிப்பிட்ட ஒன்பது தீர்த்தங்கள் தவிர மற்றத் தீர்த்தங்களும் உள்ளன. அவையாவன:-

அ) சூரிய புஷ்கரணி

இக்கோயிலின் நான்காம் பிராகாரத்தில் கருடாழ்வார் கோயி லுக்குக் கிழக்கில் இத்தீர்த்தம் 5 மீட்டர்ச் சதுரப்பரப்பில் உள் ளது. இதற்கு ஒழுங்கான நீர்வரத்து இல்லை. ஆதலால் வேனிற்காலத்தில் இதன் நீர் வற்றி விடுகிறது.

ஆ) தென்திருக்காவிரி - அம்மா மண்டபம் படித்துறை

அரங்கநாதரின் திருவடியைக் காவிரி தொழுவதைப் பெரியாழ்வார். 'காவிரி வந்து அடிதொழும் சீரரங்கமே' எனக் குறிப்பிடுகிறார்.[11] குலசேகர ஆழ்வார், 'தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையில் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணி'[12] எனப் போற்றுகிறார். ஆதலால் காவிரி திருவரங்கப் பெருமாளின் தேவியாகக் கருதப்படுகிறார், ஆதலால் ஆடிப் பதினெட்டுப் பெருக்கின்போது பெருமாள் இங்கு எழுந்தருளும்போது, காவிரி

11. பெரியாழ்வார் திருமொழி - 4, 9, 7.
12. குலசேகர ஆழ்வார் பெரிய திருமொழி - 1, 1,

யில் குங்குமம், தாலி, பொட்டு, புடவை, மலர்கள் முதலியவை சிறந்த திருமணப் பொருள்களாகச் செலுத்தப்படுகின்றன.

இ) வடதிருக்காவிரி - கொள்ளிடம் திருமங்கை மன்னன் படித்துறை

ஆதிபிரம்மோற்சவத்தின் பங்குனித் திருநாளில் கொள்ளிடத்தில் செல்வர், நீராட்டுக் கண்டருள்கிறார். இங்கு ஆண்டு தோறும் சமயபுரம் மாரியம்மன் அரங்கநாதரின் உடன்பிறந்தவர் என்ற முறையில் எழுந்தருளும்போது, அரங்கநாதர் கோயிலிருந்து சீர்வரிசைகள் இம் மாரியம்மனுக்கு அனுப்பப்படுகின்றன.

ஈ) தெப்பக் குளம்

இக்கோயிலின் மேற்குப் பகுதியில் ஏழு பிராகாரங்களுக்கு அப்பால் மேற்கில் இத் தெப்பக்குளம் 625 மீட்டர்ச் சதுரப்பரப்பில் அமைந்துள்ளது. இதன் நாற்புறமும் கைப்பிடிச் சுவர்கள் உள்ளன. இதன் நடுவில் 16 தூண்களையுடைய நீராழி மண்டபம் உள்ளது. மாசி மாதத்தில் இங்குத் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது.

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலின் பல உட்கோயில்களில் தனித் தீர்த்தக் கிணறுகள் இருப்பது இத்திருக்கோயிலின் தனிச் சிறப்பாகும். கோயிலுக்கு அந்தஅந்தத் தீர்த்தக் கிணறே பயன் படுகிறது. மேலும், இக்கோயிலின் உட்கோயில்கள் பலவற்றில் தனித் தீர்த்தக் கிணறும், தனி நந்தவனமும், தனி மடைப்பள்ளியும் இருப்பது இக்கோயிலின் விரிவாக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.

8. கோபுரங்கள்

விளக்கம்

கோ, புரம் என்னும் இரு சொற்கள் 'கோபுரம்' என்னும் ஒரு சொல்லாக அமைந்தது எனவும், மக்கள் உள்பட எல்லா உயிரினங்களும், 'பசுக்கள்' எனக் குறிக்கப்படும் கோக்கள் என வும், பதி [13] எனக் குறிக்கப்பெறும் இறைவனை அக்கோக்கள் அடைவதற்குரிய வாயில் (வழி) கோபுர வாசல் எனவும் ஒரு கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

---

13. பசு பற்றியும், பதி பற்றியும் சைவசித்தாந்தம் எடுத்துக் கூறுகிறது. இதே தத்துவம் வைணவத்திலும் உள்ளது.

மற்றும் கோக்களைப் (பசுக்களை) பாலிப்பவர் (பாதுகாப்ப வர்) கோபாலர். இவ்வாறு மக்களை இறைவன் தம்மிடம் அழைப்பதற்குக் கோபுரம் ஒரு வாயிலாக (வழியாக) அமை கிறது.

கோபுரத்தின் வானோங்கி நிற்கும் கோபுர உயரமும், அதில் பொறிக்கப்பெறும் பல்வேறு தெய்வ உருவச் சிற்பங்களும் நெடுந்தூரத்தில் உள்ளவர்கள் கவனத்தை ஈர்த்து அவர்களுக்குத் தெய்வச் சிந்தனையை ஊட்டுகின்றன.

கோபுரத்தின் பீடத்திலிருந்து இருபுறங்களிலும் தாங்கி நிற் கும் தூண்கள் முதல் தளம் வரையில் உள்ள ஒழுங்கான கருங்கல் கட்டுமானங்களாக உள்ளன. அணி அணியாகவுள்ள தளிகளா கிய பஞ்சரங்களும் பறவைகளின் கூடுகள் போன்ற மாடங்களும் கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவையாவும் கோபுரத் தில் கட்டடக்கலை, சிற்பக்கலை, படிமக்கலை ஆகியவற்றை விளக்குகின்றன.

கோபுரத்தின் பல்வேறு சிறப்புகளை முன்னிட்டுக் ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்னும் ஆன்றோர் வாக்கு ஓர் அறிவுரையாக அமைந்துள்ளது. திருவரங்கம் கோயிலைப் பொறுத்தவரையில் 21 கோபுரங்கள் உள்ளன.

திருவரங்கம் கோயிலின் ஏழாம் பிராகாரத்திற்கு வெளியிலும் ஏழு பிராகாரங்களில் ஒவ்வொரு பிராகாரத்திலும் கோபுரங்கள் உள்ளன. வெளியிலுள்ள கோபுரத்தைக் கடந்து, இப்பிராகாரங் களைச் சுற்றி வலம் வரும் வகையில் ஒருவர் காணக் கூடிய முறையில் இக்கோபுரங்களைப் பற்றி அறிந்துகொள்ளுதல் முறை யாகும்.

இக்கோயிலில் அரங்கநாதர் தெற்கு நோக்கிப் பள்ளிகொண் டுள்ளாராதலால் தெற்கிலிருந்து இக்கோயிலுக்குள் மக்கள் வரு கிறார்கள். இவ்வகையில் இக்கோயிலின் வெளிப்பகுதியிலுள்ள அடையவளைந்தான் வீதியில் முதன்மைக் கோபுரம் உள்ளது. இதுவே இராய கோபுரமாகும்.

8. 2. 1) இராய கோபுரம் (தெற்கு)

திருவரங்கம் கோயிலின் முதன்மைக் கோபுரம் அமைந்துள்ள வீதி திருவரங்கத்தின் எல்லாப் பகுதிகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் அடையவளைந்தான் திருவீதியே. இங்குத் தெற்கில் அமைந்துள்ள பெரிய கோபுரம் இராயகோபுரம். இதனை விசய

நகர மன்னர் அச்சுதராயர் (கி.பி. 1530 - 1542) திருவரங்கத்தில் ஆறுமாத காலம் தங்கியிருந்த காலத்தில் கட்டத் தொடங்கினார். இது காரணமாக இது 'இராயர் கோபுரம்' எனக் குறிக்கப் பெறுகிறது.

கி.பி. 1565-ஆம் ஆண்டில் நடைபெற்ற போரின் விசயநகர ஆட்சியின்வீழ்ச்சி காரணமாகக் கட்டப்படாமலிருந்த இக்கோபுரம் கட்டி முடிக்கப்படுவதற்காக 1979 ஆம் ஆண்டில் திருப்பணி மேற் கொள்ளப்பட்டது இது தற்போது 71 மீட்டர் வரையில் வளர்ந்து ஆசியாவில் மிகப் பெரிய கோபுரமாக விளங்கி வரு கிறது. இதன் கும்பாபிடேக விழா 25—3—1987 ஆம் நாளில் நடைபெறுகிறது.

இக்கோபுரம் 39 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும் கொண்ட 1170 மீட்டர்ச் சதுரப்பரப்பில் அமைந்துள்ளது. இக் கோபுரத்தைக் கடந்து செல்லும் மைய வழி நடை 6·3 மீட்டர் அகலமுடையது. இம்மையப் புறச் சுவர்கள் 12.9 மீட்டர் உயரம் கொண்டுள்ளன. இவ்வழிநடை மீதுள்ள குறுக்கு விட்டப்பகுதி 7 1 1 மீட்டர் அளவு கொண்டிருக்கிறது. இதன் நாற்புறச் சுவர்கள் செங்குத்துக் கல் கட்டிட அமைப்புகளில் தூண்களும், கும்பப் பஞ்சரங்களும், மாடங்களும் உள்ளடங்கியுள்ளன. இக் கோபுர மேற்பகுதிகளைத் தாங்கி நிற்பன போன்ற கணங்களின் உருவங்கள் வடிக்கப் பெற்றுள்ளன. இவை 'கோபுரத் தாங்கி கள்' எனக் குறிக்கப் பெறுகின்றன.

இக்கோபுரத்திற்குப் பதின்மூன்று தளங்களும், பதின்மூன்று கலசங்களும் உள்ளன. கூடுகளும் பஞ்சரச்சாலையும், இதற்கு அணி செய்கின்றன. மையச் சாலையின் இருபுறங்களிலும் துவார பாலகர்கள் திருவுருவங்கள் நிலைப்படுத்தப் பெற்றுள் ளன. மற்றத் தெய்வங்களின் திருவுருவங்களும் ஆங்காங்கு அமைக்கப் பெற்றுள்ளன.

8. 2. 2) மொட்டைக் கோபுரம் (மேற்கு)

இக்கோபுரம் மேற்குப் பகுதியில் 22 1/2 மீட்டர் நீளமும், 14 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல்தளம் இல்லை. இதன் காரணமாக இது மொட்டை கோபுரம் என்ற பெயர் பெற்றுள்ளது. இதன் இருபுறங்களிலும் தூண்கள் தனித்தனியாக இருக்கின்றன.

3) கோபுரம் (வடக்கு)

இக்கோபுரம் 21 மீட்டர் நீளமும், 17 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இது மேற்கு மொட்டைக் கோபுரத்தைவிடச்

சீராக அமைந்திருக்கிறது. இதற்கு மேல்தளம் இருக்கிறது. இதன் தென்புறத்தில் கைப்பிடிச் சுவர்கள் இருக்கின்றன. இதன் உட்புற மாடத்தில் திருமால் திருவுருவமும் இருபுறங்களிலும் மையப் பகுதியில் கருடர் திருவுருவங்களும் காணலாம்.

4) மொட்டைக் கோபுரம் (கிழக்கு)

இக்கோபுரம் 51 மீட்டர் நீளமும், 32 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது. இதற்கு மேல்தளம் இல்லை. இருபுறங்களிலும் தூண்கள் மட்டும் உள்ளன. இது காரணமாக இதற்கு 'மொட்டைக் கோபுரம்' என்னும் பெயர் பொருத்தமாக அமைந்துள்ளது,

8. 3 ஏழாம் பிரகாரம் சித்திரை வீதிக் கோபுரங்கள் அல்லது கலியுகராமன் திருவீதிக் கோபுரங்கள்

1) சித்திரைவீதிக் கோபுரம் (தெற்கு)

இக்கோபுரம் 19 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இக்கோபுரத்தின் பெரும்பான்மை அடித்தளம் நிலத்தின்கீழ்ப் பதிக்கப்பட்டுள்ளது. இதற்கு வரிசையாகத் தூண்கள் இருக்கின்றன. செங்கல்லால் கட்டப்பட்ட இதன் மேல்பகுதி மூன்று தளங்களையும், சிகரத்தில் ஏழு கலசங்களையும் கொண்டுளளது. இதன் மையத்தில் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. தளங்களில் தெய்வச் சுதைத் திருவுருவங்கள் ஆங்காங்குப் பொருத்தப்பட்டுள்ளன.

2) தலையாரி கோபுரம் (மேற்கு)

இக்கோபுரம் 19.39 மீட்டர் நீளமும், 12.72 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் மூன்று தளங்களையும், ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. இதன் நுழைவாயிலில் இருபுறமும் ஆறு தூண்கள் இருக்கின்றன. உள்ளே துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. இதன் மையத்தில் நீண்ட சதுர அமைப்பின் நான்கு கோடிகளிலும் கருடர் திருவுருவங்கள் அஞ்சலி செய்யும் முறையில் அமர்ந்த நிலையில் உள்ளன. இக்கோபுரத்திலிருந்து 200 மீட்டர் தொலைவில் மேற்கே தெப்பக்குளம இருக்கிறது.

3) கட்டைக் கோபுரம் (வடக்கு)

இக்கோபுரம் 15.15 மீட்டர் நீளமும், 12.12 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் 5 தளங்களையும், 7 கலசங்களையும்

கொண்டுள்ளது. இதன் மையப் பகுதியில் துவாரபாலகர், கருடர் ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன.

4 கட்டைக் கோபுரம் (கிழக்கு)

இக்கோபுரம் 35.75 மீட்டர் நீளமும், 25.45 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இது ஏழு தளங்களையும், ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது.

இக்கோபுரம் 'தாமோதரன் கிருஷ்ணன் கோபுரம், எனவும், 'கலியுக ராமன் கோபுரம் எனவும் குறிக்கப்படுகிறது.

இந்தக் கோபுரத்தின் மையத்தில் தளவாயிலுக்கு மேலுள்ள அடுக்குகளில் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் அமைந்துள்ளன. இக்கோபுரத்தில் வாயிற்சுவர்களில் இலட்சுமிநரசிம்மர், திருமால் ஆகியோரின் திருவுருவங்களும், அவர்களின் தேவியர்களின்திருவுருவங்களும், சிற்ப வடிவில் பொறிக்கப்பட்டுள்ளன. இங்கு அவர்களை வழிபடுவோர் திருவுருவங்களும் காணப்படுகின்றன.

8. 4. ஆறாம் பிராகாரம் (உத்தர வீதி அல்லது திருவிக்கிரமன் திருவீதி) கோபுரங்கள்

1. கட்டைக் கோபுரம் (தெற்கு)

இக்கோபுரம் 18.8 மீட்டர் நீளமும் 18 8 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இவ்வாயிலின் இருபுறங்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து தூண்கள் உள்ளன. செங்கல் கட்டட மேல்பகுதி நான்கு தளங்களையும், ஐந்து அடுக்குகளையும், ஏழு கலசங்களையும், கொண்டுள்ளது. இதன் மையப் பகுதியில் துவாரபாலகர்கள் உருவங்களும், மற்றும் சில தெய்வத் திருவுருவங்களும் காணப்படுகின்றன,

2, சக்கிலியன் கோட்டைக் கோபுரம் (மேற்கு)

இக்கோபுரம் 18.8 மீட்டர் நீளமும், 16.97 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் நான்கு தளங்களையும், ஐந்து கலசங்களையும் கொண்டு திகழ்கிறது. இதன் மைய வழியில் இரு புறங்களிலும் தூண்கள் உள்ளன. மையத்தில் கந்தர்வ முகம் காணப்படுகிறது. ஒவ்வொரு தளத்தின் முன்புறத்திலும் துவாரபாலகர் திருவுருவங்கள் இருக்கின்றன. இக்கோட்டை வாசலுக்குள் பெருமாள் நுழைவதில்லை.

3. கட்டைக் கோபுரம் (கிழக்கு)

இக்கோபுரம் 15.15 மீட்டர் நீளமும், 12.12 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இதில் அமைந்த வாயிலின் ஒவ்வொரு பக்கத்திலும் ஐந்து தூண்கள் உள்ளன. இதன் செங்கல் கட்டப் பகுதி ஐந்து தளங்களையும், ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது.

4) கட்டைக் கோபுரம் (வடக்கு)

இக்கோபுரம் 15.15 மீட்டர் நீளமும், 12.1 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இது ஐந்து தளங்களையும். ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. தளங்களில் சுதைச் சிற்பங்கள்காணப் படுகின்றன,

8. 5) ஐந்தாம் பிராகாரம் (அகளங்கள் திருவீதிக் கோபுரங்கள்)

1) நான்முகன் கோபுரம் (தெற்கு)

இக்கோபுரம் 'நான்முகன் கோபுரம்' அல்லது 'அரங்க விலாசக் கோபுரம்' என்னும் பெயர்களில் வழங்கி வருகிறது. இதன் அடித்தளம் நான்கு மீட்டர் உயரத்தில் இருக்கிறது. இது 19.70 மீட்டர் நீளமும், 15.76 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் 2 தளங்களையும் ஏழு கலசங்களையும் கொண்டு விளங்குகிறது.

இதற்கு அழகிய தூண்கள் இருபக்கங்களிலும் உள்ளன இதன் தூண்களில் விசயநகர் அமைப்புகாணப்படுகிறது. இதன் செங்கல் கட்டட மேல்பகுதி நான்கு தளங்களைக் கொண்டிருக்கிறது. இத்தளங்களின் அடித்தளத்தில் மட்டுமே துவாரபாலகர்களின் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

2. தாயார் வடக்கு வாசல் கோபுரம் (வடக்கு)

இக்கோபுரம் 18.7 மீட்டர் நீளமும், 18.18 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இதன் மேற்குப் பகுதியில் நான்கு தளங்கள் உள்ளன. இக்கோபுரத்தின் உட்பகுதியில் பல்வேறு தெய்வங்களின் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

3. அகளங்கன் கோபுரம்

இக்கோபுரத்திற்கு 'வெள்ளைக் கோபுரம்' என்னும் பெயர் அமைந்துள்ளது. இதன் செங்கற் கட்டட மேற்பகுதி 50 மீட்டர்

உயரம் கொண்டுள்ளது. அக்காலத்தில் கட்டப்பட்டிருந்த கோபுரங்கள் எல்லாவற்றிலும் இது உயரமானதாகும். நிலத்தின் கல்தளம் 29 மீட்டர் நீளமும், 27 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது. இதன் மேல்புறந்தில் இருபுறங்களிலும் தூண்கள் உள்ளன. இத்தூண்களெல்லாம் விசயநகரக் கட்டடக் கலையின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. இதற்கு ஒன்பது தளங்கள் உள்ளன. இதன் உள் பகுதியில் இரண்டு தூண்களுக்கு இருபுறமும் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் இருக்கின்றன.

8. 6. நான்காம் பிராகாரம் (ஆலிநாடான் திருவீதி)

1. ஆலிநாடான் திருவீதிக் கோபுரம் (தெற்கு)

இக்கோபுரத்தின் முன்புறத்தில் கார்த்திகைத் திருவிழாக் காலத்தில் சொக்கப்பனை ஓலை முதலியவற்றை எரித்துச் சுடர் காணப்பெறுவதால், இக்கோபுரம் 'கார்த்திகைக் கோபுரம்' என்னும் பெயர் பெற்றது. இது மூன்று தளங்களையும், ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. 14.55 மீட்டர் நீளமும், 10,9 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் இது அமைந்துள்ளது.

இதன்முன் யமுனை, கங்கை எனும் இரண்டு துவாரபாலிகைகள் திருவுருவங்கள் இருக்கின்றன. இதன் இருபுறங்களில் தூண்கள் உள்ளன. மையத் தளத்தில் உக்கிர நரசிம்மர் திருவுருவம் காணப்படுறது.

கார்த்திகைக் கோபுரச் சூழ்நிலை இங்குக் கருத்தில் கொள்ளதக்கது. தூய்மையோடு இக்கோயிலினுள் வரவேண்டும் எனத் தெரிவிக்கும் வகையில் யமுனை, கங்கை ஆகிய புனிதத் தீர்த்தங்களின் திருவுருவங்கள் இக்கோபுரத்தில் இருபுறங்களிலும் நிலைபடுத்தப்பட்டுள்ளன.

இக்கோபுரத்திற்கு எதிரிலுள்ள சக்கரத்தாழ்வார் சந்நிதி இறைவனின் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இங்குள்ள அமிருத கருடர் தம்கையில் ஏந்திய அமுதத்தால் அழிவிலிருந்து அழியாத்தன்மைக்கு உயர்த்தும் சிறப்பை அவர் காட்டுகிறார்.

அரங்கவிலாச மண்டபத்தில் இறுதியில் உள்ள கல் கம்பத்தில் அனுமன் திருவுருவமும், திருமாலின் சங்கு, சக்கரம் ஆகியவற்றின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. சங்கு உயர் நிலைக்கு உயர்த்தும் தன்மையையும், சக்கரம் ஜோதி நிலையாகிய மேன்மையை உணர்த்தும் தன்மையையும் காட்டுகின்றன.

2. ஐந்துகுழி மூன்று வாசல் கோபுரம் (வடக்கு)

இக்கோபுரம் மூன்று நிலைகளையும், ஐந்து கலசங்களையும் கொண்டுள்ளது. இதற்கு இரண்டு தளங்கள் உண்டு. கீழ்த்தளத்தில் சிங்கராயர் நரசிம்மருடைய திருவுருவம் உள்ளது.

இங்குள்ள ஐந்து குழிகளில் தாமரைப்பூத் திருவடிகள் உள்ளன. ஒருவர் இந்த ஐந்து குழிகளில் தம் விரல்களை வைத்து உணர்வது, ஐம்புலன்களை அடக்க வேண்டிய நிலையைக் காட்டுகிறது. இக்கோயிலின் வடக்கு, கிழக்கு, தெற்கு கோபுரங்களின் வாயிலாக வந்து இக்கோபுர வாசலின் தெற்கில் உள்ள பரமபத வாசலைஅடையவேண்டும்என்பதைஐந்து குழியும்மூன்று வாசலும் காட்டுகின்றன. மேற்கு வாயில் அடைபட்டுள்ளது என்பது கருத்தில் கொள்ளத் தக்கது,

3. தவுட்டரவாசல் கோபுரம்

முதலில் இந்நுழைவாயில் தத்தேத்ராய வாசல் என்றும் பெயரில் இருந்து வந்தது. இவ்வாயில் வழியாக நெல்மூட்டைகளை எடுத்துச்சென்று அரிசியாக்கி அரிசியுடன் நெல் தவிட்டையும் கோயிலுக்குக் கொண்டு வருவது வழக்கம். இதன் காரணமாகத் தவிட்டு – அரை - வாசல் - தவிட்டரைவாசல் என்னும் பெயர் ஏற்பட்டது. இக்கோபுர வாயில் 9 மீட்டர் நீளமும், 6 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் உள்ளது, இவ்வாயிலினுள் எட்டு தூண்கள் உள்ளன.

8. 7. மூன்றாம் பிராகாரக் கோபுரங்கள்

1. ஆரியபட்டாள் கோபுரம் (தெற்கு)

இக்கோபுரத்தின் நுழைவாயில் பாதுகாப்பான நிலையில் பராமரிக்கப்பட்டுள்ளது. இதன் தெற்கில் இரண்டு மாடங்கள் உள்ளன. இதில் கருடர், சக்கரத்தாழ்வார் ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன. இக்கோபுரம் இரண்டு தளங்களும், ஐந்து கலசங்களும் கொண்டு திகழ்கிறது.

வங்காளத்திலிருந்து மன்னர் ஒருவர் அரங்கநாதரை வழிபடுவதற்காகப் பெருஞ்செல்வத்தைக் கொண்டு வந்து அதனை இக்கோபுரவாயில்படியில்வைத்து அதனைப் பாதுகாக்கக் காவலர் சிலரை அங்கு விட்டுச் சென்றதாகவும், அக்காவலர்கள் அதனை பயன்படுத்தி அரங்கநாதருக்கு வழிபாடாற்றிப் பேரருள் பெற்றனர் எனவும், இதன் காரணமாக இந்தப் படிக்கட்டுக்கு 'ஆரிய

பட்டாள் வாசல்' எனப் பெயர் ஏற்பட்டதாகவும் மரபுவழிச் செய்தி கூறுகிறது.

2. பரமபதவாசல் கோபுரம் (வடக்கு)

இதன் வாயில் வைகுண்ட ஏகாதசி தினத்தில்தான் திறக்கப் படுகிறது. தெற்கு ஆரியபட்டாள் கோபுரத்தைப்போல் மாதிரியிலும், உயரத்திலும் இது திகழ்கிறது. இது ஐந்து கலசங்களுடன் 11.52 மீட்டர் நீளமும், 7.77 மீட்டர் அகலமும்கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

8. 8. இரண்டாம் பிராகாரக் கோபுரம்

1. நாழிகேட்டான் கோபுரம்

இது இராஜமகேந்திரன் திருவீதி என்று கூறப்படும் பிராகாரத்தின் தெற்கில் அமைந்துள்ள கோபுரமாகும், இது 11.52 மீட்டர் நீளமும். 8.48 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இங்கு பூசைகள் அந்த அந்த நேரத்தில் நடத்தப்படுவதற்காக அங்கு ஒலிக்கப்படும் இசைக்'கருவிகள் அந்த அந்தப் பூசை நடைபெறுவதற்கான நேரத்தைத் (நாழிகையை) தெரிவிக்கும். எனவே. இது 'நாழிகைக் கேட்டான் வாசல்' என்று வழங்குவதாயிற்று. நாளடைவில் 'நாழி கேட்டான் வாசல்' என்னும் பெயர் அமைந்தது.

இந்தக் கோயிலில் பூசைகள் முதலியவை எந்த எந்தக் காலங்களில் நாழிகை அளவில் நடைபெறும் என்பதைத் தெரிவிப்பதற்காகக் குறிப்பிட்ட இசைக் கருவிகள் இயக்கப்படும். அப்போது அந்த அந்த ஒலிக்கேற்ப அந்த அந்த பூசைகள் நடைபெறுவதற்குரிய நாழிகையைத் தெரிந்து கொள்ளலாம்.

நாழிகை கேட்டான் வாசலில் பலவகை இசைக்கருவிகள் ஒலிக்கப்படுகின்றன. இங்குள்ள துவாரபாலகர்கள் சேமத்தையும், அதிக சேமத்தையும் அளிப்பவர்களாகிய பத்ரன். சுபத்ரன் என்னும் பெயரைத் தாங்கி நிற்கிறார்கள். நாழிகை கேட்டான் வாயிலில் உள்ள ஐந்து படிகளும் மேல்நோக்கி உயர்ந்து செல்வதைக் காட்டும். இப்படிகளைக் கடந்துசெல்லும் அடியார்க்கு மிகுதியான சேமம் ஏற்படக்கூடியவை எவை 'என்பதைக் குறிப்பிடும் வகையில் சங்கநிதி, பதுமநிதி ஆகியவை காட்டுகின்றன. கொடிக்கம்பத்திற்கு அருகில் காட்சியளிக்கும் பரமயோகியாகிய அனுமனின் கடைக்கண் பார்வை மனம் கீழ்நிலையை அடையாது என்பதை மேல்செல்லும் நிலையைக் காட்டுகிறது.

இக்கோயில் நிறைவுபெற்ற கோபுரங்களின் எண்ணிக்கை 17. அவையாவன:

தெற்கு வெளிப்பகுதி;	இராய கோபுரம்	– 1
ஏழாம் பிராகாரம்.	4 திசைகளிலும் உள்ள கோபுரங்கள்	– 4
ஆறாம் பிராகாரம்:	4 திசைகளிலும் உள்ள கோபுரங்கள்	– 4
ஐந்தாம் பிராகாரம்;	தெற்கு, வடக்கு கிழக்குக்கோபுரங்கள்	– 3
நான்காம் பிராகாரம்:	தெற்கு, வடக்குக் கோபுரங்கள்	– 2
மூன்றாம் பிராகாரம்;	தெற்கு, வடக்குக் கோபுரங்கள்	– 2
இரண்டாம் பிராகாரம்:	தெற்குக் கோபுரம்	– 1
		17

9, பிராகாரங்கள்

திருக்கோயிலை அடைந்ததும் அதனை இடமிருந்து வலம் வரும் முறையில் அடுத்தடுத்து உட்புறத்தில் அதனைச் சுற்றிச் சுற்றி வந்து இறுதியில் கருவறையிலுள்ள தெய்வத் திருமேனியை வணங்குவதற்கு வழிகளாக அமைவன பிரகாரங்கள். ஆகமங்களில் பிரகாரம் ஆவரணம் எனத் தெளிவுப் படுத்தப்பட்டுள்ளது. நடைமுறையில் இது சுற்று, திருச்சுற்று, சுற்றுப்பாதை, திருவீதி என்னும் பெயர்களில் குறிக்கப்படுகின்றது.

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலைப் பொறுத்த வரையில் ஏழு பிரகாரங்கள் இருப்பதால் இது 'உத்தமோத்தம கோயில், வரிசையில் இடம் பெற்றுள்ளது.

திருவரங்கம் கோயிலின் பிரகாரங்கள் உயரமாகவும், பருமனாகவுமுள்ள சுவர்களால் பிரிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள பகுதி திருவுண்ணாழி எனப்படுகிறது இதன் சுவர் தருமவருமசோழ மன்னரால் கட்டப்பட்டதால், இச்சுற்றுக்குத் தருமவருமவர்ம திருவீதி என்னும் பெயர் வழங்கி வருகிறது, இது முதல் பிராகாரமாக ஏற்றுக்கொள்ளப் பெற்று உள்ளது.

1, தெற்கு வெளிப்பகுதி - அடையவளைந்தான் திருவீதி

தெற்கு வெளிப்பகுதி இக்கோயிலில் அரங்கநாதர் தெற்கு நோக்கிப் பள்ளிகொண்டிருப்பதால் இக்கோயிலுக்கு வருபவர்கள முதலில் இவ்வெளிப்பகுதியிலிருந்தே வருகிறார்கள், இதனைத்

தொடர்ந்து இக்கோயில் பிராகாரங்களின் வழியாகக் கோயிலுக்குள் செல்கிறோம்.

அடையவளைந்தான் திருவீதி தன்னுள் ஏழு பிராகாரங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. இதன் பக்கங்களில் பல வீடுகளும் பல மாளிகைகளும் கட்டப்பட்டுள்ளன.

2. ஏழாம் பிராகராம் -சித்திரை அல்லது கலியுகராமன் திருவீதி

இந்தப் பிராகாரம் அகன்ற பரப்பையுடையது. இந்த வீதி கலியுகராமன் என்னும் பட்டப் பெயரையுடைய மாறவர்மன் வீர பாண்டியன் (கி. பி. 1420) பெயரில் அமைக்கப்பட்டது. இவ் வீதியில் சித்திரைப் பிரமோற்சவத்தின்போது, தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

இதில் உள்ளடங்கிய பரப்பின் நீளம் 642 மீட்டர். அகலம் 540 மீட்டர். மொத்தப் பரப்பு 3,46,680 சதுர மீட்டர்.

சித்திரை மாதம் நடைபெறும் விருப்பன் திருவிழாவின் ஒன்பதாம் நாள் சித்திரைத் தேரோட்டம் இங்கு நடைபெறுகிறது, ஆதிபிரமோற்சவமும், பங்குனிமாதத்தில் இங்கு நடைபெறுகிறது. அதனுடன் கோரதமும் இந்த வீதியில் ஊர்ந்து வருகிறது.

3, ஆறாம் பிராகார -உத்தரவீதி அல்லது திருவிக்கிரமன் திருவீதி

இது விக்கிரம சோழன் (கி. பி. 1120 - 1133) பெயரில் திருவிக்கிரமன் திருவீதி என வழங்கி வருகிறது. இதில் உள்ளடங்கிய பரப்பின் நீளம் 494 மீட்டர். அகலம் 380 மீட்டர். மொத்தப் பரப்பு 1,87,720 சதுரமீட்டர்.

இப்பிராகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் மணவாள மாமுனிவர் திருக்கோயில் இருக்கிறது. பூபதி திருநாளிலும், தெப்பத் திருநாள் ஏழு நாள்களிலும் பெருமாள் உலா வருகிறார், தைத்தேரோட்டம் இவ்வீதியில் நிகழ்கிறது.

4. ஐந்தாம் பிராகாரம் -அகளங்கள் திருவீதி

அகளங்கன் என்னும் பெயர் களங்கமற்றவர் என்னு பொருளைக் கொண்டுள்ள பெயர். இப்பெயர் விக்கிரம சோழ

னுக்கும் அவர் தந்தையாகிய முதல் குலோத்துங்கனுக்கும் அளிக்கப்பட்ட பெயராகும். ஆனால், அகளங்கள் என்னும் பெயர் விக்கிரம சோழனுக்கே உரியது எனக் 'கோயில் ஒழுகு' நூல் குறிக்கிறது. இந்தப் பிராகாரத்திலிருந்து இக்கோயிலின் முக்கியமான பகுதி தொடங்குகிறது. இப்பகுதியே இக்கோயிலின் எல்லாச் சமயச் சடங்குகளுக்கும் மையமாக இருந்து வருகிறது.

இதில் உள்ளடங்கிய பரப்பின் நீளம் 376 மீட்டர். அகலம் 258 மீட்டர். மொத்தப் பரப்பு 97008 சதுர மீட்டர்.

5. நான்காம் பிராகாரம் - ஆலிநாடான் திருச்சுற்று

திருமங்கையாழ்வார் ஆலிநாட்டைச் சேர்ந்தவர். ஆதலால் இவர் அமைத்த இப்பிரகாரம் ஆழிநாடான் திருவீதி என்ற பெயரில் இருந்து வருகிறது.

இதன் தென்வடக்கு மதிற்சுவர் 156 மீட்டர்நீளமும், கீழமேல் சுவர் 242 மீட்டர் நீளமும் கொண்டுள்ளது. இப்பிராகாரத்தில் மேட்டு அழகிய சிங்கர் கோயிலுக்குத் தெற்கில் ஐந்துகுழி மூன்று வாசல் பகுதிகள் இருக்கின்றன.

6. மூன்றாம் பிராகாரம் - குலசேகரன் திருச்சுற்று

குலசேகரன் திருவீதி எனப்படும் இவ்வீதி குலசேகராழ்வார் (கி. பி. 8ஆம் நூற்றாண்டு.) பெயரில் விளங்கி வருகிறது,இதில் உள்ளடங்கிய பரப்பின் நீளம் 128 மீட்டர், அகலம் 86 மீட்டர். மொத்தப் பரப்பு 11,008 சதுரமீட்டர்.

இப்பிராகாரத்தின் திருமதிலையும், வடகோபுரத்தையும் திருமங்கை ஆழ்வார் கட்டினார்.

7. இரண்டாம் பிராகாரம் - இராஜ மகேந்திரன் திருவீதி

இப்பிராகாரம் மையத்திலுள்ள கோயிலையும். மண்டபத்தையும் உள்ளடக்கி இருக்கின்றது. இதில் உள்ளடங்கிய பரப்பின் நீளம் 86 மீட்டர். அகலம் 58 மீட்டர். மொத்தப் பரப்பு 4988 சதுரமீட்டர்.

இது இராஜ மகேந்திரன் சோழன் (கி. பி. 1060–63) பெயரில் விளங்கி வருகிறது

8. முதல் பிராகாரம்

இப்பிராகாரம் திருவுண்ணாழியையும் அரங்கநாதர் கோயில் கருவறையையும் கொண்டுள்ள சதுரப்பிராகாரம். இது தருமவர்மர் திருவீதி எனப்பெறும்,

10 மண்டபங்கள்

1. அம்மா மண்டபம்

இக்கோயிலுக்குரிய மண்டபங்கள் பல காவிரியின் தென்கரையிலிருந்து அரங்கநாதர் கோயில் வரையிலும் இருந்தன எனவும், அவற்றில் பல பலவாறாகப் பயன்படுத்தப்பட்டதால் மறைந்தன எனவும் கூறப்படுகிறது,

இக்கோயிலுக்கு வருவோர்களில் பெரும்பான்மையினர் திருச்சிராப்பள்ளியிலிருந்து வருவோர்கள். இவர்கள் இக்கோயிலுக்கு வருமுன் காலையில் தென் காவிரியில் நீராடுகிறார்கள். இக்காவிரித்துறை திருவரங்கம் இராய கோபுரத்திற்குத் தெற்கில் 2 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. இக்காவிரியில் நீராடுவதற்குத் தக்கவாறாகப் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிக்கட்டுத் துறையிலிருந்து வடக்கே 50 மீட்டர்த் தொலைவில் அம்மா மண்டபம் இருக்கிறது. இம்மண்டபம் 40 மீட்டர்ச் சதுரப் பரப்பில் உள்ளது.

2. நான்குகால் மண்டபங்கள்

இராய கோபுரத்திற்கு வடக்கில் 3 மீட்டர்ச் சதுரப்பரப்பில் நான்கு கால் மண்டபம் ஒன்றுள்ளது. இதனை அடுத்து நான்கு கால் மண்டபம் மற்றொன்றும் இருக்கிறது. இம் மண்டபத்தின் வடகிழக்குத் தூணின் அடிப்பகுதியில் பாதாள கிருஷ்ணன் கோயிலுள்ளது.

இதனை அடுத்து நான்கு கால் மண்டபம் மற்றொன்றும் உள்ளது.

3. திருவந்திக்காப்பு மண்டபம்

ஐந்தாம் பிராகாரத்தின் நான்முகன் கோபுரத்தைக் கடந்து நான்காம் பிராகாரத்தினுள் செல்லுமிடத்து இதன் அகன்ற வெற்றிடத்தில், நான்கு தூண்களை நான்கு மீட்டர்ச்சதுரப் பரப்பில் கொண்ட திருவந்திக் காப்பு மண்டபம் இருக்கிறது. திரு

விழாக்களின்போது தெய்வத் திருவுருவங்களின்மீது தீயபார்வை விழாமலிருக்க, இம்மண்டபத்தில் வழிபாட்டுச் சடங்குகள் செய்யப் படுவதால் இந்த மண்டபத்திற்குத் 'திருவந்திக்காப்பு மண்டபம்' எனும் பெயர் வழங்குவதாயிற்று. இம்மண்டபத்தில் தென் கிழக்குந் தூணில் நாயக்கமன்னர் தம் இரு கைகளையும் கூப்பி வணங்கும் வண்ணம் நிற்கும் நிலையில் அவரது உருவம் பொறிக் கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் மற்றொரு தூணில் கையில் ஒரு கட்டாரியுடன் சாய்ந்தவண்ணம் வீரக்கழல் அணிந்த வடிவில் ஓர் உருவம் காணப்படுகிறது. இது கம்பரது திருவுருமாக இருக் கலாம் என்பது நம்பப்படுகிறது.

4. அரங்கவிலாச மண்டபம்

இது 38 மீட்டர் நீளமும், 23 மீட்டர் அகலமும் கொண்டுள் ளது. இதற்குக் கிழக்கில் கடைகள் ஒரு வரிசையில் உள்ளன. வடக்குப் பகுதியின் இறுதியில் கல் கம்பக் கொடிமரமும், பெரிய பலி பீடமும் இருக்கின்றன. பலி பீடத்திற்கு 4 மீட்டர் உயரம் உள்ள மேடை ஒன்றுள்ளது. இந்த மேடை மீது இரு தாமரை களின் வடிவில் ஓர் அமைப்புக் காணப்படுகிறது. பலிபீடத்தின் அடிப்பகுதியில் யானைகளின் தலை வடிவங்களும், காளிங் கனைக் கண்ணன் வதம் செய்யும் திருவுருவங்களும் காணப்படு கின்றன. இதற்குப் பத்துப்படிகள் உள்ளன. இம்மண்டபத்தில் 6 1/2 மீட்டர் உயரமுள்ள 14 தூண்கள் 4 வரிசையில் உள்ளன. ஒவ்வொரு தூணின் 4 பக்கங்களும் சிற்பங்களைக் கொண்டு உள்ளன

இந்த மண்டபம் திருமலை நாயக்கரால் (கி.பி. 1623– 59) கட்டப்பட்டது. தை, மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மாதங் களில் பிரமோற்சவக் காலங்களில் அரங்கநாதர் ஒருநாள் இங்குத் தங்குவார். உபயக்காரர்கள் பூசையை நடத்தாதபோதோ மழையாலோ, மற்ற காரணத்திற்காகவோ திருவிழாவில் இத் திருவுருவப் புறப்பாடு நடைபெறாதபோது இம்மண்டபத்தில் அரங்கநாதர் எழுந்தருளியிருப்பார்.

5. யானை ஏறும் மண்டபம்

இது அரங்கவிலாச மண்டபத்தின் தென்மேற்கில் 36 மீட்டர்ச் சதுரப்பரப்பில் அமைந்துள்ளது. இம்மண்டபம் 3 மீட்டர் உயரத் தில் உள்ளது. இம்மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளி அதன் பின்னர் இம்மண்டபத்தைச் சார்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்

கும் யானை வாகனத்தில் எழுந்தருளுகிறார், இதே முறையில் திரும்பி வரும்போது யானை வாகனத்திலிருந்து யானை ஏறும் மண்டபத்திற்கு வந்து சேர்கிறார்.

6. வேணுகோபலர் சந்நிதி மண்டபம்

இது 18 மீட்டர் நீளமும் 10 1/2 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இக்கோயிலின் மண்டபம் முகமண்டபத்துடன் கூடிய கோயில் பகுதியைவிடத் தாழ்ந்த மட்டத்திலுள்ளது. இதற்கு ஒவ்வொன்றிலும் 8 தூண்களைக் கொண்ட 6 வரிசைத் தூண்கள் உள்ளன. இத்தூண்களின் உயரம் 6 மீட்டராகும்.

7. வாகான மண்டபம்

இம்மண்டபம் அரங்கவிலாச மண்டபத்திற்கு வடமேற்கில் உள்ளது, இம்மண்டத்தில் பெருமாள் உற்சவக்காலங்களில் பல்வேறு வாகனங்களில் எழுந்தருள இம்மண்டபத்திலுள்ள மேடைக்குவருகிறார்.

8. வசந்த மண்டபம்

ஐந்தாம் பிராகாரத்தின் மேற்குப் பகுதி மையத்தில் இம் மண்டபம் 60 மீட்டர் சதுரப்பரப்பில் இருக்கின்றது. 32 மீட்டர் நீளமும், 16 மீட்டர் அகலமும் கொண்ட ஒரு முன் மண்டபமும் உள்ளது. இம்மண்டபத்தின் நடுவில் ஒரு சிறு மண்டபம் உள்ளது. நாற்புறமும் 3 மீட்டர் அகலமுள்ள முற்றம் உள்ளது. இந்த முற்றத்தை அடுத்து 3 மீட்டர் அகழி ஒன்று உள்ளது. இதற்கு மேற்கிலும் கிழக்கிலும் இறங்குதுறைப் படிக்கட்டுகள் உள்ளன. அகழியால் சூழப்பெற்ற உயரமான பகுதியில் சதுர மண்டபம் உள்ளது. இந்தச் சதுர மண்டபத்திற்கு வைகாசி மாதம் ஒன்பது நாள்கள் நடைபெறும் வசந்த உற்சவத்திற்குப் பெருமாள் எழுந்தருளுகிறார். அப்போது கொள்ளிடத்திலிருந்து வரும் தண்ணீர் இவ்வகழியை நிரப்பும். இவ்விழாக் காலங்களில் மக்கள் பெருந்திரளாக வந்து இந்த முற்றத்தின் நாற்புரமும் நின்று பெருமாளை வழிபடுகிறார்கள். சிலர் படித்துறைகளில் இறங்கி அகழி நீரைத் தீர்த்தமாகத் தம்மீது தெளித்துக்கொள்வார்கள்.

9. தாயார் சந்நிதி மண்டபங்கள்

கருவறை, உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவை 42மீட்டர் நீளமும், 14 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் உள்ளன. இம் மண்டபத்தில் நான்கு புறங்களிலும், இரண்டு வரிசைகளில்

தூண்கள் உள்ளன. இதன் தெற்குப் பிராகாரம் பங்குனி உத்தரத் திருமண மகா மண்டபம் என்னும் பெயரில் இருக்கிறது. இதற்கு ஒவ்வொரு பக்கத்திலும் 20 தூண்களாக இரண்டு வரிசைத் தூண்கள் உள்ளன. தூண்களின் உயரம் 6 மீட்டர். இவற்றின் மேல்பகுதியில் தெலுங்கு மொழியில் விவரிக்கும் வகையில் ஓவியங்கள் காணப்படுகின்றன. மேற்குப் பிராகாரத்தின் வடக்குப் பகுதியில் ஊஞ்சல் மண்டபம் உள்ளது. பங்குனி உத்தர மண்டபத்துத் தூண்களில் இராமர், விபீஷ்ணர். ஆஞ்சநேயர், ஜாம்புவான் ஆகியோர்களின் உருவங்கள் ஓவியத்தில் தீட்டப் பட்டுள்ளன, மேற்குப் பிராகாரத்தின் பின்பகுதியில் ஒரு சிறிய நீராழி மண்டபம் இருக்கிறது. வசந்த உற்சவக் காலத்தில் அகழியில் நீர் நிறைந்திருக்கும்.

இப்பிராகாரத்தின் வடக்குப் பகுதியில் ஒரு மண்டபம் உள்ளது. இதில் ஒவ்வொன்றிலும் நாண்கு தூண்களுடைய நான்கு வரிசைத் தூண்கள் உள்ளன. மையத்து வரிசையில் உள்ள தூண்கள் ஒவ்வொன்றிலும் நாற்புறமும் சிற்பங்கள் காணப்படுகின்றன,

இப்பிராகாரத்து வெளியில் வரும்போதுகிழக்குப் பக்கத்திலும் தெற்குப் பக்கத்திலும் திறந்த வெளிகளையுடைய ஒரு மண்டபம் உள்ளது. இங்கு வடக்குப் பகுதியில் நவராத்திரி மண்டபம் உள்ளது. இந்த மண்டபம் 36 மீட்டர் நீளமும் 23 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது. இதன் ஒவ்வொன்றிலும் 14 தூண்களையுடைய 6 வரிசைத் தூண்கள் உள்ளன, இத்தூண்களின் உயரம் 4 மீட்டர். இந்தத் தூண்களில் நாயக்க மன்னர்களின் உருவங்கள் சிற்ப வடிவில் காணப்படுகின்றன.

10. கம்பர் மண்டபம்

இம்மண்டபம் மேட்டு அழகிய சிங்கர் கோயிலுக்கு வடக்கில் உள்ளது. இம்மண்டபம் 6 மீட்டர் சதுரப்பரப்பில் 4 1/2 மீட்டர் உயரமுள்ள 4 தூண்களைக் கொண்டுள்ளது. இம்மண்டபத்தில் கம்பர் தமது இராமாயண நூலை அரங்கேற்றியதால் 'கம்பர் மண்டபம்' என்னும் பெயரில் இது விளங்கி வருகிறது.

11, கர்த்தரு மண்டபம்

கமபர் மண்டபத்திற்குக் கிழக்கில் பெரியவாச்சான் பிள்ளை சந்நிதிக்கு வடக்கில் கர்த்தரு மண்டபம் உள்ளது.

12. ஆயிரக்கால் மண்டபம்

இம்மண்டபம் ஐந்தாம் பிராகாரத்தின் வடகிழக்குக் கோடியிலிருந்து கிழக்குப் பிராகாரத்தின் பாதி வரை அமைந்துள்ளது. இம்மண்டபம் 153 மீட்டர் நீளத்திலும் 48 மீட்டர் அகலத்திலும் அமைந்துள்ளது.

இந்த ஆயிரக்கால் மண்டபத்தின் நடுவில் தேர்வ்டிவில் அமைந்துள்ள ஒரு சிறிய மண்டபம் இருக்கிறது. இதில் ஆண்டு தோறும் நிகழும் வைகுண்ட ஏகாதசித் திருவிழாவில் பெருமாள், ஆழ்வார்கள், ஆசாரியர்சள்ஆகியோர் திருவுருவங்கள் கொணர்ந்து வைக்கப்படுகின்றன, இம்மண்டபத்தின் முகப்பை ஒட்டி மிகப் பெரிய பந்தலொன்று 47 தென்னை மரங்களின் அடிப்பகுதிகளை கொண்டு அமைக்கப் பெறுகிறது. கருங்கல்லால் ஆகிய 953 தூண்களும், தென்னைமரங்களின் அடிப்பகுதிகளைச் கொண்ட 47 தூண்களும் சேர்ந்து ஆயிரக்கால்களையுடைய மண்டபமாகத் திகழ்கிறது.

இம்மண்டபத்தின் தெற்கில் உள்ள பகுதி 'கனு மண்டபம், எனவும், நடுப்பகுதியிலுள்ள மண்டபம் 'திருமாமணி மண்டபம், எனவும், வடக்குப் பகுதியிலுள்ள மண்டபம் 'சங்கராந்தி மண்டபம்' எனவும் குறிக்கப்படுகின்றன. திருமாமணி மண்டபம் குறுகிய சதுரப் பரப்பில், 28 தூண்களைக் கொண்டு அமைந்துள்ளது. ஆயிரக்கால் மண்டபம் பெருமாள் தேவரால் தொடங்கப்பட்டது. பின்னர்க் கம்பைய வீரைய தண்டய நாயக்கரால் கட்டி முடிக்கப்பட்டது எனச் சொல்லப்படுகிறது.

13. நாற்கால் மண்டபம்

ஆயிரக்கால் மண்டபத்தின் தென்மேற்கில் நாற்கால் மண்டபம் ஒன்று நாலரை மீட்டர் சதுரப் பரப்பிலும், மற்றொரு நாற்கால் மண்டபம் ஆயிரக்கால் மண்டபத்திற்குத் தெற்கிலும் உள்ளன. இம்மண்டபங்களில் பெருமாள் திருஉலாவின்போது சற்று நேரம் தங்குவார்.

14. சேஷராயர் மண்டபம்

இம்மண்டபம் ஆயிரக்கால் மண்டபத்தின் தெற்கிலுள்ளது. இம்மண்டபம் 41.46 மீட்டர் நீளத்திலும், 36 1/2 மீட்டர் அகலத்திலும் அமைந்துள்ளது. எட்டு வரிசைகளைக் கொண்ட 12 தூண்கள் 6 மீட்டர் உயரத்தில் இருக்கின்றன.

15. நாற்கால் மண்டபம்

சேஷராயர் மண்டபத்திற்குத் தெற்கில் நாற்கால் மண்டபம் 5 மீட்டர்ச் சதுரப்பரப்பில் இருக்கிறது.

16. உடையவர் சந்நிதி மண்டபம்

இம்மண்டபம் 12.19 மீட்டர் சதுரப்பரப்பில் நான்கு மீட்டர் உயரமுள்ள 20 தூண்களைக் கொண்டு விளங்குகிறது.

நான்காம் பிராகார மண்டபங்கள்

17. கருட மண்டபம்

இம்மண்டபம் 35 மீட்டர் நீளத்திலும், 36 மீட்டர் அகலத்தி திலும் அமைந்த பரப்புடையது, இது 6 மீட்டர் உயரமுள்ள 16 தூண்களை 14 வரிசைகளில் கொண்டுள்ளது.

18. பாமன் மண்டபம்

இம்மண்டபம் கருடர் சந்நிதியின் முன் அமைந்த நாற்கால் மண்டபமாகும். அரங்கநாதர் உற்சவக் காலங்களில் இம்மண் டபத்தில் எழுந்தருளுவதுண்டு. இது 4 மீட்டர் சதுரப்பரப்பில் அமைந்துள்ளது. பரமர் என்பவர் கட்டியதால் இது 'பரமன் மண்ட பம்' எனப்பட்டது.

19. நெல் அளவு மண்டபம்

இம்மண்டபம் கருட மண்டபத்திற்கு வடமேற்கிலுள்ளது. இம்மண்டபம் 4 தூண்களை 6 மீட்டர் சதுரப்பரப்பில் கொண்டு உள்ளது. இம்மண்டபத்தில் முந்திய ஆண்டுவிழாவின்போது நெல் அளக்கப்பட்டது விருப்பன் திருநாளின் ஏழாம் நாளில் கொண் டாடப் பெறுகிறது. இதனை பெருமாள் நேரில் காண்கிறார்.

20. பதினாறு கால் மண்பம்

இம்மண்டபம் பரமபத வாசலுக்கு வடக்கில் 10 மீட்டர்ச் சதுரப்பரப்பிலுள்ளது.

21. நாற்கால் மண்டபம்

பதினாறுகால் மண்டபத்திற்கு வடக்கில் 5 மீட்டர்ச் சதுர வடிவில் இம்மண்டபம் அமைந்துள்ளது.

22. பதினாறு கால் மண்டபம்

இம்மண்டபம் ஐந்து குழி மூன்று வாசல் கோபுரத்துடன் இணைந்து 4.87 மீட்டர் சதுரப்பரப்பில் நாலரை மீட்டர் உயரத்திலிருக்கிறது.

23. நாற்கால் மண்டபங்கள்

சந்திர புஷ்கரணித் தென்கரையில் நான்கு நாற்கால் மண்டபங்கள் ஒவ்வொன்றும் 4.87 மீட்டர்ச் சதுரப்பரப்பில் உள்ளன. பெருமாள் திருவுலா வரும்போது இம்மண்டபங்களில் தங்கிப் பின் உலாக் கண்டருளுவரர்.

24. நாற்கால் மண்டபங்கள் 9

முதலில் ஒரு நாற்கால் மண்டபம் இராமர் சந்நிதியின் முன்புறமும், கிருஷ்ணன் சந்நிதியின் முன் இரண்டு மண்டபங்களும், இவற்றின் தெற்கில் ஒரு நாற்கால் மண்டபமும், மூன்றாம் தெற்குப் பிராகாரத்தில் ஸ்ரீபண்டாரம் வரை நாற்கால் மண்டபங்கள் 5 உள்ளன.

25. பவித்திர மண்டபம்

25 மீட்டர் நீளமும், 21 மீட்டர் அகலமும் கொண்டுள்ள இம்மண்டபம் மூன்றாம் பிராகாரத்தின் நுழைவாயிலுக்கு மேற்கிலுள்ளது. நாள்தோறும் செய்யப்படும் பூசைகளில் ஏற்பட்ட குற்றங்கள் நீங்குவதற்காகப் பவித்ரோற்சவத் திருவிழா நடத்தப்படுகிறது. இச்சமயத்தில் பட்டுநூல் பவித்திர மாலை பெருமாளுக்கு அணிவிக்கப்படுகிறது. இப்பூசையின்போது, தீ ஓம்பலும், வேதம் ஓதுதலும் நிகழ்கின்றன.

இம்மண்டபத்தில் ஒவ்வொன்றிலும் 10 தூண்களையுடைய 6 தூண் வரிசைகள் உள்ளன. தூண்கள் 4 மீட்டர் உயரமுள்ளன. இம்மண்டபத்தில் ஆவணி மாதத்தில் பவித்திர உற்சவம் நடைபெறுகிறது.

26. துரை மண்டபம்

இப்பிராகாரத்தின் மேற்குப் பகுதியில் மேல் தளத்தைக் கொண்டுள்ள ஒரு பிராகாரம் வடக்கு நோக்கிச் செல்கிறது. இதற்குக் குலசேகரர் சேனை வென்றான் திருமண்டபம் என்னும் பெயரும், திருநடை மாளிகை என்னும் பெயரும் வழங்கி வந்தன. இப்போது துரைப் பிரதட்சணம் என்னும் பெயரில் இது விளங்கி வருகிறது.

இங்குத் துரை எனக் குறிக்கப் பெறுபவர் இம்மண்டபத்தின் வழியாக எழுந்தருளி வருபவராகிய அரங்கநாதரே ஆவார்.

27. உள்கோடை மண்டபம்

துரைப் பிராகார மண்டபத்தைத் தொடர்ந்து இருப்பது பரந்த உள் கோடை மண்டபமாகும். இம்மண்டபம் 43 மீட்டர் நீளமும், 13 மீட்டர் அகலமுமுள்ளது. இம்மண்டபத்தின் நடுவில் நான்கு பளிங்குத் தூண்களைக் கொண்ட ஒரு சிறு மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் கோடை காலத்தில் பூச்சாத்து விழா நடைபெறுகிறது. இம்மண்டபம் அக்காலத்தில் ஆட்சி புரிந்திருந்த விசயரங்க சொக்கநாத நாயக்கரால் நிறுவப்பட்டது. அரங்கநாதருக்குத் துரை என்னும் பட்டப் பெயர் அமையும் வகையில் துரைப்பிராகாரம் என்னும் பெயரை இவர் சூட்டினார்.

28. வேதவிண்ணப்பக் கோஷ்டி மண்டபம்

இது உள்கோடை மண்டபத்திற்குக் கிழக்கிலுள்ளது. இதில் வேதங்கள் ஓதப்பெறும்.

29. வராகமூர்த்தி மண்டபம்

இச்சந்நிதியில் வராகமூர்த்தி திருவுருவமுள்ளது. இங்கு வந்து சென்றதை அறிவிப்பதற்காக மக்கள் கைதட்டிச் செல்வது வழக்கம்.

30. நாச்சியார் திரு மடைப்பள்ளி

இம்மடைப்பள்ளி மூன்றாம் கிழக்குப் பிராகாரத்திலுள்ளது. மடைப்பள்ளியின் தெற்குப் பகுதியில் அன்னமூர்த்தி திருவுருவமுள்ளது. இங்கு இம்மண்டபத்தின் மேலுள்ள ஒற்றைக்கால் கருடரைச் சேவிக்கலாம்.

31. ஊஞ்சல் மண்டபம்

மூன்றாம் பிராகாரத்தின் தெற்கு ஆரியப்பட்டாள் வாயிலிலிருந்து உள்ளே நுழைவோம் எனில் கிழக்குப் புறத்தில் ஊஞ்சல் மண்டபத்தைக் காணலாம். இது சடையவர்மன் சுந்தர பாண்டியனால்[15] (கி. பி. 1251–1268) கட்டப்பட்டது.

---

15. ஏ ஆர் இ – 1912; பக்கம் 142

இம்மண்டபம் 25 மீட்டர் நீளமும், 21 மீட்டர் அகலமும் கொண்டது: தூண்கள் ஒவ்வொன்றும் நாலரை மீட்டர் உயர முள்ளது. இதன் மையத்தில் நான்கு கால் மண்டபம் ஒன்றுள் ளது. இந்த மண்டபம் பிற்காலத்தில் விசயநகரப் பரம்பரையில் தோன்றிய இராமராயரின் தலையனாராகிய கந்தாடையார் இராமானுஜரால் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இம்மண்டபத்தின் ஒருபுறத்தில் ஆரியபட்டாள் வாயிலுக்கு மிக அருகில் ஆஞ்சநேயர் திருவுருவம் வைக்கப் பெற்றுள்ளது. இம் மண்டபத்தின் தெற்கில் நெய்க்கிணறுகள் உள்ளன. முற்காலத் தில் அன்பர்கள் கொண்டுவரும் நெய் இங்குச் சேமித்து வைக் கப்பட்டது. தற்காலத்திலும் பந்தத்திற்கும் நெய் பயன்படுத்தப் படுகிறது.

32. கொடியேற்ற மண்டபம்

நெய்க் கிணறுகளுக்கு மேற்கில் நான்கு கால்களையுடைய கொடியேற்ற மண்டபம் உள்ளது. இதில் தீர்த்தக் கலசம் வைக் கப்பட்டுள்ளது.

இரண்டாம் பிராகார மண்டபங்கள்

33. பலவகை அறைகள்

மேற்குப் பிராகாரத்தில் கோயில் கருவூலம், பல்வேறு பொருள்கள் வைக்கப்படும் அறை, தோளுக்கினியான் அறை, விசயரங்க சொக்கநாத நாயக்கர் தம் குடும்பத்தினருடன் நிற்கும் இடம், பெருமாளுக்கு மாலை கட்டும் இடம், பெருமாளுக்குக் கஸ்தூரி, திலகம் முதலியவை தயாரிக்கப்படும் சுக்கிரவார அறை யாகசாலை, தொண்டைமான் குறடு, தீர்த்தக் கிணறு ஆகியவை உள்ளன.

34. அருச்சுன மண்டபம்

இது 72 தூண்களைக் கொண்டுள்ளது. மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசித் திருவிழாவில் 10-ஆம் நாள் மோகினி அவதாரத்தில் நம்பெருமான் இங்கு எழுந்தருளுகிறார். இம் மண்டபம் சேனை முதலியார் கோயிலுக்குக் கிழக்கில் இருக் கிறது.

35. இரேவதி மண்டபம்

அருச்சன மண்டபத்திற்கு நேர் தெற்கில் இரேவதி மண்டபம் உள்ளது. இது 18 மீட்டர் நீளமும், 9 மீட்டர் அகலமும் கொண்

டுள்ளது. அரங்கநாதர் முதன் முதலில் காட்சியளித்த நாள் இரேவதி நட்சத்திரநாள். ஆதலால் மாதந்தோறும் இங்கு இரேவதி நட்சத்திரத்தில் அரங்கநாதருக்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது

36. கிளி மண்டபம்

இரண்டாம்பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் கிளி மண்டபம் இருக்கிறது. முன்னொரு காலத்தில் இங்கோயிலிருந்த இடம் ஒரு கிளியினால் தெரிவிக்கப்பட்டது என்பதற்காக இம்மண்டபத்திற்குக் 'கிளி மண்டபம்' என்னும் பெயர் வழங்கிவருகிறது. இம்மண்டபம் 9 தூண்களுடைய 4 வரிசைத் தூண்களைக் கொண்டுள்ளது, வெளிப்புற வரிசையில் வட்டவடிவில் அமைந்த தூண்கள் சோழரின் கலைச் சிறப்பைக் காட்டுகின்றன,

தீபாவளிப் பண்டிகை நாளில் ஆழ்வார்கள் இங்கு எழுந்தருளுகின்றனர். அவர்களுக்கு எதிரில் ஆசாரியர்களும் இங்கு எழுந்தருளுவார்கள்.

37. திருவந்திக்காப்பு மண்டபம்

இப்பிராகாரத்தின் தென்மேற்கில் உள்ள இம்மண்டபம் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது,

38. சந்தன மண்டபம்

அரங்கநாதர் கருவறைக்குள் செல்வதற்கு முன் இடப்புறம் இம்மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் நான்கு தூண்கள் பளிங்கினாலும், மேல்தளம் சந்தன மரத்தினாலும் உருவாக்கப்பட்டுள்ளது.

39. மகாமண்டபமும் காயத்திரி மண்டபமும்

மகாமண்டபத்தில் ஒவ்வொன்றிலும் 6 தூண்களுடைய 5 வரிசைத்தூண்கள் உள்ளன. இதன்தெற்குப் பகுதியில் 3 அறைகள் உள்ளன, மையத்தில் கருடர் சந்நிதி கருவறையை நோக்கியுள்ளது. கருடர் கோயில் பின்புறச் சுவரில் ஒரு சன்னல் இருக்கிறது. மகாமண்டபத்திற்குக் காயத்திரி மண்டபத்தின் வழியாகச் செல்ல வேண்டும். இது முகமண்டபமாகும். இங்குச் செல்வதற்கு ஒருவழி இருக்கிறது. அதற்கு இருபுறங்களிலும் ஜெயன், விஜயன் திருவுருவங்கள் உள்ளன. இந்தக் காயத்திரி மண்டபம் ஒவ்வொன்றிலும் 6 வட்டத் தூண்களையுடைய 4 வரிசைத் தூண்கள் இருக்கின்றன. இந்த 24 தூண்களும் காயத்திரி மந்திரத்தின்

24 எழுத்துகளையும் குறிக்கின்றன. இந்த மண்டபத்திலிருந்து அரங்கநாதரைச் சேவிக்க உள்மண்டபத்திற்குச் செல்லவேண்டும்.

வெளிப் பிராகாரத்தில் உள்ள மேற்குக் கோபுரத்திலிருந்து 200 மீட்டர்த் தூரத்தில் தெப்பக்குளம் உள்ளது.

இதே பிராகாரத்தில் வடக்குக் கோபுரத்திலிருந்து 280 மீட்டர்த் தூரத்தில் வடக்கே கொள்ளிடம் இருக்கின்றது

இதே பிராகாரத்தில் கிழக்குக்கோபுரத்திலிருந்து 100மீட்டர்த் தூரத்தில் இருப்புப்பாதை வழி செல்கிறது.

இக்கோயில் இரண்டாம் பிராகாரத்தில் திருவரங்கநாதர் திருவடிகள் இருக்கின்றன. இத் திருவடிகள் இரண்டாம் பிராகாரம் முதல் இதே திக்கில் தொடர்ச்சியாக இருக்கின்றன. இதன் காரணமாக இக்கோயிலின் மற்றத்திசைகளில் குடியிருப்பதைவிட, இக்கோயிலின் கிழக்குப் பகுதியில் வாழ்வது சிறப்புடையதாக மக்கள் கருதுகிறார்கள்.

திருவரங்கத்தில் முற்காலத்தில் பல மண்டபங்கள் இருந்தன எனவும், அம்மண்டபங்களின் சுவர்களைக் குடியிருக்கும் வீடுகளின் சுவர்களாக மக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள் எனவும் சொல்லப்படுகிறது,

தைப்பூசத்தன்று சமயபுர மாரியம்மன் கொள்ளிடத்திற்கு எழுந்தருளுகிறார். அப்போது தம் சகோதரிக்கு அரங்கநாதர் சீரும், சிறப்பும் செய்வது போன்று திருவரங்கம் கோயிலிலிருந்து மாலை, புடவை, அருங்கனிகள் முதலியவை கொண்டு வந்து அளிக்கப்படுகின்றன.

11. சிற்பங்கள், ஓவியங்கள்

அரங்கநாதர் கோயிலுக்கு அணி செய்வன இதன் கோபுரங்கள் மட்டுமன்றி இதன் சிற்பங்களும். ஓவியங்களும் ஆகும்.

இவ்வகையில் இக்கோயிலின் கட்டடக் கலையும் சிற்பக் கலையும் சிறந்த முறையில் பாதுகாக்கப்படுவதற்காக இக்கோயிலின் மீட்பு வேலைக்காக யுனெஸ்கோ (ஐ. நா. கல்வி-விஞ்ஞான பண்பாட்டு நிலையக்) கட்டடக்கலை வல்லுநர்கள் 1956 ஆம்ஆண்டில் இங்கு வந்திருந்து இக்கோயிலின் பல பகுதிகளையும் பார்வையிட்டுத் தங்கள் ஆழ்ந்த கருத்துகளைத் தெரிவித்தார்கள். இவ் வல்லுநர்களின் கருத்துகளைத் தமிழ்நாடு அரசினர் ஏற்றுக் கொண்டு ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள தூண்களிலிருந்த

வெள்ளைக் காரைப் பகுதிகளை அகற்ற ஏற்பாடு செய்தனர். சேஷராயர் மண்டபத்தில் தூண்கள் துப்புரவு செய்யப்பட்டன. ஐந்தாம் பிராகாரத்துக்கு உரியதாகிய வெள்ளைக் கோபுரத்திலுள்ள சிற்பங்கள் தூய்மையாக்கப்பட்டன.

இத்திருப்பணி சேஷராயர் மண்டபத்தில் சீரானமுறையில் செய்து முடிக்கப்பட்டதன் காரணமாக இம்மண்டபத்தில் காணப்படும் மருட்சிப் பெண்களின் மாபெரும் கூட்டம், செருக்கு மிக்க ஒய்யாரக்குதிரை வீரர்கள், அறிஞர் பெருமக்கள் ஆகியோர்களின் உருவங்கள் மிகத் தெளிவாகத் தென்படும் நிலைக்கு வந்தன.

இக்கோபுரத்தின் சிற்பங்கள் மீது படிந்திருந்த காரைப் பகுதிகள் அகற்றப்பட்டன. இக்கோபுரத்தின் சீரிய தோற்றம் நன்கு விளங்குவதாயிற்று.

இதுபோன்று மற்றப் பிராகாரங்களிலுள்ள சிற்பங்கள், ஓவியங்கள் சீரழிந்து விடாமல் பாதுகாக்கப்பட்டன.

1. தெய்வத் திருவுருவச் சிற்பங்கள்

திருவரங்கம் கோயிலின் அழகுற அமைந்துள்ள நான்முகன் கோபுரத்தில் தோற்றம் மிக்க உயரத்தில் நின்ற நிலையில் திருமால் திருவுருவம் உள்ளது. இவரது தலையில் கவின் மிக்க கிரீடமும், பின் வலக்கையில் சங்கும், பின் இடக்கையில் சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன. முன் வலக்கை ஒன்று அபயம் அளிக்கும் நிலையிலும், மற்றொன்று திருவடியைக் காட்டும் வகையிலும் காணப்படுகின்றன.

திருமகள் திருவுருவம் அமர்ந்த நிலையில் அடக்கமான நிலையில் அடக்கமான அருட் பார்வையுடன், காதுகளில் பதக்கங்கள் தலையில் கிரீடம், தோளில் பெரிய மாலை ஆகியவற்றுடன் பொறிக்கப்பட்டுள்ளது. திருமகளின் வலக்கால் பீடத்தின் மீதும், இடப்புறத்தில் கால் மடிந்த நிலையிலும் காணப்படுகின்றன.

இலக்குமி திருக்கல்யாணக் கோலம் நான்முக மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. வலப்புறத்தில் திருமாலும், இடப்புறத்தில் இலட்சுமியும் திருமணக் கோலத்தில் காட்சி அளிக்கின்றனர். இலட்சுமி தமது இடக்கையை இடுப்பில் வைத்துக்கொண்டு வலக்கையைத் திருமாலின் வலக்கையோடு இணைத்துக் கொண்டிருக்கிறார். இலட்சுமியின் திருமுகம் நாணத்துடன் கூடிய புன்முறுவல் கொண்டுள்ளது. திருமால் நிமிர்ந்த பார்வையுடன் காட்சி

தருகிறார். இவ்விருவருக்கிடையே பசுந்தளிர் மரமொன்று நிற்கின்றது.

மாவலிச் சக்கரவத்தியிடம் மூன்றடி மண் கேட்டு ஓரடியால் விண்ணுலகை அளந்து மற்றோர் அடியால் இப்பூவுலகை அளந்து மூன்றாவது அடியால் மாவலியைப் பாதாளத்தில் அழுத்திய காட்சியைக்காட்டும்வகையில்உலகளந்த பெருமாள் உருவம் நான் முகன் கோபுரத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

உலகளந்தப்பெருமாளின் உக்கிரப்பார்வைஅவரதுதிருமுகத்தில் வெளிப்படுகிறது; தலையில் கிரீடமும், மேனியில் பலவகைப்பட்ட அணிகளும் காணப்பெறுகின்றன. இடக்கையானது இடுப்பில் வீரட்டகாசத்துடன் விளங்குகிறது.

வேணுகோபாலர் ஒரு கையில் சங்கும் மற்றொரு கையில் சக்கரமும் கொண்டு ஏற்றம் மிக்க தோற்றத்துடன் காட்சி அளிக்கிறார்.

அரங்கவிலாச மண்டபம் கி. பி. 1628-59ஆம்ஆண்டில்கட்டப் பட்டிருக்கலாம் எனத் தெரிய வருகிறது. அரங்கவிலாச மண்டபத் தில் கீழ்க்காணும் கதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இம்மண்டப மேல்தளத்தின் முகப்பில் காணப்படும் இலட்சுமி நாராயணர் திருவுருவம், வைணவ சமயத்தின் தலைசிறந்த மந் திரத்தைக் காட்டுகிறது. பாற்கடலில் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டு பையத் துயிலும்பரமன் திருக்கோலம் அழகுறச் சித்திரித் துக் காட்டப்பட்டுள்ளது.

விபிடணரை இராமர் ஆட்கொள்ளும் காட்சி வைணவத்தின் சீரிய கொள்கையாகிய சரணாகதியை எடுத்துக் காட்டுகிறது. மற்றும் இது இறைவனிடம் சரண்புகுவோர்க்கு இறைவன் காட்டும் கருணையையும் அறிவிக்கிறது.

வராகமூர்த்தியின் மடியில்பூதேவி காட்சியளிக்கிறார், பாதா ளத்தில் அழுந்திய பூமியைத் திருமால் வராக வடிவில் தம் இரு கடைவாய்ப் பற்களால் மீட்டு அதற்கு உய்வளிக்கிறார். அருச் சுனருக்காகக் கண்ணன் தேரைஓட்டிச்செல்லும் காட்சிஉயிர்ப்புடன் காணப்படுகிறது. நம்மாழ்வாருக்கு விசுவசேனர் உபதேசம் செய் வதாகப் பொறிக்கப்பட்டுள்ள சிற்பம் வைணவ உபதேச முறையை விளக்குகிறது.

அரங்கவிலாச மண்டபத்தில் இரட்டைத் தூண்கள் பல உள்ளன. இங்குள்ள தூண்களில் காணப்படும் சிற்பங்கள்

கண்ணன், பார்த்தசாரதியாக அருச்சுனனுக்குத் தேரோட்டுவதையும், அரங்கநாதர் அன்பர்களுக்கு அருள்புரியும் திருவுருவங்களையும் அழகியமுறையில் காட்டுகின்றன.

சேனை முதலியார் திருவுருவம் அமர்ந்த நிலையில் இடக்காலை மடித்தும், வலக்காலை கீழே தொங்கிய நிலையிலும் இருக்கும் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இவரது பின் வலக்கையில் சக்கரமும், பின் இடக் கையில் சங்கும் இருக்கின்றன. முன் கையில் ஒரு கை அபயம் அளிக்கும் நிலையிலும் மற்றக்கை அருள் சுரக்கும் வகையிலும் உள்ளன.

சேனை முதலியார் கோயிலின் மேற்குச் சுவரில் முகமதிய கட்டடக் கலையின் தன்மைகள் சில காட்டப்படுகின்றன. இவை முகமதிய படையெடுப்புகளின் விளைவுகளால் கிடைக்கப்பெற்ற கட்டடக் கலையைக் காட்டுகின்றன.

மூன்றாம் பிராகாரத்தில் மேற்குப் பகுதியில் உள்ள பவித்திர மண்டபத் தூணில் இரண்டு தலைகளையுடைய பறவையின் ஆற்றல் வியக்கத்தக்க வகையில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் கூரிய அலகுகள் இரண்டும் அதன் இருபுறமும் இரண்டு யானைகளைக் கொத்தித் தூக்கி நிற்பதோடு அதன் இரு கால்கள் ஒவ்வொன்றின் விரல்களால் இருபுறமும் இரண்டு யானைகளைப் பற்றித் தூக்கி நிறுத்துவதும் அழகுறச் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளன. இது கற்பனையின் அடிப்படையில் அல்லாமல் ஏதோ புராண நிகழ்ச்சியை அறிவிப்பதாக இருக்கக் கூடும்.

ஸ்ரீபண்டாரத்திற்கு எதிரில் நாற்கால் மண்டபத்தின் தெற்குத் தூணில் விபீடணர் அரங்கவிமானத்தை ஏந்திச் செல்லும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

பரமபதவாசல் கம்பங்களில் தசாவதாரங்கள் சிற்ப வடிவில் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு தூணில் விபீடணர் அரங்கநாதர் எழுந்தருளிய, அரங்கவிமானத்தை எடுத்துச் செல்லும் சிற்பத்தைக் காணலாம்.

சேஷராயர் மண்டபத்தின் தூண்களில் இரண்யனைத் திருமால் வதைப்பதும், சீதையை மணப்பதற்கு முன் இராமர் வில்லை முறிப்பதும், ஆஞ்சநேயர் இராவணன் அவையில் தன்வாலைச் சுருட்டிக் கொண்டு அமர்வதும் சிற்பவடிவில் காட்டப்பட்டுள்ளன.

2. மன்னர்களின் சிற்பங்கள்

இக்கோயிலில் அரங்கநாதரை வணங்கும் முறையில் நாயக்க மன்னர்களின் திருவுருவங்களைத் திருவந்திக் காப்பு மண்டபத்தில் காணலாம். கருட மண்டபத்தைத் தாங்கி நிற்கும் தூண்களில், மதுரை நாயக்கர், திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த நாயக்கர் பரம்பரையினர், இம்மண்டபத்தைக் கட்டுவதற்கு நன்கொடை அளித்தவர் ஆகியோர்களின் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

கருட மண்டபத்திலிருந்து கீழே இறங்கும் படிகளில் இராமாயணச் சரிதக்சிற்பங்கள் மிகநுணுக்கமாகப்பொறிக்க்ப்பட்டுள்ளன.

மூன்றாம் பிராகாரத்தின் மேற்குப் பகுதியில் விஜயரங்க சொக்கநாத நாயக்கர், அவர் துணைவி, அவர் புதல்வர், அவர் மருமகள் ஆகியோர்கள் உருவங்கள் தந்தத்தால் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. ஒராண்டு அரங்கநாதரை வழிபட அவர்கள் கோயிலுள் செல்வதற்கு முன்பே அரங்கநாதரது படியேற்ற விழா நிறைவு பெற்றது. அதை மீண்டும் நடத்த வேண்டுமென அம் மன்னர் வேண்டினார். ஆனால் அம்மன்னர் விடுத்த வேண்டுகோள் மறுக்கப்பட்டது. இந்த மறுப்பை எதிர்பார்க்காத மன்னரும், அவர்களுடைய குடும்பத்தினரும் திகைப்பு எய்தினர். இத்திகைப்பு அவர்கள் உருவங்களின் முகங்களில் வடிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் பிராகாரத்திலுள்ள சேஷாரயர் மண்டபத்தின் முகப்பில் எட்டுத் தூண்களிலும் முன்கால்களைத் தூக்கிப் பாய்ந்தெழும் நிலையில் குதிரைகளின் மீது போர்வீரர்கள் அமர்ந்திருக்கும் நிலையில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் சிறந்த கலைநயத்தை விளக்குகின்றன. இவ்வுருவங்கள் ஆற்றல்மிக்க போர் வீரர்கள் அமர்ந்திருக்கும் காட்சியை விளக்குகின்றன. அக்குதிரைகளின் கால்களின் அடியில் காட்டு மனிதர்கள் ஆங்கிருந்து கொடிய விலங்குகளை எதிர்த்துப் போர் புரிகிறார்கள். இவையெல்லாம் இந்துமதம் தழைத்தோங்கத் தலைபட்ட விஜய நகரப் பேரரசின் எழச்சி நிலைகளைக் காட்டுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்,

3. பேரருளாளர்கள்

திருவரங்க நாச்சியார் திருக்கோயிலின் தெற்குப் பிராகாரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் 12 தூண்களில் ஆழ்வார்களின்

திருவுருவங்கள் அழகிய முறையில் சிற்ப வடிவில் உள்ளன. சேஷராயர் மண்டபத்தில் உடையவர் சிற்பம் காணப்படுகிறது.

4. மக்கள் உருவச் சிற்பங்கள்

வேணுகோபாலர் கோயில் சிற்பங்கள் ஒய்சால மன்னர்களின் கலைத் திறமையைக் காட்டுகின்றன. வெளிப்புறச் சுவர்களில் உயிர்ப்புடைய புடைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இச்சிற்பங்களில் வீணை மீட்டும் கன்னியர் இருவர் உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

வேணுகோபால் கோயில் விமானத்தின் அடித்தளத்தின் இடப்பக்கத்தில் அழகிய கன்னி ஒருத்தியின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இக்கன்னியின் கொண்டைப் பகுதி திரண்டு வெளியில் புடைத்துக் கொண்டிருக்கிறது. இக்கன்னியின் சிறுத்த இடையும், மலர்ந்த மார்பகங்களும் கவனத்தை ஈர்க்கும் வகையில் உள்ளன. இக்கன்னியின் மார்பில் முத்து மாலைகளும், தலைக்கு, மேலிருந்து வளைந்த கொடியும் இருக்கின்றன.

மற்றும் பெண்மணியொருத்தி இசைக்கருவி ஒன்றைக் கையில் ஏந்திக் கொண்டு ஊக்கமுடன் தோற்றமளிக்கிறாள். மற்றொருத்தி தன் முகத்தில் மகிழ்ச்சி பொங்க நிற்கிறாள். ஆனால் அவ்வுருவத்தின் கைகள் துண்டிக்கப்பட்டநிலையில் இருக்கின்றன; மற்றொரு மங்கை இடக்கையில் கிளியை ஏந்திக் கொண்டிருக் கிறாள்.

அடுத்தபெண் நின்றநிலையில் தன்வலக்காலைப் பின்புறமும் இடக்காலை முன்புறமாகவும் வைத்துக் கொண்டும் இருக்கிறாள். இவளது வலக்கையில் கிளி ஒன்று இருக்கிறது. இதைத் தவிர அவளுக்கருகில் தொங்கி நிற்கும் ஓர் ஊஞ்சலில் ஒரு கிளி தலையை மேலே தூக்கிக் கொண்டு நிற்கிறது. அடுத்த நிலையில் பெண் ஒருத்தி இடக்கையில் கண்ணாடியை ஏந்திக் கொண்டு அக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்த வண்ணம் வலக்கையைத் தன்தலைக்கு மேல் உயர்த்தித் தன் நெற்றியில் திலகமிட்டுக் கொண்டிருக்கிறாள். இவள் இவ்வாறு செய்வதற்குரிய காரணம் முகத்திற்கு நேராக திலகமிட்டுக் கொண்டால் தன் முகப்பார்வை கண்ணாடியில் விழும்போது அதனை அவள் வலக்கை மறைத்து விடும் என்பதற்காக ஆகும்.

5. பிற கலை நுட்பங்கள்

இக்கோயிலில் நான்கு கால் மண்டபங்கள் பல. அவற்றில் சில மண்டபங்கள் கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ள . அக்கல்

கள் நேர்த்தியாகத் தேய்க்கப்படுவதால் அவற்றிற்கு ஒளிமிக்க தோற்றம் கிடைக்கிறது. இத்தகைய ஒளிமிக்க மண்டபங்கள் இருக்குமிடங்களாவன :- அரங்கவிலாச மண்டபம், கருட மண்டபம் (பரமன் மண்டபம்),பவித்திரோற்சவ மண்டபம், உள்கோடை மண்டபம், அருச்சுன மண்டபம், ரேவதி மண்டபம், கருவூலத்திற்கு அருகில் தாயார் சந்நிதி முன் மண்டபம், பங்குனி உத்திர மண்டபம், ஆயிரக்கால் மண்டபம். கம்பர் மண்டபத்தில் நான்கு பெரிய தூண்களைத் தவிர நான்கு முனைகள் ஒவ்வொன்றிலும் சிறிய இரண்டு தூண்கள் இணைந்துள்ளன. இத் தூண்களைத் தட்டினால் மெல்லிய ஓசை வெளிப்படுகிறது.

ஐந்தாம் பிராகாரத்திலுள்ள அரிய காட்சியகத்தில் கலைச் சிறப்புகளைக் காணலாம். செப்புத் தகடுகளில் செதுக்கப் பட்டுள்ள நன்கொடைப் பட்டயங்களும், அழகிய தந்தச் சிற்பத் தொகுப்புகளும், உலோகத்தினால் வடிக்கப்பட்ட பல தெய்வச் சிலைகளும் பல வகை படைக் கருவிகளும், கலையின் சிறப்பு மிக்க தன்மைகளை எடுத்துக் காட்டுகின்றன.

6. ஓவியங்கள்

திருவரங்கநாதர் கோயிலில், காணப்படும் ஓவியங்களில் தெய்வத் திருவுருவங்களின் ஓவியங்கள் பெரும்பான்மையின.

தாயார் சந்நிதியின் இரு வரிசைகளிலும் தூண்களைக் கொண்டுள்ள அகன்ற பிராகாரத்திற்கு மேல்தளம் இருக்கின்றது. இதன் கூரைப்பகுதியின் உள்புறத்திலும் சுவர்களின் உயர்நிலைப் பகுதிகளிலும் தெலுங்கு மொழி வாசகங்களைக் கொண்ட ஓவியங்கள் மங்கிய நிலையில் காணப்படுகின்றன.

பங்குனி உத்திர மண்டபத்தின் தூண்களில் இராமர், விபீடணர், ஆஞ்சநேயர், ஜாம்பவான் ஆகியோர்கள் திருவுருவங்கள் ஓவியங்களில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் விபீடணர் சரணாகதியை நினைவுபடுத்துகின்றன. உள் ஆண்டாள் சந்நிதியில் திருப்பாவைப் பாடல்களுக்கு விளக்கம் தரும் காட்சிகள் ஓவியங்களில் விளக்கம் தருகின்றன.

இவ்வோவியங்கள் விசயரங்க சொக்கநாதர் காலத்தியவை என்பது தெரியவருகிறது.

கருடாழ்வார் சந்நிதியின் உட்புறத்துச் சுவர்களில் திருமாலின் பத்து அவதாரங்களும் ஓவியங்களில் காட்டப்பெற்றுள்ளன.

நம்மாழ்வார் சந்நிதியில் திருமங்கையாழ்வார், மதுரகவிகள், உடையவர் மணக்கால் நம்பி ஆகியோர்கள் திருவுருவங்களின் ஓவியங்களைக் காணலாம்.

அரங்கநாதர் கருவறைப் பிராகாரச் சுவரின் மேல் பகுதியில் நாயக்கர் காலத்திய ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்கு வைணவ நூற்றெட்டுத் திவ்விய தலங்கள் ஓவியங்களின் வடிவில் தீட்டப்பட்டுள்ளன, இங்கு முற்றத்தின் கூரையில் இராமாயணக் காட்சிகள் தெளிவாகக் காட்டப் பெற்றுள்ளன. இங்குள்ள ஓவியங்களில் விசயரங்கச் சொக்கநாதர் காலத்திய மொழிநடை காணப்படுகிறது.

இராமானுஜரின் சந்நிதியிலும் திருப்பாவைப் பாடல்களை விளக்கும் வகையிலும் ஓவியங்கள் உள்ளன. ஆண்டாள் அருளிய திருப்பாவையில் இராமானுஜருக்கு ஆழ்ந்த ஈடுபாடு இருந்து வந்ததால் இவ்வோவியங்கள் இவரது சந்நிதியில் சிறப்பிடம் பெறுகின்றன.

திருவுண்ணாழிப் பிராகாரத்தில் பாகவதத்தின் காட்சிகள் அழகுறத் தீட்டப்பெற்றுள்ளன.

12 கல்வெட்டுகள்

வரலாற்றில் திருவரங்கம் திருக்கோயில் தக்கதொரு இடம் பெற்றுள்ளது. ''விரிந்த அலைகளோடு கூடிய மிகப்பெரிய காவிரியாற்றின் இடைக்குறையில், திருமகள் விரும்பி உறையும் திருமார்புடையவரும், நீலநிறம் கொண்டவருமாகிய திருமால், ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனின் பாம்பணையில் அழகுறப் பள்ளி கொண்டுள்ள நிலை, நீல நிறமுடைய மேகம், பொன்மாலையினைச் சூழ்ந்து படிந்திருக்கும் பான்மையில் திகழ்கின்றது'' என்னும் சிறந்த சொல்லோவியம் மிக முற்பட்ட காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.[17] கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே சிறந்து விளங்கிய திருவரங்கம் ஆழ்வார்களால் பெரிதும் பாராட்டப் பெற்றுள்ளது.

ஆழ்வார்களின் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து 10-ஆம் நூற்றாண்டு வரை 500 ஆண்டுகள் என ஆராய்ச்சியா

---

17. சிலப்பதிகாரம்

ளர்கள் [18] கருதுகிறார்கள். ஆழ்வார் சிலர் வரலாறு இக்கோயி லுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. பெரியாழ்வார் தாம் வளர்த்த கோதை ஆண்டாளைத் திருவரங்கப் பெருமாளி டம் ஒப்புவித்து சிலகாலம் திருவரங்கத்தில் தங்கியிருந்தார். தொண்டரடிப்பொடியாழ்வாரும், திருப்பாணாழ்வாரும், திருவரங் கத்திலே வாழ்ந்தவர்கள். குலசேகராழ்வாரும், திருமங்கையாழ் வாரும் இக்கோயிலுக்குப் பலதிருப்பணிகள் செய்தனர். இவர்கள் காலத்தில் திருவரங்கம் எத்தகைய நிலையில் இருந்தது என் பதை அவர்கள் அருளிய பாசுரங்களே புலப்படுத்துகின்றன.

திருவரங்கத்திற்குப் பெரிய மதில்கள் இருந்தன என்பதைப் பெரியாழ்வார் [19] குலசேகராழ்வார், [20] திருப்பாணாழ்வார், [21] திருமங்கையாழ்வார், [22] ஆகியோர்கள் தாங்கள் அருளிய பாசு ரங்களில் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

திருவரங்கத்தில் மணிமாடமாளிகைகள் சிறப்புற இருந்தன என்பதைக் குலசேகராழ்வார் [23] குறிப்பிடுகிறார் இந்தத் திரு வரங்கத்தைப் பெரிய கோயில் எனவும், திருவரங்கம் மிகப்பெரிய நகரமாக இருந்தது என்பதற்காக இதனை மாநகர் எனவும் தொண்டரடிப் பொடியாழ்வார் [24] தம் பாசுரத்தில் கூறியுள்ளார்.

குலசேகராழ்வார் இக்கோயிலின் மூன்றாம் பிராகாரத்தை அமைத்தார் என்பது இப்பிராகாரம் இவர் பெயரிலே இன்றும் விளங்கி வருவதால் தெரிய வரும். திருமங்கையாழ்வார் நான்காம் பிராகாரத் திருமதிலைக் கட்டியதாகக் கோயில் ஒழுகு நூல் கூறு கிறது. இப்பிராகாரம் ஆலிநாடான் என்னும் இவர் பெயரால் இன்றும் விளங்கி வருகிறது.

---

18. இவ்வாராய்ச்சியாளர்கள் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், பி. டி. சீனிவாச ஐயங்கார், பி. ஏ. கோபிநாத ராவ், மு. ராகவ ஐயங்கார் ஆகியோராவார் - நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மயிலை மாதவ தாசன் பதிப்பு, 1943, பக்கம் 32
19. பெரியாழ்வார் திருமொழி 3-3-2
20. பெருமாள் திருமொழி 1-5
21, அமலனாதிபிரான் 1
22. பெரிய திருமொழி 5-5-5
23. பெரிய திருமொழி 1-5
24. தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை 1-2-11

திருமங்கையாழ்வார் தாம் அமைத்த நான்காம் பிராகாரத்தி லுள்ள திருமதிலுக்குத் தென்மேற்கு மூலையில் நூற்றுக்கால்மண்டபம் ஒன்றும், வடமேற்கு மூலையில் மேலப்பட்டாபிராமன் சந்நிதி அருகில் நூற்றுக்கால் மண்டபம் ஒன்றும், வடகிழக்கு மூலையில் இராமர், பரமபதநாதர், ஆகியோர் சந்நிதிகளில் நூற்றுக்கால் மண்டபம் மற்றொன்றும் அமைத்தார். இம்மண்டபங் களெல்லாம் காலப்போக்கில் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப் பட்டன, இதன் உண்மையை மேலப்பட்டாபிராமன்,முதலாழ்வார், தீர்த்தகரை வாசுதேவப் பெருமாள் ஆகியோர் கோயில்கள் ஒரே நூற்றுக்கால் மண்டபப் பகுதியாகத் தற்போது இருப்பதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்,

மற்றும் தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தில் நந்தவனம் வைத்து அரங்கநாதருக்குப் பூமாலை தொடுத்துக் கொடுத்தவர். அவர் பராமரித்து வந்த நந்தவனத்தைத் தாம் கட்டத் தொடங்கிய மதில் சுவர் பாதிக்கக் கூடாது என்பதற்காகத் திருமங்கையாழ்வார் இந்த நந்தவனப் பகுதியை அது இருந்தவாறே ஒதுக்கிவிட்டுத் திருச்சுற்று மதிலைக் கட்டி முடித்தார்.

மேலும் இவர் கொள்ளிடக்கரையில் அழகிய படித்துறை ஒன்றைக் கட்டி முடித்தார்; அத்துறைக்குப் 'பாடியவாளன் துறை' என்று அவர் பெயரிட்டார். இன்று அத்துறை 'பாடுவான் துறை' என்ற பெயரில் இருந்து வருகிறது, இதற்குத் 'திரு மங்கை மன்னன் படித்துறை' என்னும் மற்றொரு பெயரும் உள்ளது.

இவ்வாறு ஆழ்வார் சிலராலும் விரிவாக்கம் செய்யப் பெற்ற திருவரங்கம் கோயில் இராமானுஜர் நல்லாதரவுபெற்றுச் சிறந்து விளங்கிற்று. இதன் பின்னர்ச் சோழர், பாண்டியர், ஓய்சால, நாயக்க மன்னர்கள் காலங்களில் இக்கோயில் மேலும் வளர்ச்சி யுற்றது, இதுபற்றிய விவரங்கள் இக்கோயிலில் அக்காலங்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் காணலாம்.

இக்கோயிலுக்குரிய கல்வெட்டுகளில் 353 கல்வெட்டுகளுக் குப் படிகள் எடுக்கப்பட்டன. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் ஆட்சி அமைந்த பின்னர்ப்பொறிக்கப்பெற்ற கல்வெட் டுகளில் மிகப் பழமையான கல்வெட்டு முதலாம் பராந்தகனின் (கி. பி, 907) 17-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டாகும். இம்மன்னர் திருவரங்கநாதர் கோயிலுக்கு ஒரு வெள்ளிக் குத்துவிளக்கு

அளித்ததையும் அதற்குத் தேவைப்பட்ட கற்பூரம், பருத்தித்திரி நூல் முதலியவை வாங்குவது உட்பட அதனை நிலையாக நன் முறையில் பராமரித்து வருவதற்காக 51 பொற்காசுகள் வழங்கியதையும் அது தெரிவிக்கிறது.

இக்கோயிலில் காணப்படும் சோழ, பாண்டிய, ஒய்சால மன்னர்களின் கல்வெட்டுகளில் மிக முந்திய கல்வெட்டு 'ராஜகேசரி சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவன்' என்கிற ராஜகேசரி வர்மன் ஆகிய முதலாம் குலோத்துங்கன் (கி. பி. 1070-1120) ஐந்தாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இதன் தென்பகுதியில் காணப்படுகிறது. இக்கல் வெட்டு. 'புகழ் விளங்க' எனத் தொடங்குகிறது. இதுபோன்று இப் பிராகாரத்தின் சொர்க்கவாசல் வாயிலுக்கு இடப்புறத்துச் சுவரில் முதலாம் குலோத்துங்கச் சோழன் கல்வெட்டு காணப்படுகிறது.

இக்கோயிலில் காணப்படும் விக்கிரமச் சோழன் கல்வெட்டு 'பூமாலைமிடந்து' [25] எனத் தொடங்குகிறது. இதில் அமாவாசை நாள்களில் அபூர்வி ஸ்ரீ வைணவர்களுக்கும் பத்துமலையாள ஸ்ரீவைணவ பிராமணர்களுக்கும் பங்குனி மாதத் திருவிழாக்களின் போது திருவமுது செய்வித்த அறக்கட்டளை ஒன்று ஏற்படுத்தப் பட்டதைக் கூறுகிறது.

அம்மன்னரின் ஏழாம் ஆட்சி ஆண்டுக்குரிய கல்வெட்டு, தென்னை மரங்களும், பாக்கு மரங்களும் வளர்ப்பதற்காகக் கோவாணர்களுக்குக் கோயில் நிலங்களைக் குத்தகையின் பேரில் அளித்ததைக் கூறுகிறது, [26] இவர் பதினொன்றாம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு நந்தவனம் வைப்பதற்காக, மூவர் நிலத்தை வாங்கி அதனை அறக்கட்டளையாக நிறுவியதைக் குறிப்பிடுகிறது. [27] இக்கல்வெட்டு 'பூ மன்னு பதுமம்' எனத் தொடங்குகிறது.

இரண்டாம் இராஜராஜன் (கி. பி. 1146-1173) கல்வெட்டு ஒன்றேயாகும். பதினொன்றாம் ஆட்சி ஆண்டுக்குரிய இக் கல் வெட்டு 'பூ மருவிய' என்னும் தலைப்புடன் தொடங்குகிறது, இக்கோயிலில் திருவிளக்கு ஏற்றி வைப்பதற்காகவும், இங்குக் கற்பூரம் ஏற்றுவதற்காகவும், மலைநாட்டிலுள்ள வெளிநாட்டு

---

25. ஏ ஆர் இ - 33, 1936-37
26. ஏ ஆர் இ - 56, 1936-37
27. ஏ ஆர் இ - 55, 1936-37

கொடை இரவிவர்மனால் அறக்கட்டளை நிறுவப்பட்டதை இது கூறுகிறது. [28]

இரண்டாம் இராசாதிராஜனின் (கி. பி. 1163 - 1179) கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. இவை 'கடல் சூழ்ந்த' எனனும் தலைப்போடு தொடங்குகின்றன. இவற்றில் ஒரு கல்வெட்டு, ஒரு விளக்கு வைத்து வருவதற்காக, கைவர நாட்டு குறத்திப் பட்டினம் பகுதியைச் சேர்ந்த ராஜராஜ உத்தமச் செட்டியால் நிறுவப்பட்டதைக் கூறுகிறது. [29] மற்றொன்று திருத்தலத் துறை எனக்குறிப்பிடப்பெறும் இலால்குடியில் உள்ள கோயிலில் தனித் திருவிழாக்கள் நடத்துவதற்காக 1000 காசுகள் அறக்கட்டளைக்காகச் செலுத்தப்பட்டதைக் கூறுகிறது. [30]

இவ்வாறு இவ்வறக்கட்டளை நிறுவியவரே, மன்னர் சார்பில் கொல்லிமலைக்குப் படையெடுத்துச் சென்றதைக் குறிப்பிடுகிறது

மூன்றாம் குலோத்துங்கச் சோழ மன்னர் (கி. பி. 1178–1216) மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு 'புயல் வைத்து, என்னும் பாசுரத்தோடு தொடங்குகிறது. ஐப்பசி. பங்குனி மாதங்களில் தனிப்பட்ட திருவிழாக்களில் தெப்பத்திற்காக நடத்தப்பெறும் புனித நீராட்டுக்காக ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டதை இது குறிக்கின்றது. [31]

இம்மன்னரின் ஆறாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, திருவாய்ப்பாடி நல்லூரில் ஒரு நிலத்தைத் தெய்வத்திரயம் திருவிழாவின்போது, வழிப்பாட்டுக்காக வரி செலுத்தாத முறையில் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இது கோபால ஆயர்களால் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. காரைக்கால் கன்ன வளநாட்டு வள்ளுவப்பாடியிலுள்ள நிலங்களின் உரிமையை இவ்வாயர்கள் பெற்றிருந்தார்கள். [32] இவர்கள் திருவிடையாட்டம் அழகிய மணவாளப் பெருமாளுக்கும், தேவிக்கும் வழிபாடு ஆற்றப்படுவதற்காக, நிலங்களை அளிக்க அவர்கள் இசைவு தெரிவித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.

இந்த ஆவணம் 67 கிராமங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் அவை உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டது. (இப்பகுதியே தற்காலத்துத் திருச்சிக்கு வடக்கிலுள்ள முசிறியாகும்.)

---

28. ஏ ஆர் இ – 68. 1936-37
29. ஏ ஆர் இ – 63, 1936-37
30. ஏ ஆர் இ - 73, 1936–37
31. ஏ ஆர் இ - 75, 1936–37
32. ஏ ஆர் இ – 61. 1936-37

இம்மன்னரின் ஏழாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, பெண்மணி ஒருத்தியும், அவள் மகனும் சேர்ந்து. அப்பெண்மணியின் நன்மைக்காக 2000 காசுகள் அழகிய மணவாளப் பெருமாளின் வழிபாட்டுக்காக அறக்கட்டளையாக நிறுவப்பட்டதைக் குறிக்கிறது.[33]

இம்மன்னரின் 19-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சுவைதரும் செய்தியைக் குறிக்கிறது. இது 'மதுரையையும், பாண்டியன் முடியையும் கொண்ட' என்னும் பொதுத் தலைப்புடன் தொடங்குகிறது, இது இக்கோயிலில் விளக்கு வைப்பதற்காக 12 காசுகள் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது. இந்த நன்கொடை அளித்தவர் மூன்றாம் குலோத்துங்க மாமன்னரின் சார்நிலைப் படைத்தலைவராகிய தெலுங்குச் சோழ நல்ல சித்தரசன் என்கிற மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் துணைவியாகும்.[34]

இம்மன்னர் 34-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயிலுக்குரிய பலவகை நிலங்களின் விலைச்சல்கள், இன்ன பங்கு கோயிலுக்குச் சேர்ந்தது என்பதையும், இன்ன பங்கு பயிரிடுவோர்களுக்குச் சேர்ந்தது என்பதையும் நிர்ணயிக்கும் வகையில் காங்கயராயர் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது.[35]

இம்மன்னர் 35-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, 'புயல் வைத்து' எனத் தொடங்குகிறது. இக்கல்வெட்டு அழகிய மணவாளப்பெருமான் வழிபாட்டுக்காகவும்,நைவேத்தியங்களுக்காகவும் நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது. இந்நன்கொடை அளித்தவர் ராஜராஜபுரம் ஜகத்துக்கே வீர ஆசாரியார் என்கிற அம்பலவாணர். பெரிய பெருமாள் ஆதரவில் கீழ்வாழ்ந்த பெண்மணி, அம்பலவாணர் கோயில் ஆழ்வார் 'திருநாமத்துக்காணி' என்னும் பெயரில் நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது [36]

மூன்றாம் குலோத்துங்கச் சோழன் நாள் குறிப்பிடப்படாத ஒருகல்வெட்டு இம்மன்னர் வழிபடும் கோயில் பிராகாரத்திற்குப் பழுது பார்க்கப்பட்டதைக் குறிக்கிறது.

இம்மன்னரின் 37 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இந்தக் காலத்திற்குரிய கல்வெட்டுகளில் இறுதியாக உள்ளது.

---

33. ஏ ஆர் இ – 77. 1936–37
34. ஏ ஆர இ – 67, 1936-37
35. ஏ ஆர் இ – 32. 1936–37
36. ஏ ஆர் இ - 1, 1936-37

இது இராஜகேசரி சதுர்வேதி மங்கலம் நல்லூர் நாட்டுப் பிரம தேயமாகிய இராஜகேசரி சதுர்வேதி மங்கல நிலத்தைப் பிராமண குலத்துப் பெண்மணி ஒருத்தி நன்கொடையாக அளித்தைக் குறிப்பிடுகிறது.[37]

மூன்றாம் குலோத்துங்கனின் வழிபாட்டுத் தெய்வத்திற்குப் பூசை செய்தல் பற்றியும், அடையவளைந்தான் திருமாளிகைப் பிரகாரச் சுவரில் பழுதுபார்க்கும் வேலையும் குலோத்துங்கச் சோழ வான கோவரராயர் என்கிற நல்லான் பொறுப்பில் விடப்மட்டது பற்றியும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக்கல்வெட்டு ஒன்று கூறுகிறது.[38]

இக்கோயிலில் ஒரு விளக்கு வைப்பதற்காகவும், இக்கோயில் தெய்வத்துக்குப் பூமாலை சர்த்துவதற்காகவும், 1000 காசுகள் அறக்கட்டளையாக அளிக்கப்பட்டதை மூன்றாம் இராஜராஜ னின் (கி. பி, 1216-1246) 21.ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

இவ்வாறு நன்கொடை அளித்தவர் கோமள தேவியர் ஆவர் இத்தேவியர் மூன்றாம் இராஜராஜனின் அரசிகளுள் ஒருவராக இருக்கவேண்டும் என்பதை ஜம்புகேசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றினைக் கொண்டு அறியலாம்.[39]

ஒய்சாள மன்னர்கள் அரங்கநாதர் கோயிலுக்குப் பல நன்மை கள் செய்துள்ளார்கள். அரங்கநாதர் திருப்பள்ளியெழுச்சி வழி பாட்டுக்காகத் 'திருக்குழலூதின பிள்ளை' (வேணுகோபால் கோயிலின் துவாரத் துவாஜகுலத் திலகன் ஸ்ரீ ராம பட்டரால் ஒரு நிலம் அளிக்கப்பட்டதை ஒய்சாள மன்னர் 1154 சக ஆண்டு (கி.பி. 1232-ஆம் ஆண்டு) தொன்மைக் கல்வெட்டு கூறுகிறது.

ஸ்ரீராமபட்டர் குருஉறப்புர வைணவப் பேராசிரியரின் புதல் வரும் மந்திர சாத்திரங்களை நன்குகற்றவரும் ஆவர் என்பது தெரியவருகிறது. இவர் நல்உறரி பூபாலர் எனக் குறிக்கப்பெறும் ஒய்சாள மன்னராகிய நரசிம்மரின் காலத்தியவர். இவ்வோய்சாள நரசிம்மர் கி.பி, 1232ஆம் ஆண்டில் சோழ மன்னரை ஆட்சி பீடத் தில் அமர்த்தியதற்காகச் சோழேந்திரர் பிரதிஷ்ட குரு என்னும் பட்டப்பெயரைப் பெற்றவர்.

---

37. ஏ ஆர் இ - 34. 1936-37
38. ஏ ஆர் இ - 89, 1936-37;
39. ஏ ஆர் இ - 22, 1931

ஒய்சாள மன்னராகிய பிரதாபச் சக்கரவர்த்தி வீர ராமநாத தேவ மன்னரின் (கி.பி 1255-95) மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இக்கோயில் கோபுரத்தின் மேற்குப் பகுதியில் ஒரு சாலை அமைக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

திருவரங்கம்கோயிலின் எடுத்தகை அழகியசிங்கர் கோயிலைக் கொண்டுள்ள ஐந்தாம் பிராகாரத்துக் கோபுரத்தின் மேற்புறம் ஒரு சாலை அமைக்கப்பட்டதையும், இக்கோயிலுக்கு இம்மன்னரின் முதன்மையாளராக இருந்த கங்கதேவ சிங்கண்ண தண்டநாயகனால் ஒரு நிலம் அறக்கட்டளையாக அளிக்கப்பட்டதையும் ஒய்சாள மன்னர் பிரதாப சக்கரவர்த்தி வீரராமநாத தேவரின் மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இந்தச் சாலை அமைக்கும் பணி கருட வாகனப் பண்டிதரிடம் ஒப்புவிக்கப் பட்டதையும், இவர் இந்த நன்கொடையாளரின் இரட்சகர் எனும் பட்டப்பெயரையும் பெற்றிருந்தார்.[40]

திருவரங்கம் கோயில் நான்காம் பிராகாரத்தின் தன்வந்திரி கோயிலின் முன்புறமுள்ள கல்வெட்டுச் செய்தி சுவைமிக்கதாக உள்ளது. இது இக்கோயிலின் நான்காம் பிராகாரத்தில் வடக்குக் கோபுரத்திற்கு மேற்கே திருநடை மாளிகையில் மருந்துவமனை ஒன்று பராமரிப்பதற்காக அரசு மருத்துவராகிய கருட வாகனப் பட்டருக்குக் கங்கதேவர் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுறது.

இந்த நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலம் பாண்டி குலசனி வடநாட்டில் ஒரு பகுதியாகிய விளநாட்டின் மும்முடிச் சோழ சதுர் வேதி மங்கலத்தில் இருந்து வந்தது. இந்த மருத்துவமனை முன்பே இருந்திருக்க வேண்டும் என்பதும் அரசு மருத்துவராகிய பட்டர் இதற்காக நியமிக்கப்பட்டார் என்பதும் நன்கு தெரிய வருகின்றன. இந்த மருத்துவமனை 240 ஆண்டுகளுக்குப் பின்னரும் இருந்தது என்பதை 1415 (கி.பி.1493) ஆண்டுக் கல்வெட்டு குறிப்பிடுவதால் இம் மருத்துவமனை மிகவும் முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும்.

'கருடவாகனப் பட்டர்' எனும் பட்டப் பெயரைத் தாங்கிய சீனிவாச பட்டர், முகமதியர் படையெடுப்பால் சேதமுற்ற இம் மருத்துவமனையின் பகுதியைப் பழுதுபார்த்து அதில் தன்வந்திரி நம்பெருமாளின் திருவுருவத்தை நிலைப்படுத்தினார் எனவும் இன்னொரு கல்வெட்டு கூறுகிறது.

ஒய்சாள மன்னரின் பரம்பரை மருத்துவர்கள் பேரறிஞர்கள் என்பதும், ஒய்சாள வீர ராமநாத மன்னரின் காலத்திய கருட

---

40. ஏ ஆர் இ - 80, 1936 - 37

வாகனப் பட்டர் 'ரங்ககோஷனை' எனும் பிரபந்தத்தை இயற்றினார் என்பதும் தெரிய வருகின்றன. இந்நூல் இப்பொழுது கிடைப்பதாக இல்லை. அவர்களது பரம்பரையில் வந்தவரே, வைணவ ஆழ்வார்கள், ஆசார்யர்கள் ஆகியோர்களின் வாழ்க்கையைப் பற்றி 'திவ்விய சூரி சரித்திரம்' என்னும் காவியத்தை இயற்றினார்.

சர்வபஹூம வீரராமநாத மன்னரின் முதன்மையாளராக இருந்த ஆரியப்பிள்ளை தண்டநாயகரின்புதல்வியாகிய கமலதேவி அரசியின் நன்மைக்காக இக்கோயிலுக்கு மலர்களும், மாலைகளும் அளிக்க வேண்டியவராக இருந்து வந்த வைகுந்த தாசருக்கு ஒரு நந்தவனம் அமைப்பதற்காகத் திருக்குறைப்பற்றில் ஒரு நிலம் அளிக்கப்பட்டதை இம்மன்னரின் எட்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது.[41] இந்த நிலத்தின் பக்கம் இருந்த மற்றொரு நிலத்தை, இம் முதன்மையாளரின் இரண்டாம் புதல்வியாகிய சோமளாதேவி தம் புதல்வி திருதங்கையின் நன்மைக்காக, விலைக்கு வாங்கி நன்கொடையாக அளித்தார். கமலாதேவி அரசியே தமது நன்மைக்காக இது போன்றதொரு நன்கொடை அளித்தார்.[42] இது போன்று காஷ்மீர் நாட்டு வணிகர்களாகிய பரதேசி, சாவாசி குலத்தவராகிய சகலகோத்திர அகலபட்டரின் புதல்வராகிய சகலபட்டர் தமது நன்மைக்காகவும், தம் புதல்வரின் நன்மைக்காகவும், இக்கோயிலின் ஒருமுறை வழிபாட்டுக்காக மாலைகள் வழங்குவதற்காகவும் நன்கொடை அளித்ததை இம்மன்னரின் எட்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு கூறுகிறது.

சோழ மன்னர் தம்மைத் துன்புறுத்தியது காரணமாக இராமானுஜர் கர்நாடகத்து மேல் கோட்டுக்குச் சென்றார் எனவும், அங்கு கி.பி. 1098-முதல் 1122 வரையில் தங்கியிருந்தார் எனவும் வைணவர்களிடையே ஒரு கருத்து நிலவியுள்ளது. இக்கால அளவில் இராமனுஜர் கர்நாடகத்தில் இருந்தார் என்பதும் ஒய்சாள மன்னர் பித்திதேவரைச் சமணத்திலிருந்து வைணவத்திற்குத் திருப்பினார் என்பதும் அதன் பின்னர் அம்மன்னர் 'விஷ்ணுவர்த்தனன்' எனும் பெயர் தாங்கினார் என்பதும் அவருடைய ஆதரவும், ஆர்வமும் காரணமாக வைணவம் அந்நாட்டில் ஆழ்ந்து வேரூன்றியதுஎன்பதுஉண்மை. ஆனால்இங்குக் கவனிக்கத்தக்கது முதலாம் முலோத்துங்கனுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மட்டுமின்றி அவர் குடிகளுக்கும் வைணவத்தில் ஈடுபாடு இருந்தது

41. ஏ ஆர் இ —62, 1936—37
42. ஏ ஆர் இ —64, 65; 1936—37

என்பதும் இவரது பரம்பரையினரும், இவரது குடிமக்களுக்கும் திருமால் கோயிலுக்கும் பல நன்கொடை ஈந்தனர் என்பதும் ஆகும். மேலும் இக்கோயிலின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களையும், திருவாய்மொழி பாடல்களையும் ஓதுவதற்கும், குலசேகர ஆழ்வார் பிற்பகுதிப் பாடல்களைப் பாடுவதற்கும் அறக்கட்டளை ஏற்பாடு செய்யப்பட்டதைக் குலோத்துங்க மன்னரின் 15, 19-ஆம் ஆட்சி ஆண்டுகளின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[44]

சடையவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1251 -ஆம் ஆண்டில் பாண்டிய நாட்டில் அரசேற்றார். இவர் சோழர்களையும் ஒய்சாளமன்னர்களையும்வென்று வெற்றிவிழாக்கொண்டாடினார்.

இவ்வேந்தர் திருவரங்கத்திற்குச் சென்று திருமாலை வணங்கிக் கோயிலைப் பொன்வேய்ந்து அங்கு முடிசூட்டிக் கொண்டமையோடு பல துலாபாரதானங்களும் செய்தார். திருவரங்கத்தில் இவர் செய்த திருப்பணிகளும் விட்ட நிவந்தங்களும் அளித்த அணிகலன்களும் பல. அவற்றையெல்லாம் அக்கோயிலில் வரையப்பெற்றுள்ள ஒரு பெரிய வடமொழிக் கல்வெட்டிலும் கோயிலொழுகு வரலாற்று நூலிலும் விளக்கமாகக் காணலாம்.[46]

இங்ஙனம் திருவரங்கத்திலுள்ள திருக்கோயில்களைப் பொன்வேய்ந்தமை பற்றி இவர் 'கோயில் பொன்வேய்ந்த பெருமாள்' என்று குறிக்கப் பெற்றனர். கோயில் பொன்வேய்ந்த பெருமாள் என்னும் பெயருடன் திருவரங்கப் பெருங்கோயிலிலும் பிற இடங்களிலும் படிமங்கள் அமைப்பித்து, அவற்றிற்குத் திங்கள்தோறும் தாம் பிறந்த நாளாகிய மூலத்தன்று திருவிழாக்கள் நடத்திவருமாறு இவர் ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

---

44. ஏ ஆர் இ —61 இ 62 1894
45. ஏ ஆர் இ —225, 1936—37
46. எபி இந்தியா தொகுதி III பக்கங்கள் 7 - 17

இம்மன்னர் திருவரங்கக் கோயிலுக்கு அளித்த நன்கொடைகள் அளவிறந்தன. இம்மன்னர் இரண்டுபடகுகளைநிறுத்தி அவற்றில் ஒன்றில் தமது பட்டத்து யானையை ஏற்றி அதன் முதுகில் தாம் ஏறி அமர்ந்து கொண்டார். மற்றொரு படகு தமது படகின் நீர்மட்டத்திற்கு வருகின்ற வரையில் அதில் அணிகலன்களையும், நாணயங்களையும் கொட்டி நிரப்பினார். பின்னர் அப்பொன்னையும், அணிகலன்களையும் இக்கோயில் கருவூலத்திற்கு நன்கொடையாக வழங்கியதுமன்றித் தமது எடை அளவில் [47] பொன்னால் திருவரங்கநாதர் திருவுருவத்தைச் செய்வித்து அதற்குத் தமது பெயரைச் சூட்டினார்.

சுந்தரபாண்டியனுக்குப் பின் பட்டமெய்திய அவர் புதல்வர் சடையவர்மன் வீரபாண்டியன் திருவரங்கம் கோயிலுக்கு வந்த போது அவர் சகல வித்திய சக்கரவர்த்தி என்னும் ஆரிய பட்டப் பெயரைத் தாங்கிய சொக்கவில்லி பட்டருக்கு விலை மதிப்புடைய கற்கள் பதித்த தலைபாகையையும், தங்கப் பிடிகளையுடைய இரண்டு சௌரிகளையும் அன்பளிப்பாக வழங்கினார். அவற்றை அப்பட்டர் அரங்கநாதர் திருவடிகளிலே காணிக்கையாக அளித்தார் [48]

கி. பி. 1311 ஆம் ஆண்டு மகமதிய மன்னராகிய அலாவுதீனின் படைத்தலைவர் மாலிக்காபூர் திருவரங்கத்தின் மீதுபடையெடுத்து இக்கோயில் கருவறையிலிருந்து மதிப்புடைய பொருள்கள் பலவற்றைக் கொண்டு சென்றார். அவற்றில் ஒன்று அழகிய மணவாளரின் திருவுருவமுமாகும். இத்திருவுருவம் பின்னர் அம் மன்னரிடமிருந்து திரும்பப் பெறப்பட்டது. அத்திருவுருவத்தில் திளைத்த அம்மன்னரின் புதல்வி அரங்கநாதர் ஒளிமயத்தில்மறைந்தார். அவர் துலுக்கநாச்சியாராக இக்கோயிலில் இடம் பெற்றுள்ளார்.

கி. பி. 1327 -28 ஆம் ஆண்டுகளில் முகமதியரின் இரண்டாம் படையெடுப்பு நேர்ந்தது அப்பொழுது முகமதியர்கள் இரண்டாம் முறையாகத் திருவரங்கத்தின் மீது படையெடுக்கத் தொடங்கினர். பல பொருள்களைக் கொண்டு சென்றனர். அப்போது அழகிய மணவாளருடையதிருவுருவத்தைத் திருவரங்கத்து வைணவசமயத் தலைவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் சென்று, அதனைப் பாதுகாத்தனர். இறுதியில் அழகிய மணவாளர் திருவுருவம் திருப்பதியில் வைக்கப்பட்டது. அக்காலத்தில் செஞ்சி

47. ஏ ஆர் — பக்கம் 142, 1912
48. 52/92

உறரிஉறரபுக்கருடைய துணைவ்ராக இருந்த கோப்பண்ண ராயர் முகமதியர்களை வென்று 1371 ஆம் ஆண்டில் திருவரங்க நர்தருடைய திருவுருவத்தை மீட்டு அதனைத் திருவரங்ம் கோயி லாரிடம் ஒப்புவித்தார். இதன்பின்னர் உத்தம நம்பி போன்ற வைணவப் பெருந்தலைவர்கள் விசயநகர மன்னர் உறரிஉறர ராயரிடமும் அவர் புதல்வர் விருப்பண்ண உடையாரிடமும் தொடர்பு கொண்டார்கள். அவர்கள் திருவரங்கம் கோயிலுக்கு மிகுதியான பொன்னை அளித்தார்கள். அதைக்கொண்டு இக் கோயில்களுக்குத் தேவைப்பட்ட பல திருப்பணிகள் மேற்கொள் ளப்பட்டன.

கோப்பண்ணராயரால் மீட்கப்பட்டு நிலைநாட்டப்பட்ட அழகிய மணவாளருக்கு விருப்பண்ண உடையார் பெயரில் திரு விழா நடத்தப்பட்டது. இன்றும் இத்திருவிழா விருப்பன்திருவிழா என்னும் பெயரில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்விவ ரத்தைத் திருவரங்கம்கோயிலில் இரண்டாம் பிராகாரத்தில் சேனை முதலியார் கோயிலுக்கு எதிரில் அரங்கநாகர் திருவடியின் அருகே பொறிக்கப்பட்ட கல்வெட்டு குறிப்பிடுகிறது.

13. பூசைகளும் திருவிழாக்களும்

1. பூசைகள்

பண்டைக்காலத்தில் வகுக்கப்பெற்ற சடங்குமுறைகள் திரு வரங்கத்தில் இப்போதும் பாதுகாத்து வரப்பெறுகின்றன. இப் பூசை முறைகளும், சடங்குமுறைகளும் 'கோயிலொழுகு' நூலில் குறிக்கப்பெற்றுள்ள விதிமுறைகளைப் பெரும்பாலும் பின்பற்றி நடத்தப் பெறுகின்றன. இங்குப்பூசை புரிபவர்களும், பணியாளர் களும், தத்தம் கடமைகளை காலம்தாழ்த்தாது தொடங்குகின் றனர். கோயிலின்கருவறைக்கு அருகில் பசுவொன்றும், கோயில் யானை ஒன்றும் ஒன்றிற்கொன்று எதிர்முகமாக அரங்கநாதர் திருமுன்னிலையில் நிறுத்தப்படுகின்றன. அதே சமயத்தில் கொள்ளிடத்திலிருந்து திருமஞ்சன ஊழியர் இருவரால் முகந்து கொண்டு வரப்பெறும் புனித நீர், கோயிலின் உள்ளறையில் வைக்கப்பெற்றுள்ள ஐந்து கலசங்களில் நிரப்பபுகின்றது. கோயில் கருவறைச் சுற்றுப்புறங்கள் மிக்க கவனத்துடன் தூய்மை செய்யப்படுகின்றன. இங்குப் பூசைத் தொடக்கப்பணிகள் மேற் கொள்ளப்படும்போது, இசையில் வல்ல ஒருவர் வீணை மீட்டி, திருப்பள்ளியெழுச்சி பாடி, அரங்கநாதரை துயில் எழுப்புகி றார். அப்போது குறிப்பிட்ட ஒரு மணி ஒலிப்பின் மூலம்

திரைச்சீலை அகற்றப்படுகிறது. மிகவும் சிறந்த மங்கலப் பொருள்களாகிய யானையையும், பசுவையும் பெருமாள் முதலில் கண்டருளிய தொடர்ச்சியாக அன்பர்களுக்கு அவர் அருள் பாலித்து வருகிறார். இக்கோயிலை வலம் வந்து கருவறையில் முன்வந்து எய்துகிற அடியவர்கள் அப்போது பெருமாளை வணங்குகிறார்கள். பெருமாளின் அருள்பார்வை முதன்முதலாக அவர்கள் மீது பாய்கிறது. பிறகு பசுவையும், யானையையும் தம் இருப்பிடங்களுக்குச் செல்கின்றன, பின்னர்க் கோயில் புரோகிதர், சுவாமியின் திருமுன்னர் நின்று, அன்றைக்கும் மறு நாளைக்கும் உரிய திதி, நட்சத்திரம், வாரம், யோகம், கரணம், ஆகியவை போன்ற செய்தி விவரங்களை உரத்த குரலில் கூறுகிறார்.

நாள்தோறும் காலையில் செய்யப்படும் பூசையே, மற்றப் பூசைகள் எல்லாவற்றிலும் முக்கியமானதாகும்- அப்போது நிகழ்த்தப்படுகின்ற பூசைகளின் நெறிமுறைகள், பண்டைக்காலம் முதல்சிறிதும்மாறாதனவாகவும், பாஞ்சராத்ர ஆகமவிதிமுறையின் படி நடைபெறுகின்றன. பின்னர்ப் பெருமாள் கோதுமை ரொட்டி, வெண்ணெய், பாசிப்பருப்பு ஆகியவை அமுது செய்யப் பெறுகிறார். அவரது மார்பிலும், திருவடிகளிலும், சந்தனக் குழம்பு அணிவிக்கப் பெறும். வெள்ளிக்கிழமைகளில் மூலவருக்கு குறிப்பிட்ட சில பருவங்களில், பச்சைக் கற்பூரம் கலக்கப்பெற்ற புனுகுக் காப்பு பயன்படுத்தப்படுகிறது. அபிடேகம் பொதுமக்கள் முன்னிலையில் மாதந்தோறும் பஞ்சபருவ காலங்களில் (இரண்டு ஏகாதசி, ஒர் அமாவாசை, பிறந்த தினமான ரேவதி நட்சத்திரம்) மட்டுமே செய்யப்படுகின்றன, பின்னர்ப் பெருமாள் தூய உடைகள் சாத்தவும், நெற்றியில் கத்தூரி நாமம் அணிவிக்கவும் பெறுகிறார், அதன் பின்னர்ப் புதிய பூமாலைகளும் சிறந்த அணிகலன்களும் சாத்தப் பெறுகிறார். அப்போது அரையர்கள் இசையுடன் பாடுகின்றனர்.

பூசைகள் நடக்கும் நேரங்கள்

காலை	6–15	....	விசுவரூபம்
காலை	8–45	....	முதல் காலம் (காலசந்தி)
மதியம்	12–45	....	இரண்டாம் காலம் (உச்சிக் காலம்)
மாலை	6–45	....	மூன்றாம் காலம் (சாயரட்சை) க்ஷீரான்னம்
இரவு	8–38	....	நான்காம் காலம் (அர்த்த சாமம்)

பெருமாளுக்குச் செய்விக்கப்படும் திருவமுது

பெருமாளுக்குக் காலையில் வெண்பொங்கல், தோசை, வெல்லம், சுக்கு, கறியமுது, வடை முதலியவையும், பகலில் வாழைக்காயும், சாத்தமுது, மிளகு ரசம், அமுதுபடி அடிசில் ஆகியவையும் மாலையில் வடை, அப்பம், தேன்குழல், பால் சோறு; பால் பொங்கல், அப்பம், ததியோதனமும், இரவில், அரிசிச் சாதத்துடன் கூடிய அமுதம் கறியமுதும், குங்குமப்பூ, நாட்டுச் சர்க்கரை, ஏலம், ஆகியவை கலந்த பாலும், தாயார் சந்நிதியில் காலையில் ரொட்டி, பால், தோசை, பகலில் பொங்கல் அடிசில், அதிரசம், பருப்பும், மாலையில் வடை, தேன்குழல், புட்டு, இரவில் பொங்கல் நைவேத்தியங்கள் ஆகும். மற்றக்கோயி லில் ஒரு வேளை பாலும், அடிசிலும், ஆஞ்சநேயருக்கு வடை மாலையும், வெண்ணெயும் படைக்கப்படுகின்றன.

பூசைக்கு உகந்த மலர் கிடைக்காததால் ஏற்படக்கூடிய குறை நீங்கச் சித்திரை மாதத்தில் மலர் சூட்டுகின்ற பூச்சாத்து விழாவும், தீர்த்தங்களின் தெய்வத் திருவுருவங்களை நீராட்டும் போது ஏற்படும் குறையை நீக்க ஆயிரம் குடம் ஆனித் திருமஞ் சனமும், தெய்வங்களுக்கு நைவேத்தியமாக அன்னம் படைப் பதில் ஏற்படும் குறை நீங்க ஆவணியில் பவித்ரோற்சவமும், நாள்தோறும் உற்சவம் நடத்குவதில் ஏற்படும் குறை நீங்க ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் உற்சவமும், தெய்வத் திருவுரு வங்களுக்கு ஆடைகள் அணிவிப்பதில் ஏற்படும் குறை நீங்க கார்த்திகை கைசிக ஏகாதசித்திருவிழாவும் நாள்தோறும் நித்திய அக்கினி குறை நீங்கக்கார்த்திகைத்திருவிழாவும், வேதம் திவ்வியப் பிரபந்தம் ஆகியவை ஓதுவதில் நிகழும் குறை நீங்க திருவத்யன மகோற்சவமும், ஏனைய குறைகள் நீங்க மாசி மாதத்தில் பந்தக் காட்சியுமாக இங்குத் தனித் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

2. திருவிழாக்கள்

திருவரங்கர் கோயிலில் ஆண்டின் பன்னிரு மாதங்களிலும் வெவ்வேறு திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

சித்திரை

இம்மாதத்தில் கோடைத் திருநாள் 10 நாள்கள் நடைபெறு கின்றது. இந்நாள்களில் 5 நாள்கள் உள்கோடைத் திருநாளும் 5 நாள்கள் வெளிக்கோடைத் திருநாளும் நடைபெறுகின்றன.

உள்கோடை விழாவின்போது பெருமாள் உள் கோடை மண்டபத்தில் வீற்றிருப்பார். வெளிக்கோடை விழாவின்போது வெளிக் கோடை மண்டபத்தில் வீற்றிருப்பார். இத்திருவிழாக்களில் அன்பர்கள் கொண்டுவரும் புதுமலர்கள் திருவரங்கப் பெருமானார்க்குச் சூட்டப்படும். அம்மலர்கள் விரிந்து நறுமணத்தோடு பெருமாள் திருமுடியில் திகழும்.

இக்கோடைத் திருநாளின்போதே இராமநவமி திருமஞ்சனம் அருச்சுன மண்டபத்தில் நிகழ்கிறது. சித்திரைப் பௌர்ணமிக்காலையில் திருமஞ்சனமும், மாலையில் கஜேந்திர மோட்சமும் கொண்டாடப் பெறுகின்றன.

இம்மாதத்தில் விருப்பன் திருநாள் விழா நடைபெறுகிறது. இதன் முதல்நாள் கொடியேற்றம் தொடங்குகிறது. மாலையில் பெருமாள் உபய நாச்சியார்களோடு புறப்படுகிறார். இரவில் யாகசாலையில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. இரண்டாம் நாளில் காலையில் பல்லக்கிலும், மாலையில் கற்பக விருட்ச வாகனத்திலும் உலா வருவார். மூன்றாம் நாள் காலையில் சிம்ம வாகனத்திலும், மாலையில் யாழி வாகனத்திலும் உலாக் கண்டருளுகிறார். நான்காம் நாள்காலையில் இரட்டைப் பிரபையிலும், மாலையில் கருட வாகனத்திலும் வருகிறார். ஐந்தாம் நாள் காலையில் சேஷ வாகனத்திலும், மாலையில் அனுமந்த வாகனத்திலும் காட்சியளிக்கிறார். ஆறாம் நாள் காலையில் தங்க அன்ன வாகனத்தில், மாலையில் யானை ஏறும் மண்டபத்திற்கு வந்து யானை வாகனத்தில் அமர்ந்து உலா வந்து உள் ஆண்டாள் சந்நிதியில் மாலை மாற்றிக் கொள்கிறார். ஏழாம் நாள் காலையில் கண்ணாடி அறையில் சேவை அளிக்கிறார். மாலையில் நெல் அளவைக் கண்டருளி, பின்னர் உபய நாச்சியார்களுடன் பூந்தேர் ஊர்கிறார். பின் எட்டாம் நாள் காலையில் வெள்ளிக்குதிரை வாகனத்தில் உலாவும், மாலையில் தங்கக்குதிரை வாகனத்தில் உலாவும் வருகிறார். ஒன்பதாம் நாள் காலையில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. இந்நாளின் இரவில்இரேவதித் திருமஞ்சனம்நடைபெறுகிறது. பத்தாம் நாளில் சந்தன மண்டபத்தில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. சக்கரத்தாழ்வார் சந்நிதியில் வழியாகச் சென்று உடையவர் சந்நிதியில் கைத்தல சேவையும், பின்னர் மாலையில் சப்தாவரணமும் நடைபெறுகின்றன. இது ஏழு பிராகாரங்களில் ஒவ்வொன்றையும் சுற்றி மூலத்தானத்திற்குப் பெருமாள் வந்து சேர்வதாகும்.

பதினோராம் நாளில் காலையில் கருட மண்டபத்தில் திருமஞ்சனமும், இரவில் பெருமாள் ஆளும் பல்லக்கில் திருவுலாவும் நடைபெறுகின்றன.

வைகாசி

கோடைகாலமான இம்மாதத்தில் பெருமாள் வசந்த மண்டபத்தில் ஒன்பது நாள்கள் எழுந்தருளுவார். வெட்பக் காலத்தில் அரங்கநாதரது திருமேனிக்குக் குளிர்ந்த காற்று வீசப்பெறும் வகையில் அவர் வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவார். இம் மண்டபத்தைச் சுற்றியுள்ள அகழி நீர் காற்றிற்குக் குளிர்ச்சியை வரவழைக்கிறது.

ஆனி

இம்மாதத்தில் 1400 படி அமுதுடன் பெரிய திருப்பாவாடை நிவேதத்துடன் பெரிய பெருமாள் ஜேஷ்டாபிடேகம் நடைபெறுகிறது.

ஆடி

இம்மாதம் பதினெட்டாம் நாள் காவிரி வெள்ளப் பெருக்கின் போது நம் பெருமாள் திருக்காவிரி அம்மா மண்டபத்தில் எழுந்தருளுகிறார். பின் காவிரித் தாய்க்கு மலர், புடவை, பொன், பொட்டு, திருத்தாலி ஆகியவை யானைமீது எடுத்துச் சென்று காவிரியில் விடப்படுகின்றன. ஆடிப்பூரத்தில் ஆண்டாள் திருநாள்கள் கொண்டாடப் பெறுகின்றன.

ஆவணி

இம்மாதத்தில் கிருஷ்ண ஜயந்தி விழாவும், உரியடி விழாவும் நடைபெறுகின்றன. காலையில் கண்ணன்எண்ணெய் விளையாட்டும், மாலையில் உரியடி விழாவும் நடைபெறுகின்றன. பின்னர்க் கிருஷ்ணனும், பெருமாளும் மூலத்தானம் வந்தெய்கிறார்கள்.

விநாயகர் (கணநாதர்) கொழுக்கட்டை விழா நடைபெறுகிறது. கணநாதருக்கும், பெருமாளுக்கும் கொழுக்கட்டைகள் நிவேதனம் செய்யப்படுகின்றது. இம்மாதத்தில் பவித்ரோற்சவம் தொடங்குகிறது. முதல் நாள் மாலையில் யாகசாலைத் திருமஞ்சனம் நடைபெறுகிறது.

புரட்டாசி

இம்மாதம் பவித்திரோற்சவச் சாத்துமுறை திருமஞ்சனம் நடைபெறுகிறது. அரங்கநாதருக்குப் பவித்திரோற்சவத்தில் அளிக்கப்பெற்ற பவித்திர மாலையைக் களைந்து சந்திரபுட்கரணியில் எழுந்தருளியுள்ள இராமருக்கு அம்மாலையைச் சாத்துவார்கள்.

இம்மாதம் நவராத்திரி தொடக்கத்தில் முதல்நாள் தாயார் திருமஞ்சனம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் மலைமகள் பூசையும், தாயார் திருமஞ்சனமும் நடைபெறுகிறது. மறுநாள் விசயதசமியன்று அரங்கநாதர் ஆழகிய சிங்கர் சந்நிதிக்குப் பக்கத்துத் தோப்பில் எழுந்தருளி அங்குள்ள வன்னி மரத்தில் அம்பெய்து, பின்னர் மாலை நேரத்தில் குதிரை வாகனத்தில் உபய நாச்சிமார்களுடன் திரும்புகிறார்.

ஐப்பசி

இம்மாதத்தில் ஊஞ்சல் திருநாள் ஒன்பது நாள்கள் நடைபெறுகிறது. நம்பெருமாள் ஊஞ்சலில் எழுந்தருளியிருக்கும்போது அரையர்கள் தாலாட்டுப் பாடல்கள் பாடுகிறார்கள். இத்திருவிழாவில் ஏழாம் நாளில் திருக்கொட்டாரத்தின் நெல் அளவை பெருமாள் உபய நாச்சியார்களுடன் கண்டருளுகிறார். ஒன்பதாம் நாள் ஊஞ்சல் திருவிழா சாத்துமுறையும் திருமஞ்சனமும் நடைபெறுகின்றன. இம்மாதம் தீபாவளிப் பண்டிகையின் போது, பெருமாளுக்குத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப் பெறுகிறது. அப்போது பெருமாளுக்கு எண்ணெய் இட்டுத் திருமஞ்சனம் செய்யப்படுகிறது. அந்நாளில் ஆழ்வார்களும், ஆசாரியர்களும் கிளி மண்டபத்தில் எழுந்தருளுகிறார்கள். பெருமாள் புறப்பட்டுச் சந்தன மண்டபத்தில் எழுந்தருளிய பின் திருமஞ்சனம் கண்டருளுகிறார். பின்பு பெருமாளுக்கு 'ஜாலி' அலங்காரம் செய்யப்படுகிறது. முழு நூறு ரூபாய்கள் ஆயிரம் கொண்டு வந்து அவற்றை இரண்டு பைகளில் கட்டிப் பெருமாள் திருவடிகளில் மேளதாள முழக்கத்துடன் அவை படைப்பிக்கப்படுகின்றன. அப்போது அங்கு எழுந்தருளும் ஆழ்வார்களுக்கும் ஆசாரிகளுக்கும் பெருமாள் அருள் பாலிக்கிறார்.

கார்த்திகை

சக்கரத்தாழ்வார் சந்நிதியில் பெருமாள் எழுந்தருளும்போது கார்த்திகைக் கோபுர வாயிலில் கட்டப்பட்டிருக்கும் சொக்கப்பா

னைக் காட்சியைப் பெருமாள் சக்கரத்தாழ்வார் கோயில் முன் மண்டபத்திலிருந்து கண்டருள்கிறார்.

கார்த்திகை மாதம் திருவிளக்கு விழா அரங்கவிலாச மண்டபத்திற்கு வடக்கில் வெளியில் ஆஞ்சநேயர் சந்நிதிக்கு எதிரில் நடைபெறுகிறது. வெட்டப்பட்டதும், 8 மீட்டர் உயரமுள்ளமான ஒரு தென்னை மரத்தை நட்டு, அதைச் சுற்றிலும் முழுப்பனை ஓலைகளை அடுக்கடுக்காக வைத்துக் கட்டி, உள்வழியே ஒருவர் மேலே செல்வதற்கு வழியமைப்பார். நம்பெருமாள் சக்கரத்தாழ்வார் சந்நிதியின் முன் மண்டபத்தில் எழுந்தருளும் போது, இந்த விளக்கை ஏற்றி வைக்க ஒருவர் பந்தம் ஒன்றைக் கையில் ஏந்தி அதனை அரங்கநாதர் திருவுருவத்தை மூன்று முறை வளம் வந்து, உள்வழியாக அந்த மரத்தில் ஏறி உயரச் சென்று, ஒவ்வொரு பக்கத்திலும் பனையோலை தீ பற்ற வைத்து உடனே கீழே இறங்கி வந்துவிடுவர், பிறகு தீச்சுடர் விட்டெரியும் காட்சியை அரங்கநாதர் காண்பார், பின்னர்ப் பெருமாள் சந்தன மண்டபத்திற்கு எழுந்தருளும்போது, திருமங்கையாழ்வார் அருளிய 'வாடினேன்' எனத் தொடங்கும் பாசுரத்தை அரையர்கள் ஓதுவார்கள். இதன்பின்னர் அரங்கநாதர் மார்கழி மாதம் வரப்போகும் திருநாளில் நம்மாழ்வாருக்கு திருமுகப்பட்டயம் எழுதி அருளுகிறார். இம்மாதத்தில் கைசிக ஏகாதசியில் புறப்பாடும் சந்தன மண்டபத்தில் திருமஞ்சனமும் நடைபெறுகின்றன. பெருமாள் அந்நாளில் அருச்சுன மண்டமத்தில் எழுந்தருளுகின்றார். கைசிகப் புராணத்தைப் பட்டர் பிரான். விளக்குகிறார். உதய காலத்திற்கு முன்னரே பெருமாளின் புறப்பாடு நடைபெறும். பிறகு பெருமாள் மேற்புறமுள்ள யாழிப்படிக்கு எழுந்தருளுவார். அப்போது படியேற்றம் நடைபெறுகிறது. ஓராண்டில் விஜயரங்க நாயக்கர் காலதாமதமாக வந்தார். அதன் காரணமாக அவர் அந்த ஆண்டு படியேற்றி விழாவைக் காணமுடியவில்லை. படியேற்ற விழாவின் போது பெருமாள் மீது பச்சைக் கற்பூரங்களைத் தூவுகிறார்கள்.

மார்கழி

திருவரங்கநாதர் திருக்கோயிலில் நடைபெறும் முக்கியமான விழாக்களில் ஒன்று மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி திருவிழாவாகும். இம்மாதத்தில் உதயகாலத்தில் பெருமானுக்குத் தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருப்பள்ளியெழுச்சி பாடப்பெறுகிறது. பின்னர்த் திருவாராதனம், தளிகை, அமுத ஆகியவை செய்விக்கப்படுகின்றன. அதன் பின்னர்த் திருப்பா

வைப்பாடல்கள் ஓதப்படுகின்றன. வேத விண்ணப்பங்கள் தெரிவிக்கப் படுகின்றன. முந்திய பகல் பத்தின் நாளில் திரு நெடு தாண்டகம் ஓதப்படுகிறது. முதலில் மார்கழி மாதம் அமாவாசை தொடங்கிப்பத்து நாள்கள் நடைபெறுவது பகல் பத்து. இது திருமொழித் திருநாளாகும், இந்தப் பகல் பத்தில் ஒன்பது நாள்களிலும் பெருமாள் அருச்சுன மண்டபத்தில் எழுந்தருளுகிறார். ஆழ்வார்கள் பெருமாளுக்கு எதிரே எழுந்தருளிகிறார்கள். அப்போது அரையர்கள் திருப்பல்லாண்டு தொடங்கி, திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழி முடியப் பாசுரங்களை அபிநயத்துடன் பாடுகிறார்கள். பின்னர் ஆழ்வார்கள் அங்கிருந்து சென்றுவிடுவார்கள். பத்தாம் திருநாளில் பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலம் சூட்டப்படுகிறது. அடுத்து வருவது இராப்பத்து. இவ்விழாவை நாத முனிகள் வகுத்தருளினார். ஆதிகாலத்தில் அரையர் சேவை இரவில் நடத்தப் பெற்றதால் இதற்கு 'இராப்பத்து' என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இப்பத்து நாள்களுக்கு நம்மாழ்வார் வழங்கிய திருவாய்மொழிப் திருநாள் என்னும் பெயர் விளங்கி வருகிறது. எடுத்துக் கூறும் திருவாயமொழிப் பிரபந்தத்தின் பத்துப் பாசுரங்களாகிய ',சூழ் விசும்பு'' எனத் தொடங்கும் திருவாய்மொழியின் கருத்துகள் இத்திருநாளில் நாடக வடிவில் அரையரால் அபிநயத்து காட்டப் பெறுகின்றன. எட்டாம் நாளில் பாரிவேட்டை நடைபெறுகின்றது. பெருமாள் குதிரை வாகனத்தில் உலாவுகிறார்.

கருவறையிலிருந்து பெருமாள் புறப்படுமுன் ஆரியபட்டாள் வாசல், நாழி கேட்டான் வாசல் முதலியவை மூடப்படும். இவ்வாறு கதவுகள் மூடப்படுவது, அன்பர்கள் ஐம்பொறிகளின் வழியாக மனம் செல்வத்தைத் தடுத்து மனத்தை ஆண்டவனிடம் செலுத்த வேண்டும் என்பதைக் குறிக்கிறது. வேதபாராயணம், திருவாய்மொழி ஓதுதல் ஆகியவற்றோடு இரத்தின அங்கி சாத்தப்பட்டவுடன் பெருமாள் புறப்படும்போது சந்நிதி வாசல் திறக்கப்படும். மேலப்படி வழியாகப் பெருமாள் கீழிறங்கி வரும்போது திருவரங்கக் கூட்டத்தார் எண்மர் பெருமாளுக்கு முன் வந்து அவர் மீது பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடிய பாசுரங்களைத் துரை மண்டபம் வரும்வரையில் பாடிக்கொண்டே செல்வார்கள். அவ்விடத்திலிருந்து சிறிய தூரம் சென்றவுடன் முக்தர்களைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்வோர்களாக நடிக்கும் சாத்தாத வைணவர்கள் இருமருங்கும் நின்று ''வைகுந்தத்திற்குச் செல்லும் வழி இதுவே'' எனக் காட்டுவார் போலச்செயற்படுகிறார்கள். பெருமாள் யாகசாலை அருகில் சென்று கிழக்கே திரும்பிச் சிறிது தூரம் செல்கின்றார். பின் பெருமாள் பரமபத

வாசலுக்கு எதிரில் வடக்குமுகமாக நின்றவுடன் வாசல் கதவுகள் திறக்கப்படுகின்றன. இவ்வாசலுக்குக் கிழக்குப் பக்கத்தில் வைகுந்தத்தில் உள்ள 'விரஜா' நதியின் வடிவில் ஒரு கிணறு இருக்கின்றது. விரஜா நதி வைகுந்தத்தில் இருக்கும் புனித நதியாகும். இந்த வாசலுக்குச் சென்றவுடன் பெருமாளுக்குப் பழைய அலங்காரத்தை மாற்றிப்புதிய மிக அழகியதும் புதியதுமான அலங்காரம் செய்வது விரஜா நதியில் நீராடும் முக்தர் தமது பழைய உடல் நீங்கப்பெற்றுப் பெருமாளுடைய சாரூப்பியம் பெறுகிறார் என்பதைக் குறிக்கிறது.

ஏகாதசித் தினத்தில் பெருமாள் இரத்தினங்கியோடு பரமபத வாசலில் நுழைந்து செல்வது முக்தர் ஒளிமய உடல்பெற்று 'விரஜை' நதிக்கப்பாலுள்ள முக்தர்களோர்டு இணைவதைக் குறிக்கிறது. பரமபதவாசல் திறந்தவுடன் மேளதாளங்கள் முழங்கும்,

பெருமாள் ஆயிரக்கால் மண்டபத்திற்கு வந்து படியேறிச் செல்லும்போது, தீபாராதனைகள் நிகழும். பிறகு பெருமாளுக்கு நாளுக்கொரு பத்தாகப் பத்து நாள்களும் திருவாய்மொழி பாடப் பெறும். நிவேதனம் முடிந்தபின், பெருமாள் பனிப்போர்வை அணிந்து வெட்டிவேர் சப்பரத்தில் எழுந்தருளி ஒய்யார நடையில் வீணையிசையோடு நாழிகேட்டான் வாசலிலிருந்து கருவறைக்குச் செல்வார்.

இராப்பத்தின் இறுதியில் காலை நம்மாழ்வார் வீடுபேறு நடைபெறும். அப்பொழுது நம்மாழ்வார் மீது துளசிதளம் தூவுவது வழக்கம்.

தை

தை மாதத்தில் பூபதி திருவிழா நடைபெறுகிறது. அண்டங்கள் எல்லாவற்றுக்கும் தலைவர் பூபதி அரங்கநாதர். இவரது தலைமையை நினைவுகூரும் வகையில் நடத்தப்படும் இத்திருவிழா பூபதி திருவிழாவாக நடைபெறுகிறது. இவ்விழாவின் முதல்நாள் திருமுளை நாளாகும். இது உயிர்களின் படைப்பைக் குறிக்கிறது. இவ்விழா எத்தகைய இடையூறுமின்றி நன்கு நடைபெற வேண்டும் என்பதற்காகக் படத்தில் திருமாலின் வாகனமாகிய கருடன் திருவுருவம் நிலை படுத்தப்படுகிறது. கருடர் தம் அமிர்தக் கலையால் உயிர்களை வாழ்விக்கிறார்.

திருவரங்கநாதரே பரம்பொருள் என்பதைக் காட்டும்வகையில் கருடர் படத்துடன் பெருமாள் புறப்பட்டு ஆஞ்சநேயருக்கருகே

கொடிக்கம்ப மண்டபத்தில் எழுந்தருள்கிறார். இக்கொடிக்கம்பத்தின் மேலே எட்டுவகை நாகாபரணங்களுடன் கூடிய கருடனின் கொடியேற்றம் நிகழ்த்தப்படுகிறது. பின்னர்ப் பெருமாள் மூலத்தானம் செல்லாமல் கண்ணாடி அறையில் எழுந்தருளுகிறார். பெருமாள் பிற்பகலில் சந்தன மண்டபத்தில் திருமகள், நிலமகள் ஆகியோருடன் திருச்சிவிகைஎனும் கேடயத்துடன்வீற்றிருக்கிறார். பின் பெருமாள் உபயநாச்சியாருடன் திருவீதி உலா வந்து தீபாராதனையை ஏற்றுக் கொள்கிறார். இதன்பின்னர் அவர் சந்தன மண்டபம் வந்து சேர்கிறார். உபயநாச்சியார்களுடன் மூலத்தானம் சேர்ந்த பின்னர் யாகசாலைக்கு எழுந்தருளி தனிப்பட்ட ஆராதனைகள் ஏற்றுக் கொண்டு திருமஞ்சனம் செய்விக்கப்பட்ட ஐந்து குண்டங்களுக்கு முறையே வாசுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ந, அநிருத்தன், நாராயணன் என்ற ஐந்து வடிவங்களில் பூசைகளும் வேள்விகளும் நிகழும். பிறகு பெருமாள் உலா வந்து சந்நிதி மண்டபத்திற்கு நேராக எழுந்தருளி, சக்கரம் தரித்த தமது வலக்கையில் ரக்ஷாபந்தம் செய்து கொள்கிறார். பின் பெருமாள் முதல் பிரா்காரத்தில் உலா வந்து கண்ணாடி அறையை அடைந்து அமைதியான நைவேத்தியத்தை ஏற்றுக்கொண்டு அன்றைய விழாவை நிறைவு செய்கிறார். சூரியன் புற இருளை நீக்குவது போல, பெருமாள் நம் அக இருளை நீக்குவதைப், பெருமாள் சூரியப் பிரபையில் திருஉலா வருவது காட்டுகிறது. பின்னர் அரங்கநாச்சியார் சந்நிதிக்கு முன்னுள்ள கொலுமண்டபத்தில் வீற்றிருந்து பின்னர் வாகன மண்டபத்திற்குப் புறப்படுகிறார். அங்கிருந்து அன்ன வாகனத்தில் திருவுலா கண்டருளுகிறார். அன்னம் பாலுடன் கலந்த நீரைப்பிரித்துப் பாலை மட்டும் பருகுவது போல அடியார்களின் அஞ்ஞானத்தையும், தீய ஒழுக்கத்தையும் நீக்கி ஆன்மஞானத்தை அடையவேண்டும் என்பதை அன்ன வாகனம் குறிக்கிறது. மூன்றாம் நாள் பெருமாள் சிம்ம வாகனத்தில்எழுந்தருளுகிறார். ஆணவமாகிய சிங்கத்தை அடக்கி ஆள வேண்டும் என்பதைச் சிம்ம வாகனம் குறிப்பிடுகிறது.

சிங்கத்தைவிட மேம்பட்டது யாழி வாகனம், யாழி முற்றும் சிங்கத்தின் வடிவத்துடன் யானையின் துதிக்கையைக் கொண்டது. இது இறைவன் அடியார்களுக்கு ஆண்மை, சாந்தி, வைராக்கியம் ஆகியவற்றை அருள்வதைக் குறிக்கின்றது.

நான்காம் திருநாள் :

இறைவனின் முழு வடிவத்தையும் சந்திரபிரபை வாகனம் காட்டுகிறது. முற்றிலும் அறிந்த ஆன்மா பரம்பொருளுக்கே அடிமை என்பதைக் கருடவாகனம் குறிக்கிறது.

ஐந்தாம் திருநாள் :

சேஷம் என்பது மிச்சம் என்னும் பொருளைத் தருகிறது. எல்லாம் அழிந்த பின்னரும் எஞ்சியிருப்பவர் சேஷன் என்னும் ஆதிசேஷன். ஆதிசேஷனைத் திருமால் வாகனமாகக் கொண்டு அருளுகிறார்.

குரங்கு ஒரு கிளையை விட்டு மற்றொரு கிளையைத் தாவிப் பிடிப்பது போல் மனம் மாறிக்கொண்டேவரும். இதனைக் 'குரங்கு மனம்' என்று சொல்லுவார்கள். ஆனால் குரங்கினத்தவராகிய அனுமார் இராமரிடம் மாறுபடாத பேரன்புகொண்டார். இதனை 'அனுமார் வாகனம்' காட்டுகிறது.

ஆறாம் திருநாள் :

தம் அடியார்களின் தேவைகளுக்கேற்ப அவர்கள் கேளாத நிலையிலே பெருமாள் அருள்கிறார் என்பதைக் கற்பக விருட்ச வாகனம் தெரிவிக்கிறது.

அகங்காரங்களை அடக்குபவர் இறைவன் என்பதை யானை வாகனம் காட்டுகிறது. அங்குசத்தால் அடக்கப்பட்ட யானை மனித இனத்துக்கு உதவுவது போன்று ஞானமாகிய அங்குசத்தினால் மனம் அடக்கப்படும்போது மனம் அகங்காரம் ஒழிந்து நன்மையே செய்கின்றது.

ஏழாம் திருநாள் :

ஏழாம் திருநாள் கண்ணாடி அறை சேவையாகும். இவ்வுலகத்திலுள்ள சராசரங்கள் அனைத்திலும் தெய்வச் சாயலைக் கண்டு இறைவர் புரியும் படைப்பின் பெருமையை உணர வல்லவராக நாம் இருக்கவேண்டும் என்பதைக் கண்ணாடி அறை சேவை குறிக்கிறது.

எட்டாம் திருநாள் :

இந்நாளில் காலை அரங்கநாதர் பல்லக்கில் உலாவந்து அரங் கவிலாசத்தில் எழுந்தருளுகிறார், மாலையில் குதிரை வாகனத்தில் புறப்படுகிறார்; உடலில் உயிர் கொள்ளும் சுவாசத்தைக் குதிரை குறிக்கிறது. மேலும் இது சுவாசத்தை வேறு வழியில் அலைய விடாமல் பற்றற்ற நிலையில் நிற்க வேண்டும் என்னும் சிறப்பையும் குறிக்கும்.

திருத்தேர் விழா :

உடலாகிய தேரில் ஏறி அதலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளக் குண்டலினியை நாபிக்கு மேல் ஏற்றி அங்கிருந்து மேலே நிலைப்படுத்தி உச்சியிலுள்ள பிரமாந்திரத்திற்கு ஏற்று வதால் வீடுபேறு பெறலாம் என்பதைத் திருத்தேர் குறிக்கின் றது. பெருமாள் நாச்சியார்களோடு தேருக்குள் எழுந்தருளும் போது நாச்சியார்கள் தேரில் பவனிவருவதில்லை, ஆனால் மூடுபல்லக்கில் பவனி வருகின்றார்.

சப்தாவரணம் :

காலையில் கலசம், மண்டலம், அக்கினி, பிம்பம் என்னும் முறையில் பெருமாளைப்பூசிப்பது சப்தாவரணமாகும். இந்நாளில் ஏழு பிராகாரங்களிலும் உலாச்செல்கிறார். மாலையில் சமயபுரம் மாரியம்மனுக்கு மாலை மலர்கள் முதலியவற்றை அன்பளிப்பா கப் பெருமாள் அனுப்புகிறார்.

மாசி

முதல் நாள் காலையில் திருப்பள்ளி ஓடம்; மாலையில் அன்ன வாகனம், இரண்டாம் மாலையில் அனுமந்த வாகனம், மூன்றாம் நாள் மாலையில் கற்பக விருட்சம், நான்காம் நாள் வெள்ளிக்கருட வாகனம்; ஐந்தாம் நாள் இரட்டைப் பிரபை வாகனம்; ஆறாம் நாள் யானை வாகனம்; ஆறாம் நாளில் உள் ஆண்டாள் மாலை மாற்றல் விழா நடைபெறும். இரண்டாம்நாள் முதல் ஆறாம் நாள் வரையில் காலையில் பல்லக்கிலும் பெருமாள் எழுந்தருள்கிறார்; ஏழாம் நாள் உபயநாச்சியார்களுடன் நெல் அளவை காண் கிறார். எட்டாம் நாள் திருப்பள்ளி ஓடமும்; ஒன்பதாம் நாள் தெப்ப மண்டப விழாவும், மாலையில் சூரிய பிரபைப் பந்தக் காட்சியும் நடைபெறும்.

தெப்பத்தில் பெருமாள் மையமண்டபத்தைச் சுற்றி மூன்று முறை வலம் வருவார். நான்காம் நாளில் கருட சேவை மிகச் சிறப்பான திருநாளாகும். ஒன்பதாம் நாளில் பந்தக்காட்சி நடைபெறுகிறது. அந்நாளில் பெருமாள் சந்திரப் பிரபையில் ஏராளமான தீவட்டிகளின் மையமாக வீதி வலம் வருவார்.

பங்குனி

ஆதிபிரம்மோற்சவம் விபீடணரால தொடங்கப் பெற்றது. விபீடணர் அரங்கவிமானத்தை அயோத்தியிலிருந்து இலங்கைக்கு

எடுத்துச் செல்லும்போது வழியில் சந்திரப் புட்கரணிக் கரையில் வைத்தார். மறுநாள் பிரமதேவர் வகுத்த உற்சவத்தை அங்கு நடத்த வேண்டியநாளானதால் அந்நாளில் இலங்கைக்குவிபீடணர் செல்லாமல் அங்கேயே அப்பிரம்ம உற்சவம் நடத்தினார். இதனை நினைவு கூரும்முறையில் இந்த உற்சவம் ஆண்டுதோறும் நடத்தப் பெறுகிறது.

முதலாம் திருநாள் :

கொடியேற்றத்திற்குபின் பெருமாள் உபயநாச்சியாரோடு திரு வீதி வலம் வருகிறார். யாக சாலையில் பெருமாளுக்குத் திரு மஞ்சனம் நடைபெறுகிறது.

இரண்டாம் திருநாள் :

கருட மண்டபத்திலேயே பூசை நடைபெறுகிறது.

மூன்றாம் திருநாள் :

சீய புரத்துக்காக இரவில் பெருமாள் பல்லக்கில் புறப்பட்டு வடக்கு வாசல் வழியாக மேலூர் சென்று, பலாச தீர்த்தத்தில் தீர்த்தமாடிக் கொள்ளிடத்திலிறங்கி, காவேரியைத் தாண்டி இர வெல்லாம் வழிநடந்து, உதயம் சீயர்புரம் அம்மையார் தண் ணீர்ப்பந்தலில் ததியோதனமும் மாங்காய் ஊறுகாயும் அமுது செய்து, மண்டபத்தில் ஆராதனை நைவேத்தியம் கண்டருளி மாலையில் புறப்பட்டுக் காவேரியைக் கடந்து மேலூர் வழியாக வந்து வடக்கு வாசல் வந்து சேர்ந்து வீதி எழுந்தருளி உள்ளே செல்வார்.

நான்காம் திருநாள் :

பெருமாள் காலையில் பல்லக்கில் புறப்பட்டுக் கொள்ளிடத் தைக் கடந்து, நொச்சியத்துக்கு மேற்கில் திருவரங்க ராஜபுரத் திலுள்ள இரெட்டியார் மண்டபத்தில் தங்குவார். மாலையில் இம் மண்டபத்திலிருந்து கருட வாகனத்தில் புறப்பட்டு வீதியெழுந் தருளி உள்ளே செல்வார்.

ஐந்தாம் திருநாள் :

காலை சேஷவாகனத்தில் வீதியெழுந்தருளி, உச்சி வேளை சேஷராயர் மண்டபத்திலிருந்து மாலை கற்பக விருட்சத்தில் வீதி உலா வந்து கருவறை அடைகிறார்.

ஆறாம் திருநாள் :

விடியற்காலத்தில் புறப்பட்டு உறையூருக்கு 10 மணி அளவில் பெருமாள் எழுந்தருள்வார் பின்னர்ப் பெருமாள் பல்லக்கில் உறையூர் மண்டபத்தில் எழுந்தருளுவார். உறையூர்க் கமலவல்லி நாச்சியார் சந்நிதிக்கு எதிரில் பல்லக்கில் எழுந்தருளிய பெருமாள் பல்லக்கிலேயே நாச்சியாருக்குநேராக எழுந்தருளிப் புதிய ஆடை, சந்தனம், திலகம், மாலை முதலியவற்லைச் சாத்திக் கொண்டு களைந்த இம்மாலையை நாச்சியாருக்கு அனுப்புவார். நச்சியார் மாலையணிந்த கொண்ட பிறகு, ஏகாந்த நிவேதனம் நடைபெறும். முதலில் பெருமாளும், பிறகு நாச்சியாரும் வெளிமண்டபத்தில் எழுந்தருளுகிறார்கள். பிறகு திருவாராதனம் முதலியன நடைபெறும்- இரவு 10 மணி வரையில் பெருமாள் எல்லாருக்கும் அருள்புரிந்து, நாச்சியார் உள்ளே புறப்படத், திருவரங்கம் வந்து வெளி ஆண்டாளோடு மாலை மாற்றிக் கொண்டு உள்ளே எழுந்தருளுவார்.

ஏழாம் திருநாள் :

காலையில் நெல் அளவை உபயநாச்சியார்களுடன் பெருமாள் காண்கிறார். பின் வீதியெழுந்தருளி நாச்சியார் கோயில் சென்று திருமஞ்சனம் செய்து கொண்டு உள்ளே செல்வார்.

எட்டாம் திருநாள் :

பெருமாள் கோயிலின் திருவீதி எழுந்தருளாமலே தெற்கு வாசல் வழியாகக் கிழக்கே சென்று, அசுவதத் தீர்த்தத்தில் தீர்த்தமாடி வழியில் அவ்விடங்களில் அருள்புரிகிறார். பின்னர் வில்வ தீர்த்தத்தில் தீர்த்தமாடி எல்லைக் கரை மண்டபத்தை அடைகிறார். எல்லைக்கரையைப் பார்வையிடுகிறார். திருவானைக்காவிற்கும்., திருவரங்கத்திற்கும் வகுக்கப்பட்ட எல்லைப் பிரிவின் காரணமாக இந்த எல்லையை அரங்கநாதர் பார்வையிடுகிறார் என்பது மரபு. இரவில் குதிரை வாகனத்தில் புறப்பட்டுக் கொள்ளிடத்தைக் கடந்து வடக்கு வாசல் வழியாக ஊருக்குள் நுழைந்து கருவறையை அடைகிறார்.

ஒன்பதாம் திருநாள் :

பெருமாள் காலையில் பல்லக்கில் புறப்பட்டுச் சித்திரை வீதியின் உள் திருவீதிகளில் வலம் வந்து நாச்சியார் சந்நிதிக்குள்

செல்லும் போது கதவுகள் சாத்தப்படுகின்றன. சிலர் மலர்களையும், பழங்களையும் எறிந்து பெருமாளைத் தடுத்து நிறுத்துவதும் கதவு சாத்தப்படும் போது பெருமாள் பின்புறம் ஒதுங்குவதும் நிகழும் நாச்சியார்களுக்கு விளக்கம் கூற நம்மாழ்வார் வருவார். பெருமாள் தாம் சொல்ல வேண்டியவற்றை அரையரிடம் சொல்ல அரையரும் நம்மாழ்வாரும் நடுவராக நின்று இந்தத் தகராற்றைத் தீர்த்து வைக்கிறார்கள்

நம்மாழ்வார் மேற்கொண்ட முயற்சியில் நாச்சியார் சீற்றம் தணிகிறது. பெருமாள் நாச்சியார் சந்நிதிக்குள் செல்கிறார். அப்போது முதல் ஏகாந்தம் நிகழ்கிறது.

இரண்டாம் ஏகாந்தம்

செல்வர் பெரிய கோயிலிலிருந்து புறப்பட்டு வடகாவிரியில் தீர்த்தவாரி கண்டருளி வந்ததும் கத்தியத்ரயம் சேவிக்கப்படும். பின்னர் இரண்டாம் ஏகாந்தத்தளிகை நிவேதனம் ஆகிறது. பின்னர்ச் செல்வர் பெரிய கோயிலில் எழுந்தருளுவார்.

மூன்றாம் ஏகாந்தம்

பெருமாள்நாச்சியார் ஆகியஇருவருக்கும் பதினெட்டுத்தடவை திருமஞ்சனம் நடைபெறும். மூன்றாம் ஏகாந்தத் தளிகை நிவேதனம் செய்யப்பட்டதும் நாச்சியார் உள்ளே எழுந்தருள்வார்.

பத்தாம் திருநாள்

தேர்த்திருவிழா; இதில் விபீடணர் கொணர்ந்த அரங்கநாதர் விமானம் போல் தேர் அமைக்கப்படுகிறது. இத்தேருக்குத் ,கோரதம்' என்னும் பெயர் வழங்கி வருகிறது.

சித்திரைத் தேரும், தைத் தேரும் பாதி மரத்தாலும் பாதி மூங்கிலாலும் அமைக்கப்பட்டவை. பங்குனித் தேரோ முழுதும் மரத்தால் அமைக்கப்பட்டதாகும். பெருமாள் கோ ரதத்தில் திருவீதி எழுந்தருளி உள்ளே கண்ணாடி அறையில் திருமஞ்சனம் செய்துகொள்வார். பெருமாள் திருமஞ்சனம் செய்து கொண்டு மேளமில்லாமல் திரு உலாப்பாட்டு உகந்து இராமானுஜர் நூற்றந்தாதிக்குச் செவிசாய்த்துக் கொண்டே திருவீதியில் எழுந்தருளி, உடையவர் சந்நிதி வாசலில் உடையவருக்கு அருள்புரிந்து கொடிக்கம்பத்தின் அடியில் நின்று அங்கு ஓதப்பெறும் பாடல்களுக்கு மகிழ்ச்சி தெரிவிப்பார் போன்று காட்சி அளித்துச் சந்நிதிக்குள் எழுந்தருள்வார். பிறகு கொடியிறக்கம் நடைபெறும்.

பெருமாள் உலா வரும்போது பல திறப்பட்ட நிலையில் புறப்பாடுகள் நிகழ்கின்றன. ''மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து, வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி மூரி நிமிர்ந்து முழங்கிப்புறப்பட்டுப் போதரு மாபோலே'' எனத்தொடங்கும் ஆண்டாள் திருப்பாவைப் பாடலில் குறிப்பிட்டவாறு, அடியார்கள் வேண்டுகோள்களை ஆராய்ந்து பார்த்து அருள்புரியும் நோக்கில் முதலில் கருவறையிலிருந்து சீரிய சிங்கம் நிமிர்ந்து இடம்பெயர்வது போல் 'சிம்ம கதியில்' உயர்நடையில் அரங்கநாதர் புறப்படுகிறார். பின்னர் அன்பர்களுக்கு விரைவில்அருள்புரியப்பாய்ந்து காளைப்பாய்ச்சலில் பாய்ந்து, இடபக் கதியில் செல்கிறார். அன்பர்கள் தம்முன் வரத் தயங்குகிறார்களோ எனக் கருதிப் பின்னர்ப் புலிப்பாய்ச்சல் முறையில் பதுங்கிப்பதுங்கிப் ''வியாக்கிர கதியில்'' செல்கிறார். வியாக்கிரம் என்னும் சொல் புலியைக் குறிக்கிறது. அடுத்து யானை வேகத்தில கஜகதியில் விரைகிறார். பின்னர் ஒதுங்கி நிற்கும் அன்பர்களுக்கு அருள்புரியக் குதிரை செல்லும் முறையில் சற்று இங்குமங்குமாகப் பார்த்துச் செல்லும் முறையில் அசுவகதியில் செல்கிறா. அசுவம் குதிரையைக் குறிக்கிறது. இறுதியில் மூலத்தானத்தை வந்தடையும்போது, பாம்பு தன் படத்தைச் சுருட்டிக் கொண்டு ஊர்ந்து வருவதுபோல் 'சர்ப்ப கதியில்' வந்து சேருவார். இக்காட்சிகள் மக்களின் மகிழ்ச்சி வேகத்தை வளர்க்கின்றன.

14. கோயிலினால் சமயம், சமுதாயம், கலை, பண்பாடு, முதலிய துறைகளில் ஏற்பட்ட நன்மைகள்

1 சமயம்

இறைவனைத் திருக்கோயிலில் வழிபடுதலின் சிறப்பை இக்கோயில் தெளிவான வைணவமுறையில் எடுத்துக் காட்டுகிறது.

பட்டர்பிரான் திருவாக்கின்படி 1. பரப்பிரமம்(மிக்க இறை நிலை) 2. ஆத்மா (மெய்யான உயிர்நிலை) 3. உபாயம் (தத்கநெறி) 4. தடையாகத் தொக்கி நிற்கும் விரோதி (ஊழ் வினை) 5. முக்தி (வாழ்வு) ஆகிய இவ்வைந்தும் அர்த்தபஞ்சகம் ஆகும். பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகியவை பரப்பிரம்மத்தில்அடங்குகின்றன. இவற்றுள் பரமபதத்தில்நித்திய முக்தர்களுக்கு அருள்புரிவதற்காக இறைவன் வீற்றிருக்கும் நிலையே பரத்துவ நிலையாகும். வியூகமாவது சிருட்டி, திதி, சம்மாரம் ஆகியவற்றுக்காகவும் அன்பர்களைப் பாதுகாத்தல்,

அவர்களுக்கு அருள்புரிதல் ஆகியவற்றிகாகவும் சங்கர்ஷண ப்ரத்யும்ந, அநிருத்த ஆகியோர் நிலையில் அருள்புரிவதைக் காட்டுகிறது. 'ஸங்கர்ஷண' கிருஷ்ணன் உடன்பிறந்தாராகிய பலராமர்; பிரத்யும்ந கிருஷ்ணனின் புதல்வர்; அநிருத்நன் அவர் பேரர் ஆகியோர் வழிபாட்டுத் தெய்வங்கள் ஆயினர். மூன்றாவதாகிய 'விபவம்' இராமர் கிருஷ்ணர் ஆகியோர் போன்ற அவதாரங்களில் இறைவன் நிற்கும் நிலையாகும். நான்காவதாகவுள்ள 'அந்தர்யாமி' என்பது அண்டசராசரங்களிலும், எல்லா உயிர்களிலும் எள்ளுக்குள் எண்ணெய் போன்று உயிருக்குயிராய் இறைவன் நிற்கும் நிலையாகும். ஐந்தாவதாகவுள்ள 'அர்ச்சையாவது' இந்நிலவுலகினில் திருவரங்கம் முதல் வைகுந்தம் வரையிலுமுள்ள திருப்பதிகள் நூற்றெட்டிலும் பிறதலங்களிலுமுள்ள திருக்கோயில்களின் திருவுருவங்களிலும் இறைவன் என்றும் அமர்ந்து அருள் பாலிக்கும் நிலையாகும். இந்த அர்ச்சா வதார நிலை நம்முடைய கண்களுக்குத் தோன்றுவதற்குரிய எளிமையைக் கொண்டு, நம்முடைய வேண்டுகோளை நிறைவேற்றவல்லது. இம்முறை வைணவர் கோயில்களும் சிறப்பான முறையில் கோயில் பெரிய கோயில் என்னும் பொதுப்பெயர் முறையில் திருவரங்கம்கோயிலும் விளங்குகின்றன.

இவ்வாறு பர, வியூக, விபவ, அந்தர்யாமியாகிய நான்கு நிலைகளிலும் அன்பர்கள் வணங்கிக் கொண்டாடப்பெற்று வருகின்ற நம்பெருமான் 'அர்ச்சாவதாரம்' என்ற திருமேனி கொண்டு அடியார்களின் வேண்டுகோளை ஆராய்ந்தருளவே வாகனங்களில் அமர்ந்து திருவீதிகளில் உலாவருகிறார். இது திருவிழாவாகும்.

இத்தகைய உற்சவங்கள் இங்குச் சிறப்புற நடைபெறுகின்றன. வைணவ சமயத்தை உணர்ந்து கொள்வதற்கு இத் திருவிழாக்கள் உதவுகின்றன.

பரிபாடல், ஆழ்வார்கள் பிரபந்தங்கள் முதலியவற்றிலிருந்து தெரியவருகிறவாறு, முன்னமே நிலவியிருந்து வந்த விஷ்ணுவின் தனிப்பட்ட தன்மையே 'ஸ்ரீவைஷ்ணவம்' ஆகும். இதில் ஸ்ரீ அல்லது இலக்குமி முதன்மையான பங்கேற்கிறார். என்பதை இது குறிக்கிறது. இலக்குமி புருஷாகரமாக அடியவருக்கும் இறைவனுக்கும் இடையே ஓர் இணைப்புச் சக்தியாக உள்ளார். பாவம் புரிந்தவருக்கும் அருள்புரியுமாறு இத் தேவி நம்பெருமானிடம் பரிந்துரை செய்கிறார். இத்தேவியும் நாராயணனும் எல்லாப் பொறுப்புகளையும் வகிக்கின்றார்கள் என்பதை ஸ்ரீ வைஷ்

ணவம் தெரிவிக்கிறது. தேவி அடியவருக்கும் இறைவனுக்கும் இணைப்புச் சக்தியாக இருப்பது மட்டுமின்றி ஓர் ஆசிரியராகவும் விளங்குகிறார். பஞ்சரத்திர புனித உபதேசங்களைத் தேவிக்கு இறைவர் உபதேசம் செய்தார் என்பதும் தேவி தமது முறையில் விசுவசேனருக்கு அவற்றை உபதேசம் செய்ய, விசுவசேனரும் அவற்றை நம்மாழ்வாருக்கு உபதேசம் செய்தார் என்பதும் வைணவ சமய மரபாகும். இந்த உண்மையை அரங்கவிலாச மண்டபத்தில் முகப்புப் பகுதியில் விசுவசேனர் செய்யும் உபதேசத்தை நம்மாழ்வார் பெற்றுக் கொள்வதாகப் பொறிக்கப்பட்டுள்ள சுதைச் சிற்பம் விளக்குகிறது.

திருவரங்கத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்த வைஷ்ணவ ஆன்மீகத் துறைக்கும், திருவரங்கக் கோயிலுக்கும் தலைவராக இருந்து வந்த இராமானுஜர் விசிஷ்டாத்வைத வகுத்தார். 'விசிஷடாத்வைதம்' என்னும் சொற்றொடர் 'சிறந்த வைஷ்ணவம்' என்னும் பொருள் தருகிறது. இச்சிறப்புக்கு வழிவகுத்தவர் இராமனுஜர். ''நாராயணர் ஒப்பற்ற தலைவர் என்பதும் அவருக்கு ஞானம், பலம், ஐசுவரியம், வீரியம், சக்தி, ஒளி ஆகியவை போன்ற மங்கலகரமான தன்மைகள் உள்ளன என்பதும், நாராயணரிடம் சரணாகதி அடைபவருக்கு அவர் எல்லாப் பேறுகளையும் அளிக்கிறார் என்பதும், வேதாந்த கொள்கையின்படி கடவுள் நிர்க்குணர் (உருவம்அற்றவர்)என்பது போன்ற அத்வைத கொள்கைகளை மறுக்கும் வகையில், இந்நிலவுலகினருக்கு அருள் புரிய அவருக்கு குணவடிவு தேவை என்பதையும் வலியுறுத்தினார்.

வைஷ்ணவ ஆகமங்கள் இரண்டு வகையின: 1. வைகானசம், 2. பஞ்சராத்ரம் இறைவன் திருவுருவ வழிபாட்டையும், அவருடைய அவதாரங்களையும் திருவுருவங்களின் இறைவன் இருக்கிறார் என்ற நம்பிக்கையையும் துணிவுடன் பஞ்சராத்திரம் வலியுறுத்திக் கூறுகிறது. பஞ்சராத்திர ஆகமங்களும் மிகபண்டைக் காலத்தியவை என்பதும் கோயில் வழிபாட்டுக்குப் பஞ்சராத்திர ஆகமங்கள்அடிப்படை என்பதும்இம்முறையின் கோட்பாடுகளாகும் பஞ்சராத்திர ஆகமங்கள் கோயில் சடங்குகளையும், அவற்றை அடியவர்கள் புரிவதால் கிடைக்கக்கூடிய பல்வேறு நன்மைகளையும் எடுத்துரைக்கின்றன. இராமானுஜர் திருவரங்கத்தில் பஞ்சராத்திர வழிபாட்டு முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்; அரும்பாடுபட்டு நாதமுனிகள்தொகுத்தளித்தநாலாயிரத்திவ்வியப் பிரபந்தங்கள் இராமானுஜர் திருவரங்கம் கோயிலில் சிறந்த முறையில் ஓதப்படுமாறு நேர்முகமாகக் கவனித்து வந்தார். கிளர்ச்சி மிக்க சமய வாதங்களில் பங்கு கொண்டு இறையருளியல்

நூல்களைக் கற்பித்தார். இந்த அடிப்படையில், இந்திய நாடு முழுவதும் பயணம் செய்த இராமானுஜர் வைஷ்ணவ சமயத்தைப் பரப்பினார்.

இறையன்பில் தாமும் ஆழ்ந்து அதில் பிறரும் ஆழுமாறு செய்தவர்கள் ஆழ்வார்கள். அவர்களுள் ஆண்டாளும் ஒருவர். இவ்வாண்டாள் வெளி ஆண்டாள் கோயில், உள் ஆண்டாள் கோயில், நாதமுனிகள் கோயில், பரம பதநாதர் கோயில் ஆகிய நான்கு சந்நிதிகளிலும் பூசிக்கப்பெறுகிறார். வெளி ஆண்டாள், உள் ஆண்டாள் கோயிகளில் அரங்கப் பெருமாள் ஆண்டாளுடன் மாலைமாற்றிக் கொள்கிறார். நாதமுனிகள் சந்நிதியில் ஆண்டாளுக்குப் பத்து நாள்கள் திருவிழா நடைபெறுகிறது. பரமபதநாதர் கோயிலில் ஆண்டாள் அன்பர்களால் பூசிக்கப்பெறுகிறார்.

பெரியாழ்வாருக்கு ஆண்டாள் புதல்வி என்றாலும், ஆழ்வார் பதின்மருக்கும் இவர் ஒரே மகளார் என்பதை,

> ''ஐந்து குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
> தஞ்சையலை விஞ்சி நிற்கும் தன்மையள்''

என்னும் ஆன்றோர் திருவாக்கு [49] ஆழ்வார்களுடைய ஞானச் செல்வங்கள் அனைத்துமே ஆண்டாளிடம் வந்து குடி கொண்டன என்பதைத் தெரிவிக்கிறது. ஆண்டாள் தம் முயற்சியால் இறைவனுக்குத் தொண்டு செய்ய நினைத்தார். அவர் 'மணம் சூழ்ந்த பொழில்கள் நிறைந்த திருமால் இருஞ்சோலையில் எழுந்தருளியுள்ள நம்பெருமானுக்கு அடியேன் நூறு தடாக்களில் அக்கார வடிசிலை நிறைத்து வழிபாடு ஆற்றுவதாகத் தெரிவித்தேன். மேன்மேலும் செல்வப் பெருக்குடைய பெருமாள் இவற்றை இப்பொழுது அமுது செய்வாரோ [50] என ஐயம்கொண்டு வினவினார். இவ்வாறு பூசை புரிவதாக ஆண்டாள் சென்னாரேயன்றி அவர் இதை நிறைவேற்றவில்லை. ஆனால், ஆண்டாளுக்குப் பின்னர்த் தோன்றியவரும் ஆண்டாளிடம் பெருமதிப்பு கொண்டவருமாகிய இராமானுஜர் ஆண்டாள்திருமொழிபற்றி நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவுகளுக்குச் செவிசாய்த்து இன்புறும் காலத்தில், இப்பாசுரத்தை நன்கு தமது மனத்தில் கொண்டார். இந்த அரிய செயலைத்தாம் புரியவேண்டும் எனக்கருதித் திருமால் இருஞ்

49. மணவாள மாமுனிகள், உபதேச ரத்தினமாலை 24.
50. நாச்சியார் திருமொழி, 9 - 6

சோலைக்குச் சென்று நூறு தடா வெண்ணையும், நூறு தடா அக்கார வடிசிலையும் அவ்வழகருக்கு அமுது செய்வித்தருளி மகிழ்ந்தார். பின்னர் அவர் திருவல்லிப்புத்தூருக்குச் சென்று ஆண்டாளை வணங்கி நின்றபோது, ஆண்டாள் தாம் சொல்லளவில் நிறுத்திவிட்ட சீரிய தொண்டை இராமானுஜர் நிறைவேற்றியதை நினைத்து உள்ளம் பூரித்தார். "நம்முடன் தோன்றிய தமையனேயன்றி வேறெவரும் இத்தகைய பேரன்புப் பணிபுரியார்" என்ற நோக்கில் தம் திருவுருவத்தின் அர்ச்சை வடிவிலிருந்து முன்வந்து, "நம் கோயில் அண்ணலே" என வரவேற்றதாக ஒரு வரலாறு உள்ளது. இதனாலோ இராமானுஜர் தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய ஆண்டாளைப் "பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியவே" என வாழ்த்தியுள்ளார்.

ஆண்டாள் எவ்வாறு பல சந்நிதிகளில் போற்றப்படுகிறாரோ அதுபோல் இராமானுஜர், உடையவர்சந்நிதி, நம்மாழ்வார் சந்நிதி உள் ஆண்டாள் சந்நிதி, பரமபதநாதர்சந்நிதி ஆகிய சந்நிதிகளில் போற்றப் பெறுகிறார்.

இக்கோயிலில் இவ்விருவருடைய சந்நிதிகள் திருவரங்கத்தின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றன.

இராமானுஜருக்குப் பின்னர் 12, 13, 14 நூற்றாண்டுகளில் பிரபந்தப் பிரிவு (தென்கலையார்), ஸ்ரீபாஷ்யப்பிரிவு (வடகலையார்) என இரு பிரிவுகள் தோன்றின.

இறைவனிடம் சரணாகதி அடைவதை இரு பிரிவினரும் ஒப்புக் கொண்ட போதிலும், முக்திநிலையை அடைவதற்குத்தன் முயற்சி தேவையெனவும், தாயை இறுகக் கட்டிக்கொள்ளும் அதன் குட்டிக் குரங்கைப் போன்று பற்றிக்கொள்ள வேண்டுமென வடகலையார் கூறுகிறார். ஆனால், தென்கலையாரோ கடவுளின் அருள் தானே வெளிப்படுகிறது எனவும், பூனை எவ்வாறு தன் குட்டியைத் தன் வாயால் கவ்விக் கொண்டு அதனைப் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்கிறதோ அவ்வாறே சரண் புகுந்த அடியார்களை இறைவன்காப்பாற்றுகிறார் எனத்தெளிவாகக் கூறுகின்றனர்.

மற்றொரு முக்கியமான கருத்து வேறுபாடு இலக்குமியைப் பற்றியதாகும். இலக்குமி இறைவனிடமிருந்து பிரிக்கப்படாத நிலையில் இறைவனைப் போன்றே அருள்பாலிக்கும் ஆற்றலுடையவர் என வடகலையார் கூறுகின்றனர். தென்கலையாரோ, இலக்குமி இறைவனுக்குப் பணிபுரிபவர்களில் முதல்வராவார்

என்றும், அடியவருக்கும் இறைவனுக்கும் இடைநிலையில் நின்று அடியவர்க்கு இறைவன் அருள்புரியுமாறு இறைவனிடம் பரிந்துரை செய்கிறார் என்றும் கருத்துரைக்கிறார்கள். அடியவர்கள் எல்லாரும் மதிப்புப் பெறத்தக்கவர்கள் எனினும், அவர்கள் தங்கள் பிறப்பின் அடிப்படையில் வழிபாடு ஆற்ற வேண்டுமென வடகலையார் கூறுகின்றனர். தென்கலையாரோ அடியவர்கள் எல்லாரும் பிறப்பின் அடிப்படையில் அல்லாமல் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் உண்மை அடியவராக இருப்பின், அவர்கள் நன்கு மதிக்கப்படுவதற்கு உரியவர் எனவும், அவர்கள் ஆசாரியர் ஆவதற்கும் தகுதி பெற்றுள்ளார் எனவும் கூறுகின்றனர். இந்தப் பிரிவின் தலைவர்கள் தமிழ்நாட்டு ஆழ்வார்களுக்குச் சிறப்பிடம் தந்தார்கள்.

வேதாந்த தேசிகர் வடமொழி வல்லுநராயிருந்தார்.

திருவரங்கம் கோயிலில் தென்கலை கொள்கையின்படி பூசைகள் நடைபெறுகின்றன. அரங்கநாதர் கோயில் முதல் பிராகாரத்தின் கணபதி திருவுருவம் இருப்பது வியப்பன்று. காஞ்சிபுரத்திலுள்ள வரதராசர் கோயிலில் தாயார் சந்நிதிக்கு அருகில் விநாயகர் திருவுருவம் ஒரு சந்நிதியில் உள்ளது. திருமழிசையில் திருமழிசை ஆழ்வார் கோயிலின் உட்பிராகாரத்தின் தென்புறச்சுவரின் வெளிப்புறத்தில் விநாயகர் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

சமுதாயம்

திருவரங்கத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்த இராமானுஜர் சாதி, இன வேற்றுமையின்றி எல்லா இனத்தவரும் வழிபாட்டில் ஈடுபட இயலுமாறு ஒரு நெறிமுறையை வகுத்தார். தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்பட்டவர்கள் கோயிலுக்குள்வருவதற்கு வழிவகுத்தார். திருக்கச்சிநம்பி வைசிய குலத்தினர்; அவரைத் தம் குருவாக இராமானுஜர் ஏற்றுக்கொண்டார். பிள்ளை உறங்காவல்லிதாசர் அந்தணர் அல்லாத குலத்தை சார்ந்தவர். இவரைத் தம் மாணவராக இராமானுஜர் ஏற்றுக் கொண்டார். உறங்கா வல்லி தாசரை இராமானுஜர் திருத்தியது போற்றத்தக்கது. உறங்கா வல்லிதாசர் தம் இல்லாளின் கண்ணழகில் ஈடுபட்டு அவளிடமிருந்து அன்பை பெறுவது தவிர வேறொன்றுமில்லை என மயங்கிக் கிடந்தார். அவர் அந்நிலையிலிருந்து கரையேற்றிப் பேரின்பத்தில் அவரை மூழ்குமாறு செய்யவேண்டும் என்னும் அருளுள்ளம் கொண்ட இராமானுஜர் அவரைத் திருவரங்கநாதர் சந்நிதியில்

கொண்டு வந்து நிறுத்தி, "எம்பெருமானே! உறங்காவல்லி தாசரைத் திருத்திப் பணிகொள்ளவேண்டும்" என இறைஞ்சினார். அங்ஙனமே பெரிய பெருமாளும் தமது அழகிய கண்வலையினால் தம்பால் அவரை ஈர்த்து அவருக்கு அருள் புரிந்தார். அப்போதே அத்தாசர் உலகப் போக்கில் முற்றும் நசையற்றுத் நம் துணைவி பொன்னாச்சியாருடன் இணைந்து இறைவனுக்கும் அடியார்களுக்கும் கடமையுரிதலையே தம் உயிரெனக் கொண்டு வாழ்ந்தனர். இத்தகைய அரிய சேவையை இராமானுஜர் திருவரங்கம்கோயிலில் புரிந்து இக்கோயிலின் பெருமையை நாடறியுமாறு செய்தனர். அந்தணர் அல்லாதவர்கள் வைணவச்சின்னத்தை அணிவதற்கும், வைணவர் போல உடைகள் அணிவதற்கும் திவ்வியப் பிரபந்தங்களைக் கற்பதற்கும் வழி வகுத்தார்; மகளிர்கள் பிரபந்தங்களை ஓதுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். விதவைகளுக்கு மொட்டையடிக்கும் தீய வழக்கம் தடை செய்யப்பட்டது. தாழ்த்தப்பட்டோர்க்கும், மகளிர்க்கும் இக்கோயில் பாதுகாப்பு அளித்தது பாராட்டத்தக்கது.

திருவரங்கக் கோயிலின் அகன்ற வெளிப்பரப்பில் தென்னைத் தோப்புகளும், வயல்வெளிகளும் இயற்கை எழில்நலத்தை எடுத்துக் காட்டுகின்றன. வெளியில் பிராகாரங்களில் கடைகள், வீடுகள், முதலியவை அமைந்திருப்பது இந்நகரத்தின் விரிவாக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. கோயில் ஆட்சி முறைகளை நெறிப்படுத்தும் குழுக்களில் உழுதொழில் புரியும் வேளாளர்களும் இருந்து வந்தனர். கருஊலத்தின் தலைமைப் பணியில் வேளாளர் இருவர் இருந்துவரும் வழக்கம் நெடுங்காலமாகவே ஒப்புக் கொள்ளப் பட்டது.

இங்குத் திருவிழாக்களில் உலாவரும் கோயிலுக்குத் தேவைப் படும் கூடாரங்கள், கோயில்யானைகளுக்குத் தேவைப்படும் அங்கிகள், மற்றும் கோயிலில் பயன்படுத்தப்படும் பல பொருள்கள் விற்பனைக்காக வைக்கப்படுகின்றன. இவையெல்லாம் இங்கு நடைபெறும் வணிகத்தின் சிறப்பையும் அதில் ஈடுபடும் மக்களின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துகின்றன. பெருவாரியான மக்களைக் கோயில் தொண்டுகளில் இக்கோயில் ஈடுபடுத்திவந்தது. அவர்களில் சிலர் தாமாகவே யாதொருஊதியமும்பெறாமலே முன் வந்தும்மற்றும்சிலர்ஊதியம்பெற்றும்பணிபுரிகின்றனர். இக்கோயில் மிகச் சிறந்த நிலையில் இருந்து வந்ததன் விளைவாக இத்தகைய பெருந்திரளான மக்கள் இங்கு வேலை வாய்ப்புப் பெற்றார்கள்.

கலைகள்

கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசை, நடனம் முதலிய கலைகள் திருவரங்கநாதர் கோயிலில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவை குறிப்பிட்ட ஒரு நூற்றாண்டையோ, குறிப்பிடப்பட்ட மன்னர் ஒருவர் காலத்தையோ சார்ந்திடாமல் சோழர், பாண்டியர், ஒய்சாளர், நாயக்கர் ஆகியோர் காலங்களுக் கன்றி முகமதியர் காலத்திற்கும் உரியவை.

பல்வேறு காலங்களில் அமைக்கப்பட்ட இக்கோயில் கட்டடங் களெல்லாம் கருங்கல்லால் கட்டப்பட்டவை. இக்கோயிலில் நான்குகால் மண்டபங்கள் பல. ஆயிரக்கால் மண்டபத்தையும், அரங்கவிலாச மண்டபத்தையும் ஓங்கி நிமிர்ந்த நிலையிலுள்ள சேஷராயர் மண்டபத்தையும் பெருந்தூண்கள் தாங்கி நிற்கின்றன. துரைபிரதக்ஷணம் எனப்படும் நீள் தொடர் மண்டபம் கட்டடக் கலையில் கவினுறு எல்லையைக் காட்டுகிறது. உயர்செல்வாக்குப் பெற்றவர் 'துரை' என்னும் பெயரில் குறிக்கப் பெறுகிறார். எல்லாச் செல்வங்களுக்கும் தலைவராகிய அரங்கநாதர் 'துரை' என்னும் முறையில் இம்மண்டபத்தின் வழியாக அவர் உலா வருவதை மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியோடு கண்டு களிக்கின் றார்கள், அரங்கவிலாச மண்டபத்தில் காணப்படும் சிற்பங் கள் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. பவித்ரோற்சவ மண்டபத்தில் இரண்டு தலைகளையுடைய ஒரு பறவை தன் இரு அலகுகளைக் கொண்டு இரு யானைகளையும் தம்மிரு கால்களைக் கொண்டு மற்றிரண்டு யானைகளையும் தூக்கி நிற்கும் சிற்பமும் கருடர் சந்நிதி எதிரில் படிகளில் அரைக்கால் மீட்டர் அளவில் இராமாயணக் காட்சிச்சிற்பங்களும் ஆரியபட்டாள் வாசற்படியில் நவக்கிரகங்களின் சிற்பங்களும், அதன் உட்புறத்தில் பொறிக்கப் பட்ட நட்சத்திரங்களின் சிற்பங்களும் சிற்பக்கலையின் நுட்பத்தை வியக்கத்தக்க வகையில் எடுத்துக்காட்டுகின்றன. வேணுகோபாலர் கோயில் சந்நிதியில் யானையின் சிற்பமும், வெண்ணெய் ஏந்திய கண்ணன் சிற்பமும் கைப்பெருவிரல் அளவில் அழகுறப் பொறிக் கப்பட்டுள்ளன. உள் ஆண்டாள் சந்நிதி உடையவர் சந்நிதி, கருடாழ்வார் சந்நிதி, தாயார் சந்நிதி ஆகிய சந்நிதிகளில் காணப் படும் ஓவியங்கள் தசாவதாரங்களையும், திருப்பாவைக் காட்சி களையும் நன்கு விளக்குகின்றன.

நான்முகன் கோபுரத்திலுள்ள ஒரு கல்வெட்டில் காம்போதி, ஆரபி, தேவகாந்தாரி, தேசியதோடி, சாரங்கராகம் ஆகியவற்றில் ஐந்து கீர்த்தனைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை தியாகராஜ

ரால் இயற்றப்பெற்றவை. ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களுக்குப் பொருத்தமான இசை வகுக்கப்பட்டது. ஆழ்வார்கள் பாடல்களுள், திருவாய்மொழி தவிர, மற்றவை பகல் பத்து எனப்படும் மார்கழி மாதம் ஏகாதசிக்கு முந்திய பத்து நாள்கள் ஓதப்பெறும். திருவாய்மொழி ஏகாதசியிலிருந்து தொடங்கும் இராப்பத்து எனப்படும் பத்து நாள்களில் ஓதப்பெறும். இக்காலங்களில் அரையர் தரும் விளக்க உரைகளும் அவர்கள் கைக்கொள்ளும் அபிநயங்களும் அவர்களது கலைத்திறனை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வகையில் இசைவளர்ச்சிக்குத் திருவரங்கநாதர் கோயில் ஆதரவளித்து வந்தது.

நாடகக் கலையும் நன்முறையில் பயன்படுத்தப்பட்டது. கல்வியறிவு பெறாதவர்களும் நன்மையடையுமாறு இராமயாணம், பாகவதம், பாரதம் ஆகியவற்றிலிருந்து சில பகுதிகள் நாடக வடிவில் நடித்துக் காட்டப்பெற்றன. தேவரடியார் என்போர் திருவரங்கத்தில் புகழோடு விளங்கி வந்தனர். நாடகக்கலைக்கும் இசைக்கலைக்கும் அவர்கள் வளம் தேடித் தந்தனர்.

பண்பாடு

திருவரங்கநாதர் கோயிலின் இடையீடில்லா வளர்ச்சியில் பங்கு கொண்டவர்களின் பண்பாடு பாராட்டத்தக்கது. ஆழ்வார்கள், ஆசாரியர்கள் மட்டுமல்லாமல் எளிய மக்களும் இக்கோயிலுக்கு அரிய பணிகள் புரிந்து வந்துள்ளனர். இக்கோயிலின் பாதுகாப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் தங்கள் இன்னுயிரையும் இழக்கத் துணிந்து அரும்பாடுபட்டவர்களின் பணிகள் கருத்தில் கொள்ளத்தக்கன. அருங்கலை வல்லுநராக விளங்கிய பிள்ளை லோகாச்சாரியார், திருவரங்கநாதர் திருவுருவச் சிலை எடுத்துச் சென்ற முகமதியர்களைத் தொடர்ந்து சென்று அம்முயற்சியிலே உயிர் துறந்தார். அரங்கநாதர் திருவுருவம் முகமதியர்களால் தில்லிக்கு எடுத்து சென்றபோது அதைப்பின்தொடர்ந்துசென்ற திருவரங்கத்துப் பெண்மணி அச்சிலை இருக்குமிடத்தை அறிந்து வந்து திருவரங்கம் கோயிலின் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க, அவர்கள் தில்லி மன்னரிடம் சென்று அத்திருவுருவத்தைப் பெற்றுவந்தார்கள். இவ்வாறு அத்திருவுருவம் மீட்கப்படுவதற்கு அருந்தொண்டாற்றிய அப்பெண்மணி 'பின்சென்றவல்லி' எனப் பாராட்டப்பெற்றார். பின்னர் அரங்கநாதர் திருவுருவம் பாதுகாப்புக்காகப் பலஇடங்களில் வைக்கப்பட்டுத் திருவரங்கத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், அத்திருவுருவம் உண்மையில் திருவரங்கத்தில் முன்பிருந்த திருவுருவமா என்பதில் ஐயம் ஏற்

பட்டது. இந்த ஐயத்தைத் தெளிவுபடுத்த 90 வயதுக்கு மேற்பட்ட வண்ணார் ஒருவர் வரவழைக்கப்பட்டார். முன்பு திருவரங்கநாதருக்கு சாத்தப்பட்ட ஆடைகளைத் துவைத்துக் கொடுத்து வந்தவர் இவர்; அந்தஆடைகளைத் துவைக்கு முன்னர் அவற்றை நீரில் நனைத்து அந்நீரைச் சிறிது பருகி அதன் சுவையை அறிந்திருந்தார். மீட்கப்பட்ட திருவரங்கநாதர் திருவுருவத்திற்கு அபிடேகம் செய்யப்பட்ட நீரைச் சுவைத்துப் பார்த்து, அதன் சுவை திருவரங்கநாதரின் உடை நீரின் சுவையோடு ஒத்திருந்ததன் அடிப்படையில் அத்திருவுருவம் அரங்கநாதரின் உண்மைத் திருவுருவமே என்று அவர் எடுத்துக் காட்டினார். அரங்கநாதர் உடைகளைத் துவைத்துக் கொடுத்த எளிய வண்ணாரிடமும் இவ்வரிய நினைவு பல்லாண்டுகளுக்கு அப்பாலும் நிலைத்துநின்றிருந்தது இத்தகைய அவர்அன்பு அரங்கநாதரிடம் கொண்ட தூய்மையான பேரன்பின் அடிப்படையில் அமைந்து இருந்தது.

திருவரங்கநாதர் கோயில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில்[51] அரிய பல செய்திகள் உள்ளன. இவ்வகையில் அரசுக் கல்வெட்டாராய்ச்சியாளர்கள் கூறுவது. ''இந்தியக்கலை கற்க விரும்புவோர்க்குக் கட்டடக்கலை வடிவில் திருவரங்கம் கோயில் சுவை மிக்க செய்திகள் பல அளிக்கின்றது. கருவறையைச் சுற்றி முழு நிறைவுடன் ஏழு பிராகாரங்களும் பரிவாரத் தெய்வங்களுக்குத் தனித்தனியாகவுள்ள உட்கோயில்களும் இக்கோயில் இருக்கின்றன. ஆதலால் இக்கோயில் உத்தமோவுத்தமக் கோயில்களின் வகுப்பினைச் சேர்ந்தது என்பதாகும்.[52]

15. நிர்வாகம்

முற்கால நிலை

1327–28 ஆம் ஆண்டில் நிகழ்ந்த முகமதியரின் இரண்டாம் படையெடுப்பிற்கு அஞ்சி வைணவப் பேரன்பர்கள் அழகிய மணவாளர் திருவுருவத்தைச் எடுத்துச் சென்று பல இடங்களில் மறைந்துப் பாதுகாத்து வந்தார்கள். விசயநகர் மன்னராகிய கம்பண்ணாவின் படைத்தலைவர் கோப்பண்ணர். இறுதியாக அரங்க

---

51. ஏ. 1891-45–40; 1891, 51-74
1918-341-345; 1930, 256-269
1937-1-102; 1938-81–129; 1938-81–129

52. ஏ. ஆர். இ; 1931-37 (மக். 61)

நாதர் கோயில் சிலையைச் செஞ்சிக்கு அருகிலுள்ள சிங்கவரத்திலிருந்து ஒரு குகைக் கோயிலில் நிலைப்படுத்தி அதனை வழிபட்டு வந்தார். பின்னர்க் கோப்பண்ணரின் உதவி கொண்டு கம்மண்ணர் முகமதியர்களை வென்றார். அக்காலத்தில் அடைந்த பேரிழப்புகளைக் கோப்பண்ணாவின் துணைவி திருவரங்கம் கங்காதேவி தாம் இயற்றிய மதுரை விஜயத்தில் விளக்கிக் காட்டியுள்ளார். 53

கம்பண்ணாவுக்குப் பின்னர் ஆட்சிக்குவந்த உறரிஉரராயரும் அவர் டதல்வர் விருப்பண்ண உடையாரும் இக்கோயிலுக்குப் பல அறக்கட்டளைகளை நிறுவினார்கள். பல திருப்பணிகளையும் மேற்கொண்டார்கள். இதன்பின்னர் ஏறத்தாழ90 தலைமுறைகளாக உத்தநம்பி பரம்பரையினரால் திருவரங்கம் கோயில் நிர்வாகம் நிகழ்த்தப் பெற்று வந்தது. இன்றும் அப்பரம்பரையினர் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்து வருகிறார்கள். அக்காலங்களில் பல கிராமங்கள் இக்கோயில் பராமரிப்புக்காக அளிக்கப்பட்டன. கி. பி. 1498-ஆம் ஆண்டில் மதுரையும் திருச்சிராப்பள்ளியும் விசுவநாத நாயக்கர்களின் ஆட்சியில் வந்தடைத்தன. இக்காலத்தில் இக்கோயிலுக்குப் பல நன்கொடைகள் கிடைத்தன. கி. பி. 1588-ஆம் ஆண்டில் சொக்கநாத நாயக்கரும் அவர் உடன்பிறந்தார்களும் பல மண்டபங்களையும், தாயார் சந்நிதிக் கோயில் படிகளையும் அமைத்தார்கள். பின்னர் முகமதியர், பிரெஞ்சு நாட்டினர் ஆகியோர்களின் படையெடுப்பிற்குத் திருவரங்கம் உட்பட்டது. அப்பொழுது திருவரங்கம் கோயிலார் படையெடுப்பாளர்களிடம் ஓர் ஏற்பாடு செய்து கொண்டார்கள். கி. பி. 1800-ஆம் ஆண்டில் இந்நிலப் பகுதி கிழக்கிந்தியக் கம்பெனியார் கைவசம் வந்து சேர்ந்தது. திருச்சிராப்பள்ளிப் பகுதி கிழக்கிந்தியக் கம்பெனியில் ஆட்சியாளராகயிருந்த ஜோசப்வேலஸின் அதிகாரத்தின் கீழ் வந்தது. அவர் தம் கீழ்ப்பணியாற்றிய கஜேந்திர ராயர், சேஷாசல ஐயர் ஆகியோர் உதவிகொண்டு, திருவரங்கம் கோயில் வருவாய்க்கேற்பச் செலவினங்களை வகுத்தார். கோயில் ஒழுகு நூல் இக்காலத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் வடகலையாரும், தென்கலையாரும் திருவரங்கம் கோயிலில் தங்கள் தங்களுக்கு இருந்துவந்த உரிமைகளைப் பற்றித் தகராறு செய்து கொண்டார்கள், ஆட்சியாளர் வேலஸ் இரு தரப்பினரையுப் வரவழைத்து அவர்கள் தெரிவித்த

53. எஸ். கே ஐயங்கார் – விஜயநகர வரலாற்றின் ஆதாரங்கள்

வாதங்களுக்குச் செவிசாய்த்துப் பின்னர் இறுதியில் கோயில் நிர்வாகத்தைத் தென்கலையாரிடம் ஒப்புவித்தார். இதில் தீர்வு காண்பதற்கு மிக்க உதவி புரிந்தவர் கோயில் பணியாளராக இருந்த வேலப்ப முதலி ஆவார்,

தற்காலத்து நிர்வாகம்

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குப் பின் கோயில் நிர்வாகம் சில காலம் தனிப்பட்ட குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. பின்னர் இந்துசமய அறநிலைய கழகத்தின் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. அப்போது அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள்.

பாஞ்சராத்ர ஆகமத்திற்கேற்பவும், இராமானுஜரால் வகுக்கப்பட்டுத் தொடர்ந்து நடைமுறையில் இருந்துவந்த நெறிமுறைகளுக்கு ஏற்பவும் இக்கோயிலில் பூசைகள் நடத்தப்பட வேண்டி இருப்பினும், இராமானுஜருக்குப் பின்னர் முகமதியர் ஆட்சிக் காலத்தில் நடைமுறைக்கு வந்த வழிபாட்டு முறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. பகல் பத்துத்திருமொழித் திருநாளில் முகமதிய இனத்தவர் அணியும் உலுங்கி போன்ற ஓர் ஆடை அரங்கநாதருக்கு அணிவிக்கப்படுகிறது. இந்த ஆடை அணிவிக்கப் பெற்ற நிலையில் பெருமாள் துலுக்க நாச்சியாருக்குக் காட்சியளிக்கிறார்.

இது தவிர, பெருமாளுக்குத் துணியில் நைவேத்தியம் படைப்பதும், சப்பாத்தி, வெண்ணெய், ரொட்டி முதலியவை அமுது செய்விப்பதும், முகமதியர் ஆட்சிக்காலத்தில் இருந்துவந்த வழிபாட்டு முறைகளின் அடிப்படையில் அமைந்தவை. இவை தற்காலத்திலும், பின்பற்றப்படுகின்றன. மற்றும் மங்கலப் பொருளாகக் கருதப்பெறுவது வெற்றிலை. இது பயனற்ற இலை என்னும் பொருள் தரும் வெறுமை இலை வெற்றிலை எனக் கருதாமல். இதனை வெற்றி தரும் இலையாகக் கருதி இதற்கு வெற்றிஇலை என்னும் பெயர் தந்து இதற்கு மதிப்புக்கொடுக்கும் வகையில் இதன் பின்புறம் சுண்ணாம்பு தடவாது இதன் முன்புறம் சுண்ணாம்பு தடவுவது முகமதியர் வழக்கமாகும். இவ் வழக்கமும் இக்கோயிலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற 1913–ஆம் ஆண்டு 19, 11. 15 –ஆம் நாளிட்ட ஏ. எஸ். 328/355 எண் தீர்ப்பில் வகுக்கப்பட்ட திட்டத்தின்படி இக்கோயில் நிர்வாகம் நடைபெற்று வருகிறது-

அதன்படி அறநிலையத்துறை துணை ஆணையர் பதவியில் நிர்வாக அலுவலர் ஒருவரும், தென்கலை, வடகலை, சைவம், மாத்துவம், தலத்தார் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த அறங்காவலர் ஐவரும் நிர்வாகம் செய்து வந்தார்கள்.

சொத்துகள் விபரம்: கோயிலின் சொத்துகள்

நன்செய் நிலங்கள்; ஏக்கர் 370.90 சென்ட்
புன்செய் நிலங்கள்: ஏக்கா 1642.20 சென்ட்

இந்நிலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம்

நன்செய் நிலம்:	பணமாக	ரூ.	39,634-50
	தானியமாக	ரூ.	2.560-92
புன்செய் நிலம்:	பணமாக	ரூ,	8442-02

கட்டடங்கள் வருமானம்

காலி மனைகள்: மொத்த எண்ணிக்கை: 142
ஆண்டு வாடகை: ரூ. 12,544-04
கடைகள், வீடுகள். கட்டடங்கள்: மொத்த எண்ணிகை : 59
ஆண்டு வாடகை: ரூ. 92,370-00

வரவு செலவினங்களின் விபரங்கள்:

செலவு: ரூ. 29,76,594/–

தேர்கள், வாகனங்கள் விவரங்கள்

தேர்கள் மூன்று உள்ளன; சித்திரை மாதத்தில் சித்திரைத் தேரோட்டம் விருப்பன் நினைவாக நடைபெறுகிறது, தை மாதத்தில் பூபதி தேரோட்டம் நடைபெற்று வருகிறது. பங்குனியில் விபீடணரால் செய்து கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் ஆதிபிரம்மோற்சவத் தேர் மூன்றாவது தேராகும்.

வாகனங்கள்

1. கருட வாகனம்
2. அனுமார் வாகனம்
3. யானை வாகனம்
4. யாழி வாகனம்
5. சிம்ம வாகனம்

6. குதிரை வாகனம்
7. ஆதிசேஷன் வாகனம்
8. கற்பக விருட்ச வாகனம்
9. ஒற்றைப் பிரபை வாகனம் (சூரியப் பிரபை)
10. அன்ன வாகனம்
11. இரட்டைப் பிரபை வாகனம் (சந்திரப் பிரபை)
12. பல்லக்கு

இவ்வாகனங்களில் தங்க முலாம் பூசப் பெற்றவையும், வெள்ளியில் செய்யப்பட்டவையாகவும் உள்ளன.

கோயிலின் நூலகம்

இக்கோயிலின் வட கிழக்குப் பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் 12 மீட்டர் நீளமும், 9 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் நூலகம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் நூல்களின் மொத்த எண்ணிக்கை 3800 ஆகும். இவற்றில் 1000 தமிழ் நூல்களும், 1000 ஆங்கில நூல்களும், 800 தெலுங்கு நூல்களும், 1000 வடமொழி நூல்களும் உள்ளன. நாள்தோறும் இக்கோயில் நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்வோர் எண்ணிக்கை நூறு. இந்நூலகம் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும் செயல்படுகிறது. மக்களை இங்கு ஈர்ப்பதற்காகச் சில நாள் செய்தித்தாள்களும் வார இதழ்கள், சில மாத இதழ்களும் வரவழைக்கப்படுகின்றன.

நகைகள்

சடையவர்மன் சுந்தரபாண்டியனால் அளிக்கப்பட்ட கிரீடங்கள், மற்ற அணிகலன்களைத் தவிர, பல்வேறு நகைகளைச் சேர. சோழ, பாண்டிய. ஒய்சாள, நாயக்க மன்னர்கள் இக்கோயிலுக்கு அளித்துள்ளார்கள், திருவரங்கப் பெருமாள் மார்கழித் திருவிழாவில் மோகினி வடிவில் உலாவரும்போது அவர் பாண்டியர் தலைப்பாகையும், கிரீடமும் அணிவிக்கப்பெறுகிறார். தற்போதுள்ள நகைகளில் பெரும்பான்மை நாயக்கர் மன்னர்களால் அளிக்கப் பெற்றவை, கிருஷ்ணப்ப நாயக்கரால் ஒரு கிரீடமும், வைரங்கள் பதிக்கப்பெற்ற அங்கியும் அளிக்கப் பெற்றன. வைரங்கள், பவளங்கள் முதலிய விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட அங்கியை இராணி மங்கம்மாள் அளித்தாள். முத்துக்கள் பதிக்கப்பெற்ற கிரீடத்தை விசயரங்கசொக்கநாதர் அளித்தார்.

கி. பி. 1678-ஆம் ஆண்டில் சொக்கநாத நாயக்கரின் உடன்பிறந்த முத்து அழகாத்திரி நாயக்கர் தங்கக் குடை ஒன்றையும், இரத்தின அங்கி போன்ற பல நகைகளையும் அளித்தார். கி. பி. 1875-ஆம் ஆண்டில், ஏழாம் எட்வர்டு மன்னர் வேல்ஸ் இளவரசராக இருந்த காலத்தில் இங்கு வந்தபோது இக்கோயிலுக்கு நன்கொடையாக ஒரு பொற்குவளையை அளித்தார்.

அருங்காட்சியகம்

இரண்டாம் தேவராயர். இராஜராஜமகாதேவர். மல்லிகார்ச்சுனர், வீர பிரதாபதேவர் மும்மடி நாயக்கர் முதலியோர் அளித்த நன்கொடைகளைத் தெரிவிக்கும் செப்பேடுகள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இராஜராஜ சோழரின் நாணயங்களும், மதுரைச் சுல்தானின் நாணயங்களும் போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், கிழக்கிந்தியக் கம்பெனி ஆகியோர்களின் நாணயங்களும் இங்கு உள்ளன, கிழக்கிந்தியக் கம்பெனியின் கி. பி. 1809—ஆம் ஆண்டு நாணயமும், ஜப்பான் நாட்டு 'யென்' நாணயமும் இங்குள்ளன. பண்டைக் காலத்து மன்னர்கள் பயன்படுத்திய வாள், ஈட்டி, முதலியவற்றையும் இங்குக் காணலாம்.

நாயக்க மன்னர் காலத்துத் தந்தப்பேழை ஒன்று பல சிற்பங்களைக் கொண்டுள்ளது பிட்சாடனர், அம்மன், காளி, சிவன் உமையம்மை ஆகியோர்களின் திருவுருவங்களைக் காட்டும் தந்தச் சிற்பங்கள் இங்குள்ளன. பஞ்சலோக விக்கிரங்களும்; செம்பு வெண்கல விக்கிரங்களும் இங்கு உள்ளன.

பண்டைக்காலத்து மிகப்பெரிய பூட்டுகள் ஒன்பது இங்கு உள்ளன. மிக அருமையான மாதிரியில் ஒரு பூட்டு மூன்று சாவிகளைக் கொண்டுள்ளது. நுழைவு கட்டணம் செலுத்தி மக்கள் இந்த அருங்காட்சியத்தின் பொருள்களை ஆர்வத்துடன் காண்கிறார்கள்.

விலங்குகள் பராமரிப்பு

இக்கோயிலில் யானைகள் இரண்டு பராமரிக்கப்படுகின்றன. ஒரு யானைக்கு ஒவ்வொரு நாளும் தீனி வகைக்காக 111 ரூபாய் செலவாகிறது.

ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 500 பசுக்களை இக்கோயிலுக்கு மக்கள் அளிக்கிறார்கள், இதற்கென அமைக்கப்பட்டுள்ள திறந்த

வெளி இடத்தில் இப்பசுக்களையும், கன்றுகளையும் பராமரிக்கிறார்கள். ஆண்டுதோறும் இப்பசுக்களின் ஏல விற்பனையில் ஒரு இலட்சம் ரூபாய் வருமானமாகக் கிடைக்கின்றன.

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் தரிசனம் பற்றிய விவரங்கள்

காலை 6–15 மணி முதல் 6-45 வரை, கட்டணம் செலுத்தி தரிசனம் பெறுதல்

காலை 6-45 மணி முதல் 7–45 வரை, தரும தரிசனம்

காலை 8-15 மணி முதல் 10-15 வரை, கட்டணம் செலுத்தி தரிசனம் பெறுதல்.

காலை 10–15 மணி முதல் 11-45 வரை, தரும தரிசனம்

பகல் 12-30 மணி முதல் 1–00 வரை, கட்டணம் செலுத்தித் தரிசனம் பெறுதல்

பகல் 1-00 மணி முதல் 2-00 வரை, ஓய்வு

மாலை 2–00 மணி முதல் 4-30 வரை, தரும தரிசனம்,

மாலை 4-30 மணி முதல் மாலை 6-00 வரை, கட்டணம் செலுத்தித் தரிசனம் பெறுதல்

மாலை 6-45 மணி முதல் இரவு 7–45 வரை, கட்டணம் செலுத்தித் தரிசனம் பெறுதல்

இரவு 7-45 மணி முதல் 9–00 வரை, தரும தரிசனம்

16. திருவரங்கம் அரங்கநாதர் கோயிலைப்பற்றிக் கூறும் நூல்கள்

1. பாஞ்சராத்ர ஆகமம் - பத்தாவது அத்தியாயம்
2. பிர்மாண்ட புராணம் - முதல் அத்தியாயம்
3. ஸ்ரீரங்க விமான மாகாத்மியம் - முதல்அத்தியாயம்
4. ஸ்ரீரங்க பிரஹ்ம வித்தை - முதல் அத்தியாயம்
5. கருட புராணம்
6. சேஷ தர்மம்
7. பாத்ம புராணம்
8. இராமயணம்
9. பரமேசுவர சம்ஹிதை
10. ஸ்ரீமத் பாகவதம்
11. சிலப்பதிகாரம்

12. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
13' பெருந்தேவனார் இயற்றிய பாரதம்
14. காளமேகப் புலவர் பாடல்கள்
15. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய திருவரங்கக் கலம்பம் (2) திருவரங்க உலா (3) திருவரங்க நாயகியார் ஊசல்
16. தியாகராயர் பாடல்கள்
17. இராமா சாஸ்திரிகள் இயற்றியவை
18. முத்துசாமி தீட்சிதர் இயற்றியவை

17. ஆழ்வார்கள் திருவரங்கப் பெருமாள் மீது அருளிய பாடல்களின் விவரங்கள்

நாலாயிரத்திவ்யப்ரபந்தம், மயிலைமாதவதாஸன் பதிப்பு பக்கம் கo கூறுவதாவது:-

ஆழ்வார்கள் திருவவதாரம் செய்த காரணம். ஸ்ரீய:பதியாய் ஸ்ரீவைகுண்ட நிகேதநனாய், ஸ்ரீமதநந்தமுகநித்யஸூரிபரிஷந்நிஷேவ்யமாணனாய், அவாப்தஸமஸ்த காமனாய், அகில மங்கள குணஸ்வரூபனான ஸர்வேஸ்வரன் நலமந்தமில்லதோர் நாடு, தெளிவாகிய சேண்விசும்பு, தெளிவிசும்பு திருநாடு என்று புகழப் படும் பரமபதத்திலே ஆநந்தைகார்ணவமான திருமாமணி மண்டபத்திலே சீரிய சிங்காசனத்திலே ஸர்வாபரணபூஷிதனாய், திவ்யாயுதங்களாலே தீப்யமாநனாய் உபயவிபூதி நிர்வாஹக நனாய் ஸ்ரீ, பூமி, நீளாதேவிகளோடே வீற்றிருந்து அநந்த கருட விஷ்வக்ஸேநப்ரமுகரான நித்ய ஸூரிகளையும் அந்தமில் பேரின்பத்து அடியாரையும் ஆநந்திப்பித்துக் கொண்டிருக்க, ஸம்ஸாரிகளும் நம்மையனுபவித்து மஹாஸம்பத்தைப் பெற்று வாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்க அவர்கள் அதையிழந்து இறகொடிந்த பக்ஷிகள்போலே யிருக்கிறபடியைக் கண்டு, பரமதயாளுவாய், பல்லுயிர்க்கும் ஆக்கை கொடுத்தளிக்க, ஸம்ஸாரிகள் மாயவன் தன்னை வணங்கவைத்த கரணமிவை என்பதை யுணராமல், ஸமித்தைதறிக்கக்கொடுத்த கத்தியைக்கொண்டு பசுவின்வாலைத் தறிப்பாரைப்போல் ஆக்கையின் வழியுழன்று விஷயப்ரவணராய்ப் பிறவியென்னும் பெருங்கடலிலே கரைகாணாது தடுமாறுவதைக் கண்டு, தொண்டே செய்தென்றுந் தொழுது வழியொழுகக் கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை நிலைகளும் அருள, அவற்றின்படி செய்யாதே, கொல்வன முதலா வல்லன முயலும் உயிர்களைக் குறும்பறுத்து ஆட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு. தானே ராமகிருஷ்ணாத்யவதாரமாக அவதரித்துப் படாதனப்பட்டுத் திருத்தப்பார்த்தவிடத்திலும், பல பல நாழஞ்சொல்லிக் கேட்பார் செவிசுடு கீழ்மை

வசவுகளோ வைது, அநமமான கதிகளிலே விழுகிறபடியைக்கண்டு மனிசரும் மற்றும்முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த தனியனாகை யாலே, விஸஜாதீயரான நமக்கு இது ஸாத்யமன்றென்று பார்த்து பார்வைவைத்து ம்ருகம் பிடிப்பாரைப்போலே, மநுஷ்ய ஸஜா தீயரான ஆழ்வார்களை இடுவித்து ஜகத்தைத் திருத்தியருள வேண்டுமென்று பார்த்தருளி, ஸ்ரீவத்ஸ கௌஸ்துப வைஜயந்தீ வநமாலைகளையும், ஸ்ரீ பூமி நீளைகளையும், ஸ்ரீ பஞ்சாயுதாழ் வார்களையும், அநந்த கருட விஷ்வக்ஸேந ப்ரப்ருதிகளையும் பார்த்து, ''நீங்கள்போய் லீலா விபூதியிலே நாநா வர்ணங்களிலும் அவதரித்து அகிலாத்மோத்தாரணம் பண்ணுங்கோள்'' என்று நிய மித்தருள, அவர்களும் தமிழ்நாட்டிலே பல வர்ணங்களிலே வந்த வதரிக்க, ஸர்வேஸ்வரனும் அவர்களுக்கு மயர்வற மதிநல மருளி அவர்கள் முகேந ஸர்வாதிகாரமான திவ்யப்ரபந்தகளை ப்ரகாசிப் பித்தருளினான்.''

பெரியாழ்வார்

பெரியாழ்வார் திருமொழி	—	2-7, 2-8
,,	—	2-9, 11
,,	—	3-3, 2
,,	—	4-8, 1-10
,,	—	4-9, 1-11
,,	—	4-10 1-10

குலசேகராழ்வார்

பெருமாள் திருமொழி		
,,	—	1-11
,,	—	3, 1-10
,,	—	8, 10

திருமழிசையாழ்வார்

திருச்சந்த விருத்தம்	—	21
,,	—	49-55
,,	—	93
,,	—	119
நான்முகன் திருவந்தாதி	—	3, 30, 36, 60

தொண்டரடிப் பொடியாழ்வார்

திருமாலை	—	1-45
திருப்பள்ளியெழுச்சி	—	1-10

திருப்பாணாழ்வார்

அமலனாதிபிரான்	—	1-10

திருமங்கையாழ்வார்

பெரியதிருமொழி	—	1-8-2
,,	—	3-7-6
,,	—	5-4 (1-10)
,,	—	5-5 (1-10)
,,	—	5-6 (1-10)
,,	—	5-7 (1-10)
,,	—	5-8 (1-10)
,,	—	6-6-9
,,	—	7-3-4
,,	—	8-2-7
,,	—	9-9-2
,,	—	11-3-7
,,	—	11-8-8
திருக்குறுந்தாண்டகம்	—	7, 12, 13, 19
திருநெடுந்தாண்டகம்	—	11, 12, 14, 18, 19, 22, 23, 24, 25
சிறிய திருமடல்	—	73
பெரிய திருமடல்	—	20

பொய்கையாழ்வார்

இயற்பா –1 ஆம் திருவந்தாதி — 6

பேயாழ்வார்

இயற்பா 3 ஆம் திருவந்தாதி - 61, 62

நம்மாழ்வார்

இயற்பா - திருவிருத்தம்	—	28
திருவாய்மொழி	—	7-2 (1-11)

ஆண்டாள்

நாச்சியார் திருமொழி — 11 (1-10)

ஆழ்வார் பாடல்களில் ஓதுவதற்காகத் தெரிந்தெடுக்கப் பெற்றவை

பெரியாழ்வார்

அரவணைப் பள்ளிகொள் அரங்கனைப் போற்றல்

துப்புடையாரையடைவதெல்லாம்
சோர்விடத்துத்துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்குநீயருள்செய்தமையால்
எய்ப்பென்னைவந்துநலியும்போதங்கேதும்
நானுன்னைநினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப்பள்ளியானே.

—*திருமொழி* 4—10—1

ஆண்டாள்

தாமுகக்கும் தம்கையில் சங்கமேபோலாவோ,
யாமுகக்குமெங்கையில் சங்கமுமேந்திழையீர்
தீமுகத்துநாகணைமேல் சேருந்திருவரங்கர்
ஆமுகத்தைநோக்காரால் அம்மனேயம்மனே.

—*நாச்சியார் திருமொழி* 11—1

குலசேகர ஆழ்வார்

மன்னுபுகழ்
கணபுரத்தொளிர் காகுத்தன் தாலாட்டு

தேவரையும்அசுரரையும் திசைகளையும் படைத்தவனே
யாவரும்வந்தடிவணங்க அரங்கநகர்த்துயின்றவனே
காவிரிநல்நதிபாயும் கணபுரத்தென்கருமணியே
ஏவரிவெஞ்சிலைவலவா இராகவனே தாலேலோ.

—பெருமாள் *திருமொழி* 8—10

திருமழிசையாழ்வார்

இயற்பா நான்முகன் திருவந்தாதி

அவனென்னையாளி யரங்கத்து, அரங்கில்
அவனென்னையெய்தாமல் காப்பான்—அவனென்ன
துள்ளத்துநின் றா னிருந்தான் கிடக்குமே
வெள்ளத் தரவணையின்மேல்.

தொண்டரடிப்பொடியாழ்வார்

பச்சைமாமலைபோல்மேனி பவளவாய்கமலசெங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தேயென்னும்
இச்சுவை தவிரயான்போ யிந்திர லோகமாளும்
அச்சுவைபெ றினும்வேண்டே னரங்கமா நகருளானே.
—திருமாலை—2

திருப்பாணாழ்வார்

அமலனாதிபிரா னடியார்க்கென்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே.
—அமலனாதிபிரான்—1

திருமங்கையாழ்வார்

அஷ்டக்ஷட்சரத்தின் பெருமை

வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும் பையில்பிறந்து
கூடினேன்கூடி யிளையவர்தம்மோடவர்
தரும் கலவியேகருதி
ஓடினேனோடியுய்வதோர் பொருளாலுணர்வெனும்
பெரும் பதந்தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாரயணாவென்னும்நாமம்.
—பெரிய திருமொழி முதற்பத்து—1

பொய்கையாழ்வார்

ஒன்றும்மறந்தறியே னோதநீர்வண்ணனை நான்
இன்றுமறப்பனோ வேழைகாள் – அன்று
கருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்கமேயான் திசை.
—முதற்றிருவந்தாதி—6

பூதத்தாழ்வார்

திறம்பிற்றினியறிந்தேன் தென்னரங்கத்தெந்தை
திறம்பாவழிசென்றார்க்கல்லால் – திறம்பாச்
செடிநரகைநீக்கித்தான் செல்வதன்முன் வானோர்
கடிநகர வாசற் கதவு.
— இரண்டாம் திருவந்தாதி - 88

பேயாழ்வார்

விண்ணகரம்வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
மண்ணகரம்மாமாட வேளுக்கை – மண்ணகத்த
தென்குடந்தைதேனார் திருவரங்கம்தென்கோட்டி
தன்குடங்கைநீரேற்றான் தாழ்வு.

—மூன்றாம் திருவந்தாதி 62

நம்மாழ்வார்

கங்குலும் பகலும்

கங்குலும்பகலும் கண்டுயிலறியாள்
கண்ணநீர் கைகளாலிறைக்கும்
சங்குசக்கரங்களென்று கைகூப்பும்
தாமரைக்கண்ணென்றே தளரும்
எங்ஙனேதரிக்கேனுன்னை விட்டென்னு
மிருநிலம் கைதுழாவிருக்கும்
செங்கயல்பாய் நீர்த்திருவரங்கத்தா
யிவள்திறத்தென் செய்கின்றாயே.

—திருவாய்மொழி 7 – 1

இணைப்பு

இராயகோபுரம் பற்றிய குறிப்பு

1. கோபுரத்தின் மொத்த உயரம் தரையிலிருந்து 235' 0"
2. கல்காரம் உயரம் 55' 6"
3. கல்காரத்திற்கு மேலுள்ள நிலைகள் 13
4. அடிமட்ட நீள அகலம் 166' X 97'
5. மேல்மட்ட நீள அகலம் 98' X 32'
6. மொத்த மதிப்பீட்டுத் தொகை
   (எ) கல்காரம் பலப்படுத்த ஆணையர்) ந. க. 10152/79/அ4 நாள் 12.6.79) 9 இலட்சம்
   (பி) மேல்நிலைகளுக்காக மதிப்பீடு ஆணையர் ந. க. 10152/79/அ4 நாள் 24.11.82 100 இலட்சம்

   மொத்தம் 109 இலட்சம்

7. செய்து முடிக்கப்பட்ட வேலையின் மதிப்பு: ரூ. 106 இலட்சம்

   கலசம், நன்கொடை

   திரு எஸ். ஆர். ரெங்கநாதன், திருமதி லட்சுமி அம்மாள் ரெங்கநாதன் கும்பகோணம் 4 இலட்சம்

   மொத்தத் தொகை 110 இலட்சம்

7. எ. கட்டி முடிக்கப்பட்டுள்ள உயரம் 235
8. இதுவரை கட்டி முடிக்கப்பட்ட வேலைக்குப் பயன் படுத்தப்பட்ட சிமிண்ட் அளவு 3000 டன்
9. ,, இரும்பு கம்பி அளவு 52 டன்
10. ,, செங்கல் அளவு 116 இலட்சம்
11. திருப்பணி தொடங்கிய தேதி 20-5-79
12. நாள்தோறும் பணி செய்வோர்களின் சராசரி எண்ணிக்கை 200
13. வேலையில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்
    1. எலட்ரிக் விஞ்ச் தென்புறம் 1, கீழ்புறம் 1, 3ஆம் நிலையில் 1. ஆக 3 — 3
    2. செங்கல் சீவும் இயந்திரம் — 2
    3. தண்ணீர் மேலே கொண்டு செல்லும் மின் மோட்டார் பம்பு — 3

1.	அ) கல்காரம் பலப்படுத்துதல் (முதல் நிலை	55' 6''	ஸ்ரீஅஹோபிலமடம் ஜீயர் சுவாமிகள்	25	இலட்சம்
	ஆ) முதல் நிலை	20'6''	,,		
2.	2–ஆம் நிலை	17'9''	ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள்	12	இலட்சம்
3.	3-ஆம் நிலை	15'6''	ஸ்ரீகாஞ்சி ஜகத் குரு சங்கராச்சாரியார் சுவாமிகள்	9	,,
4.	4–ஆம் நிலை	14'3'	ஆந்திர அரசுநிதி உதவி	9	‘‘
5.	5–ஆம் நிலை	13'0''	கர்நாடக அரசுநிதி உதவி	8	,,
6.	6–ஆம் நிலை	11'66'	ஸ்ரீஇளையராஜா இசையமைப்பாளர்	7	,,
7.	7-ஆம் நிலை	10'6''	திருச்சி ஸ்ரீரங்கம் பெருமக்கள்	6	,,
8.	8-ஆம் நிலை	9'9''	ஸ்ரீஜியர்சுவாமிகள்	6	,,
9.	9-ஆம் நிலை	8'6''	,,	5	,,
10.	10-ஆம் நிலை	7'9''	,,	4	,,
11.	11–ஆம் நிலை	7'3'	,,	3	,,
12.	12–ஆம் நிலை	6'3'	,,	3	,,
13,	13–ஆம் நிலை	37'0''	தமிழக அரசு நிதி உதவி	9	,,
14.	கலசங்கள் திரு எஸ். ஆர். ஜி. ரெங்கநாதன் செட்டியார் நன்கொடை			4	,,
	ஆக மொத்தம்			110	,.

13 கலசங்களின் மொத்த எடை 2340 கிலோ

கலசங்கள் ஒவ்வொன்றும் (ஏறத்தாழ) எடை 180 கிலோ

கலசங்கள் ஒவ்வொன்றின் உயரம் 10.5 அடி

,, அகலம் 5 அடி

கலசங்களின் மொத்த மதிப்பு ஏறத்தாழ 4.25 இலட்சம்

உபயம். திரு எஸ். ஆர். ஜி. ரெங்கநாதன் செட்டியார், திருமதி லட்சுமி அம்மாள் ரெங்கநாதன் கும்பகோணம்.

நா. சீனிவாசன் பி.ஏ பி.எல்.
துணை ஆணையர் /
செயல் அலுவலர்

திருவரங்கம்
9–3–1987

திருவரங்க நாதரைப் போற்றும்

பாடல்கள்

சிலப்பதிகாரம்

நீலமேக நெடும் பொற் குன்றத்துப்
பால் விரிந்த கலாது படிந்தது போல்
ஆயிரம் விரிந்தெழு தலை யுடையருந்திறற்
பாயிற்பள்ளி பலர் தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந்துருத்தி
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும் — இளங்கோ அடிகள்

திருவரங்கக் கலம்பகம்

ஆயிரம் முடி ஆயிரம் அயர்ந்து கைபரப்பி
மேலாயிரந் தலை நாகம் கவிப்பவிண் பூத்தகஞ்சம்
போலாயிரங் கண் வளரும் பிரான்பொன் அரங்கனென்றே
மாலாயிரங்க வல்லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே

தானே தனக்கொத்த தாள் தாமரைக்குச் சரண் புகுந்தாள்
ஆனென் இனியுன் அருளறியேன் என தாருயிரே
தேனே யென் தீவினைக்கோர் மருந்தே பெருந் தேவர்க்கெல்லாம்
கோனே அரங்கத்தரவணை மேற்பள்ளி கொண்டவனே

பாதியாய் அழகிய காலையரேனும்
பழி தொழிலும் இழிகுலமும் படைத்தோரேனும்
ஆதியாய் அரவணையாய்! என்பாராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிகளாவார்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோரேனும்
போதிலான்முகன் பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே

பதின்மர்தம் பாடல்

பாடுக

தேடுகின்றனை ஐம்பொறிகளுக் குகிரை
தேடியும் கிடையாமல்
வாடுகின்றனை வீடுசென் றென்றினி
மருவுவை மட நெஞ்சே
ஆடுகின்றிலை அழுகிலை தொழுகிலை
அரங்கனைக் கைகூப்பிப்
பாடுகின்றிலை நினைகிலை பதின்மர்தம்
பாடலின் படியாயே
— பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்

பமனி அச் [illegible] திருவான்மியூர், சென்னை – 41